# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

# KARKATHAR OPPURAVU


| மலர்–16, இதழ் – 2 | தைத் திங்கள் | விலை ரூ. 25/– | ஆண்டு சந்தா ரூ. 300/– | தமிழ் மாத இதழ் |
|---|---|---|---|---|
| Volume - 16, Issue - 2 | January 2025 | Price Rs. 25/- | Annual Subscription Rs. 300/- | Tamil Monthly |





"Delivered by India Post" www.indiapost.gov.in


PARVATHY
MULTISPECIALITY HOSPITAL
டே கேர் முழங்கால்
மாற்று அறுவை சிகிச்சை
2018 முதல்
காலை -8 மணி
குடும்பத்துடன் காலை உணவு
மதியம்-2 மணி
முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
மாலை -8 மணி
குடும்பத்துடன் இரவு உணவு
திருமதி கீதா தனது தினசரி
வழக்கத்தை தடங்கலின்றி தொடர்ந்தார்.
உங்களுக்கும் அதையே நாங்கள்
உறுதியளிக்கிறோம்.
12
மணி
நேரத்தில்
வீடு
திரும்பலாம்
டே கேர் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
குரோம்பேட்டை: 24, ஜிஎஸ்டி சாலை, குரோம்பேட்டை, சென்னை - 600 044
ஒரகடம்: 405/5A ஜமுனாபட்டு கிராமம், ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம் - 602 105
Website: www.parvathyhospital.com
மேலும் தகவல்களுக்கு: 044 2238 2248




Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

**108 Rooms & Suites | 03 Banquet Halls**

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com






**Thiruvasantham**
**PURE VEG**

**A Traditional South Indian Pure Vegetarian Restaurant**

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)


ஓட்டல்
சாரதாராமின்
36
வது
ஆண்டு விழா
15.11.2024
THANK YOU
for being with us
நன்றி!
செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு
– குறள் (86)
பொருள் : வந்த விருந்தினர்களை மகிழ்ச்சியுடன் உபசரித்து வழியனுப்பி, வரும் விருந்தினரை ஆவலோடு எதிர்நோக்கி இருப்பவன், தேவர்களுக்கும் நல் விருந்தினன் ஆவான்.
hotel saradharam
Saradharam's LAKSHMI VILAS HERITAGE HOTEL
villa SENTOSA AT PONDICHERRY
saradharam residency kattumannarkoil
Incredible India

DAC
DREAM ASCEND CONQUER

DAC MIDTOWN
SMART LIVING, ELEVATED

A Perfect Blend of Luxury & Convenience

NEXT TO **ZOHO & SRM UNIVERSITY**



TN/35/BUILDING/0383/2024 | www.rera.tn.gov.in | *T&C APPLY

**2&3 BHK** APARTMENTS | **₹69*L** ONWARDS
GUDUVANCHERY

100+ PROJECTS | 3M+ SQFT CONSTRUCTION | 2800+ HAPPY FAMILIES

Contact us today for more details:
**92 8001 8001**

# மணமகள் தேவை




**பெயர்** செல்வன் ச. முகுந்தன்
**படிப்பு** B.E. (Mechanical Engineering)
**வேலை** Senior Engineer -
Whirlpool of India Ltd. (Pondy)
Rs. 11.5 Lakhs/PA (CTC)
**பிறந்த தேதி** 17.04.1997
**உயரம்** 183cm
**நட்சத்திரம்** மகம்
**கோத்திரம்** திட்டத்துட
**பூர்வீகம்** பெண்ணாடம்
**தகப்பனார்** மு. சக்திவேல்
**தாயார்** சி. இன்பசரஸ்வதி
B.T. Asst, GHSS (தொரவளூர்)
**முகவரி** Plot 152, ஆனந்தம் தெரு,
அருணாச்சலம் நகர்,
விருத்தாசலம் - 606 001.
Cell : 80127 64841



**பெயர்** செல்வன் S. கார்த்தி
**படிப்பு** B.E. (ECE),
**வேலை** Privacy Specialist (Remote Work)
Solvation India Private Limited
Rs. 60,000/PM
**பிறந்த தேதி** 11.01.1995
**உயரம்** 178cm
**நட்சத்திரம்** கார்த்திகை 1ம் பாதம்
**கோத்திரம்** வேளா
**பூர்வீகம்** விருத்தாசலம்
**தகப்பனார்** P. சண்முகசுந்தரம் (Late)
**தாயார்** S. சங்கரி
(நாஞ்சலூர் சிதம்பரம்)
**முகவரி** 1/B, அன்பு நகர்,
சிதம்பரம் மெயின் ரோடு,
பூதாளூர்,
விருத்தாசலம் - 606 003.
Cell : 99946 63187, 93602 67299



**பெயர்** செல்வன் தி. ரமணன்
**படிப்பு** B.E. (Mech),
**வேலை** Sr. Engineer
(L&T, Jagadalpur, Chattisgarh)
Rs. 7.2 Lakhs/PA
**பிறந்த தேதி** 04.07.1996
**உயரம்** 168cm
**நட்சத்திரம்** அவிட்டம் 4ம் பாதம்
**கோத்திரம்** வில்வராய
**பூர்வீகம்** இராசேந்திரபட்டிணம்
**தகப்பனார்** கை. திருக்குமரேசன்
ஆசிரியர் (ஓய்வு)
**தாயார்** இரா. மாலதி (இறையூர்)
தலைமையாசிரியர், துவக்கப்பள்ளி,
கோனூர்
**முகவரி** 3/5E, சிவனகம், இறையூர்,
திட்டக்குடி (Tk.),
கடலூர் (Dt.)- 606 105.
Cell : 99761 98675, 81485 87061
E-mail : thirukumaresan62@gmail.com



**பெயர்** செல்வன் கா. வருண் நேரு
**படிப்பு** B.Tech (IT)
**வேலை** Specialist - Software Engineering
L T I Mindtree, Chennai
Rs. 14.5 Lakhs / PA
**பிறந்த தேதி** 22.11.1986
**உயரம்** 166 cm
**நட்சத்திரம்** பூசம்
**கோத்திரம்** எரவுட
**பூர்வீகம்** இறையூர் (பெண்ணாடம்)
**தகப்பனார்** மு. கார்த்திகேயன்
**தாயார்** கா. தனலட்சுமி
(செந்துறை)
**முகவரி** 174/2, கொத்தட்டை ரோடு,
இறையூர் – 606 111.
கடலூர் மாவட்டம்
Cell : 98844 91678
E-mail : dhanamkarthi76@gmail.com

# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் R. பாலஅபிஷேக் |
| படிப்பு | B.E. (Civil) |
| வேலை | Assistant Construction Manager<br>L & T (Currently Project<br>Going on Sivagangai)<br>Rs. 70,000/PM |
| பிறந்த தேதி | 19.06.1993 |
| உயரம் | 170cm |
| நட்சத்திரம் | ரோகிணி |
| கோத்திரம் | நன்னுட |
| பூர்வீகம் | இளந்தோப்பு |
| தகப்பனார் | A. ரவீந்திரன் (Late) (BDO Retd.) |
| தாயார் | உஷாராணி (நாங்கூர்) |
| முகவரி | 13/15, தியாகராஜர் நகர்,<br>சீர்காழி<br>Cell : 94433 32004, 95663 64359 |
| விருப்பம் | குடும்பபாங்கான பெண் |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் T.S. ரிஷிபிரகாஷ் |
| படிப்பு | B.E. (EEE), PGD (Data Science) |
| வேலை | Senior Software Engineer<br>Degreed Bangalore<br>Rs. 35 Lakhs/PA |
| பிறந்த தேதி | 02.12.1996 |
| உயரம் | 173cm |
| நட்சத்திரம் | மகம் |
| கோத்திரம் | தென்னவராய |
| பூர்வீகம் | செந்துறை |
| தகப்பனார் | T. சிவசங்கர், Manager<br>Union Bank of India |
| தாயார் | S. அபிராமி |
| முகவரி | 474B1, சிவம் தெரு, ஓம் சக்தி நகர்,<br>வேங்கிக்கால்,<br>திருவண்ணாமலை - 606 604.<br>Cell : 82482 33127, 86674 68016 |
| விருப்பம் | சென்னை/பெங்களூரில் பணிபுரியும் வரன். |



# மணமகன் / மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வி ச. பவதாரணி** |
| படிப்பு | M.A., B.Ed. (English) |
| பிறந்த தேதி | 14.03.1997 |
| உயரம் | 151cm |
| நட்சத்திரம் | கார்த்திகை (ரிஷபம்) |
| கோத்திரம் | களத்துட |
| பூர்வீகம் | மல்லாவரம் (மணல்மேடு) |
| தகப்பனார் | **S. சரவணன்,** M.A., B.Ed.,<br>Teacher Govt. Aid High School,<br>சிவகங்கை |
| தாயார் | **ச. சசிகலா**<br>(பாங்கல் - திருத்திறைப்பூண்டி) |
| முகவரி | 18, சொசைட்டி லே அவுட் மெயின்,<br>சிலம்புத் தெரு,<br>செந்தமிழ் நகர்,<br>சிவகங்கை - 630 562.<br>Cell : 97870 54034 / 95975 46608 |



| | |
|---|---|
| பெயர் | **செல்வி T. அபிராமி** |
| படிப்பு | B.E. Biomedical (PSG Tech., CBE) |
| வேலை | Procurement Specialist, Novartis,<br>Signapore |
| பிறந்த தேதி | 22.08.2000 |
| உயரம் | 160cm (5' - 3") |
| நட்சத்திரம் | கார்த்திகை |
| கோத்திரம் | காருட |
| பூர்வீகம் | கீழ்க்கடம்பூர் (காட்டுமன்னார்கோயில்) |
| தகப்பனார் | **R. திருநாவுக்கரசு**<br>General Manager, Alcon,<br>Singapore |
| தாயார் | **T. கவிதா**<br>மணக்குடி, மயிலாடுதுறை |
| முகவரி | Singapore Resident<br>Cell : +6592726746 - T. கவிதா<br>91 94432 30862 - M. செல்வி (பாட்டி) |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் P. தமிழ்குமரன்** |
| படிப்பு | B.E. (CSC), |
| வேலை | Technical Support Engineer,<br>Asus Technology Services,<br>Sindhadhripett, Chennai<br>Rs. 35,000/PM |
| பிறந்த தேதி | 17.05.1996 |
| உயரம் | 6' |
| நட்சத்திரம் | கார்த்திகை |
| கோத்திரம் | பேருட |
| பூர்வீகம் | திருவிளையாட்டம் |
| தகப்பனார் | **க. பொற்செழியன்,** H.M. Retired |
| தாயார் | **பொ. சரஸ்வதி** (இல்லதரசி) |
| முகவரி | 50, மகாதானத் தெரு,<br>திருவிடைமருதூர் - 612 104.<br>Cell : 89034 60186 |



**இதழின் உள்ளே....**




நிகழ்கால நிதர்சனம் ........ 14
சந்தர்ப்ப சாட்சியம்........17
சங்கப் பலகை ........ 24
உறவுகள்........27
சிறுவர் பகுதி........ 29–32
மணமகன் / மணமகள் தேவை ........38–41
"ஓம்" என்ற பிரணவ மந்திரத்தின் மகிமை........ 42
முருகனும் முத்தமிழும்........45
சங்க நிகழ்வுகள் ........ 49



**கார்காத்தார் ஒப்புரவு**
**கார்காத்தார் சங்கம் (சென்னை)**
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**
**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533



கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.


## ஏடு இட்டோர் இயல்



இனிய சொந்தங்களுக்கு 2025–ஆம் ஆண்டின் புத்தாண்டு வாழ்த்துக்களையும், பொங்கல் நல் வாழ்த்துக்களையும் கூறிக் கொள்வதில், கார்காத்தார் ஒப்புரவும், சென்னை கார்காத்தார் சங்கமும் மிகவும் மகிழ்ச்சி அடைகிறது. இந்த புத்தாண்டு இப்பூவுலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் ஓர் நல்லாண்டாக இருக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து, அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள் கூறிக்கொள்கிறோம். நமது உழவர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை மிகவும் சீரும், சிறப்புமாக கொண்டாடி இருப்பீர்கள் என நம்புகிறோம்.

இம்மாதம் இரண்டு ஆளுமைகளை இழந்துள்ளோம். முதலில் இசை உலகின் தபலா சக்கரவர்த்தியாக விளங்கிய ஜாகிர் ஹுசேன் தனது 73–ம் வயதில் டிசம்பர் 15–ம் தேதி சான்பிரான்ஸிஸ் கோவிலில் மரணமெய்தினார். இவர் பத்மஸ்ரீ, பத்மபூஷண், பத்மவிபூஷண் பட்டங்களுடன், Grammy Award டினை நான்கு முறை வென்று, நமது பாரதத்திற்குப் பெருமை சேர்த்தவர்.

அடுத்தவர் நமது முன்னாள் பாரதப் பிரதமர் உயர்திரு. மன்மோகன் சிங் அவர்கள் டிசம்பர் 26– ஆம் தேதி இரவு காலமானார். எளிமையான பின்னணியில் இருந்து பொருளாதார நிபுணராக உயர்ந்து, நாட்டின் பொருளாதாரத்தை வலுவாக்கியவர். இந்திய பொருளாதார புரட்சியின் 'கிங்' மன்மோகன் சிங் இவர் தனது 92–வது வயதில் இறைவனடி சேர்ந்தார். மத்திய அரசு ஏழு நாட்கள் துக்கம் அறிவித்துள்ளது. 1993–ல் சிறந்த நிதியமைச்சருக்கான விருதுகளான ஆசியாமணி, யூரோமணி விருதுகளைப் பெற்றுள்ளார். 1987–ல் பத்மவிபூஷண் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. 2024 ஏப்ரல் 3 ஆம் தேதிதான் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். நம் நாட்டில் 100 நாள் வேலைத் திட்டத்தை இவர் தான் கொண்டு வந்து, ஏழை மக்களுக்கு உதவினார்.

இந்த இருவரின் ஆன்மாவும் சாந்தி அடைய பிரார்த்திப்போம். விளையாட்டரங்கில், சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக ரவிச்சந்திரன் அஷ்வின் அறிவித்துள்ளார். அது மனதுக்கு வருத்தத்தை அளிப்பினும், இவ்வளவு ஆண்டுக்காலம் நம்மை மகிழ்வித்த அவரை வாழ்த்துவோம்.

அடுத்ததாக தமிழகத்துக்குப் பெருமைத் தேடித்தந்த குகேஷ் ரஜினிகாந்த் அவர்களை வாழ்த்துவதில் மிகவும் பெருமை கொள்கிறோம். தனது 18–ஆம் வயதில் உலகச் சதுரங்க வாகையாளராக குகேஷ் தொம்மராஜு ரஜினிகாந்த் முடிசூடியுள்ளார். இவர் தான் படிக்கும் வேலம்மாள் வித்யாலயாவுக்கும், அதன் ஆசிரியப் பெருமக்களுக்கும், தனது பெற்றோர்களுக்கும், தமிழகத்திற்கும், இந்திய நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளார். அவரை நமது வாசகர்களின் சார்பில் வாழ்த்துவதில், கார்காத்தார் ஒப்புரவும், சென்னை கார்காத்தார் சங்கமும் பெருமை கொள்கிறது என்பதில் ஐயமில்லை.

இந்த புத்தாண்டிலும் நமது வீரர்கள், வீராங்கனைகள், விஞ்ஞானிகள் மற்றும் பலதுறைகளிலும் நமது தேசியக் கொடி பட்டொளி வீசி பறக்க வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல அந்த இறைவன் அருள்புரிய வேண்டுகிறோம்.

அனைவருக்கும், மீண்டும் ஒரு முறை புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

வாழ்க வளமுடன்!

## 'ஓங்கி ஒலித்த குரல் ஓய்ந்தது

ஒரு சில மாதங்களாய் உடல் நலம் குன்றியிருந்த செம்பொன் நகர சங்க மேனாள் தலைவரும், இந்நாள் அமைப்புச் செயலாளரும், மாநில சங்க மேனாள் மண்டலச் செயலாளரும், நகர, ஒன்றிய, மாநில வளர்ச்சிக்கு ஒப்பற்ற பணிகளை ஆற்றியவரும், ஒப்புரவு வளர்ச்சிக்காக ஒன்றிய அளவில் சந்தாதாரர்களை சேர்த்தவரும், பகுதி மக்களால் 'செகரட்டரி' என அன்போடு அழைக்கப்பெற்றவருமான கோ. வடிவேல் பிள்ளை அவர்கள் **26–11–2024** அன்று இயற்கையடைந்தார்கள் என்பதை கார்காத்த வேளாளர்ச் சங்கக் கட்டமைப்பு செம்பொன் நகரம் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறது.

### * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

- செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.
- E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்

**தொகை செலுத்தியபின்** Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) **இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு"** Whatsapp No. 8248449204**க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள்** update **செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

- செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

அனைத்து தபால்களையும் **கார்காத்தார் ஒப்புரவு,**
*எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.*
*என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.*

*– கார்காத்தார் ஒப்புரவு*

## தேர்வுக்கு தயாராக செய்ய வேண்டியது.

முதலில் பெற்றோர்கள் செய்ய வேண்டியவைகளைப் பார்ப்போம். அரசுத் தேர்வினை எதிர்நோக்கி இருக்கும் மாணவர்களை கண்ணும், கருத்துமாக பார்த்துக் கொள்வது அவசியம். பெற்றோர்களும் சிறிது தாங்கள் பார்க்கும் T.V. சீரியல்களைத்தவிர்த்து,குழந்தைகள்மிகவும்களைத்து விடாமல் அவ்வப்போது புரதம் நிறைந்த உணவுகளான சுண்டல் போன்றவைகளை அவர்கள் உண்ணக் கொடுப்பது நல்லது. எண்ணெயில் பொரித்தெடுத்த பலகாரங்களையோ, ஹோட்டல் உணவு, Fast Food போன்ற வகைளை இரண்டு மாதங்களுக்கு தவிர்த்து விடுவது நன்மை பயக்கும்.

மாணவர்களே நீங்கள், சமூகவலைத் தளங்களில் செலவிடும் நேரத்தைக் குறைத்து, நீண்ட நேரம்படிப்பதுபோரடித்தால்,நடைப்பயிற்சி,சைக்கிளிங் போன்ற உடற்பயிற்சிகளில் ஈடுபடுங்கள். படிக்க ஆரம்பிக்கும் முன் சில நிமிடத்துளிகள் முச்சுப்பயிற்சி செய்தால், மனம் ஒருமைப்பட்டு, போடும் கணக்கும் மனதில் பதியும். சோர்வாக உணரும் போது சிறிது நேரம் எதைபற்றியும் யோசிக்காமல், அமைதியாக ஓய்வு எடுங்கள். (Not more than 10 minutes). நீங்கள் படிக்கும் அறையும், பேஜையும் சுத்தமாக இருந்தால் படிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும். நிமிர்ந்து உட்கார்ந்து வெளிச்சம் நன்கு வருமிடமாகவும், சப்தமில்லாத இடமாகவும் தேர்ந்தெடுத்து படியுங்கள். தேவையான பொருட்களை புத்தகங்கள், எழுதுகோல், நோட்புக், தண்ணீர் போன்றவைகளை அருகில் எடுத்து வைத்த பின் படிக்க அமருங்கள்.

படித்தலில் முக்கியமான பகுதி நேர மேலாண்மை; எந்த நேரத்தில் உற்சாகத்துடன் படிக்க முடியுமோ அந்த நேரத்தினை தேர்ந்தெடுத்து படிக்கவும். சிலருக்கு இரவில் வெகு நேரம் படிக்க இயலும்; சிலருக்கு அதிகாலையில் படிப்பது பிடிக்கும். உங்களுக்கேற்ற நேரத்தைத் தேர்தெடுத்து படிக்கவும். தேர்வுக்கு ஒரு மாதம் முன்பாக, time table போட்டுக் கொண்டு, ஒவ்வொரு பாடத்திலும் Chapters எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு அட்டவணையைத் தயாரிக்கவும். இம்முறை தேர்வு ஆரம்பிப்பதற்கு ஒரு 20 நாட்கள் முன்பே அனைத்துப் பாடங்களையும் முடித்து விடுவது போல அமைய வேண்டும். அதன் பின் கடைசித் தேர்விலிருந்து ஆரம்பித்து, ஒரு நாளைக்கு இரண்டு subject கள் என revision செய்யவும்.ஒரே Subject என்றால் மிகவும் களைப்படைந்துவிடுவீர்கள். ஆங்கிலம், அறிவியலுடன் தினமும் கணக்குப் பாடம் செய்வது அவசியம், மிகவும் களைப்படையின், கண்களின் மேல் ஓர் ஈரத்துணியை போட்டுக் கொண்டால் கண்களுக்குப் புத்துணர்ச்சி கிடைக்கும். சிறுதுளி பெரு வெள்ளம் என்பது போல சிற்சில விஷயங்களை ஒழுங்குபடுத்தி ஊன்றிப் படித்தாலே, எளிதாக தேர்வில் வெற்றி பெறுவதுடன், நல்ல மதிப்பெண்களும் பெறலாம்.

அனைத்து மாணவர்களுக்கும் வாழ்த்துக்கள்!

– திருமதி. வனஜா இளங்கோவன்.


## "கார்காத்தார் ஒப்புரவு" கட்டண விபரங்கள்

| | | |
|---|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. | 300/– |
| ஆயுள் சந்தா (12 ஆண்டுகளுக்கு மட்டும்) | ரூ. | 2000/– |
| கலர் (¼ ) கால் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்) | ரூ. | 1500/– |
| கலர் (½) அரைப்பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்) | ரூ. | 3000/– |
| மணமகன் மணமகள் தேவை கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு) | ரூ. | 500/– |
| கருப்பு வெள்ளை (¼) கால் பக்கம் | ரூ. | 750/– |
| கருப்பு வெள்ளை (½) அரைப்பக்கம் | ரூ. | 1500/– |
| கருப்பு வெள்ளை முழுப்பக்கம் | ரூ. | 3000/– |

**ஜனவரி 2025 முதல்**

| | |
|---|---|
| **கலர் முழு பக்கம்** | **ரூ. 7000/-** |
| **முன் அட்டை உட்புறம்** | **ரூ. 8000/-** |
| **பின் அட்டை உட்புறம்** | **ரூ. 8000/-** |
| **பின் அட்டை வெளிப்புறம்** | **ரூ.10,000/-** |

## வெற்றியின் ரகசியம் !

வாழ்க்கை என்றால் போராட்டம். நாம் ஒவ்வொரு நாளும் கடந்து வரும் வாழ்நாளை ஒரு பெரிய சமுத்திரத்திற்கு ஒப்பிடலாம். எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும், ஏதாவது ஒரு ரூபத்தில் பிரச்சனை இருக்கத்தான் செய்கிறது. பிரச்சனையே இல்லாத வாழ்க்கை என்பது எட்டா கனி. எனவே ஒவ்வொரு மனிதனும் எதிர்நீச்சல் போட்டுத்தான் வாழ்க்கை என்ற கடலை கடந்து கரை சேர வேண்டியுள்ளது. நாம் கொஞ்சம் சிந்தித்து பார்த்தால் நிறைய பிரச்சனைகளையும், போராட்டங்களையும் கடந்து மீண்டு வருவதில்தான் உண்மையான மகிழ்ச்சியும், சந்தோஷமும், பெருமையும் உண்டு என்பது புரியும். ஐந்தும் (அஞ்சும்) மூன்றும் (மூனும்) அடுக்காக இருந்து, எந்த பிரச்சனையுமே இல்லாத வாழ்க்கையில் ஒரு பிடிப்போ, சந்தோஷமோ இருக்காது. பிறவியின் பயனை துய்த்த திருப்தி இருக்க வேண்டுமெனில், வாழ்க்கை என்ற களத்தில் நல்லது, கெட்டது என அனைத்தையும் சந்தித்து, பிரச்சனையிலிருந்து மீண்டுவர நிறைய போராடி, வெற்றி பெறுவதே நாம் வாழ்ந்ததற்கான மன நிறைவை தரும்.

நாணயம், நேர்மை, ஆர்வம் ஆகிய உணர்வுகளை மனதில் கொண்டு ஓர் இலட்சிய நோக்கத்தோடு, சாதிக்க வேண்டும் என்ற வெறித்தனமான ஆர்வத்தோடு செயலில் இறங்கினால் வெற்றி நிச்சயம். தொண்டு செய்வதில் முழுமையான ஈடுபாடு இருக்க வேண்டும். நல் உள்ளம் கொண்ட நண்பர்களின் கூட்டத்தை இணைக்க வேண்டும். எடுத்துக்கொண்ட பணியை வெற்றிகரமாக முடிக்க வேண்டுமென்ற இலட்சியத்தோடு செயல்பட்டால் வெற்றி நிச்சயம். ''ஒரு வேலையை அல்லது செயலை முடிக்க வேண்டும் என்று நினைத்து, அதனை நம் மனதில் நிறுத்துகிறோம். அதுவே தனது வாழ்நாளின் லட்சியம் என்ற எண்ணத்தோடு, மூளை, தசைகள், நரம்புகள் என உடலின் ஒவ்வொரு பகுதியிலும், அதனை பற்றிய சிந்தனை ஓட வேண்டும். அந்த நிலையில் மற்ற எந்த பிரச்சனையையும் சிந்திக்க முடியாது. அதுதான் வெற்றிக்கு வழி'' என்றார் வீரத்துறவி விவேகானந்தர். தூங்கும் போது கூட கையில் எடுத்த செயலை முடிக்க வேண்டும் என்ற கனவுதான் வரவேண்டும். ''கனவுகள் எண்ணங்களை உண்டாக்கும். எண்ணங்கள் செயல்களை உருவாக்கும்'' என்றார் இந்தியத்தலைவர் அப்துல்கலாம் அவர்கள். ஆம் செயல்கள்தான் வெற்றியைத் தருகின்றன. எனவே வெற்றியைத் தருகின்ற கனவுகளைக் காதலியுங்கள்.

''கனவு மெய்ப்படும்'' என்றார் மகாகவி பாரதி. கற்பனை செய்த வாழ்க்கையை வாழ யாரெல்லாம் முயற்சிக்கிறார்களோ அவர்களைத் தேடி வெற்றி வரும்'' என்றார் தோரே என்ற அறிஞர். கனவு என்னும் விதைகளை விதைத்தவர்களே 'சாதனை' என்னும் பயிரை அறுவடை செய்கிறார்கள். உலகம் ஒரு வாடகை வீடு. இவ்வுலகில் நாம் செய்கிற சேவைதான் உலகத்திற்கு தரும் வாடகை. அன்னை தெரேசாவின் சேவை மனப்பான்மை தான் அவரை அகிலம் முழுக்க அறியச்செய்தது. இது அவரின் சேவைக்குக் கிடைத்த வெற்றி. நுண்ணறிவை விட வாழ்க்கையின் அனுபவப் பாடமே மகத்தான பாடம். நாம் பெறும் ஒவ்வொரு அனுபவத்திலிருந்தும் ஏதாவது ஒன்றைக் கற்றுக் கொண்டிருக்கிறோம். கீழே விழுதல் கூட நமக்கு ஒரு பாடம். பத்தாவது முறை கீழை விழுந்தவனை பூமி முத்தமிட்டுச் சொன்னது ''நீ ஒன்பது முறை விழுந்து எழுந்தவன் அல்லவா! என்று. ஆம் நாம் பெறும் ஒவ்வொரு வீழ்ச்சியும் எழுச்சியோடு எழுந்து நிமிர்ந்து நிற்கத்தான் என்ற புரிதல் வேண்டும். வெற்றியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். தோல்வியிடமிருந்து கற்றுக்கொள்ளலாம். சோதனைகளை எதிர்கொள்வதில்தான் மனிதனின் சக்தி வெளிப்படுகிறது. ஒவ்வொரு செயலின் பின்னாலும் இழப்புகள் இருக்கும். தோல்விகள் இருக்கும், ஏமாற்றங்கள் இருக்கும். வெற்றி என்ற இலக்கை நோக்கிய பயணத்தில் குறுக்கிடும் இடையூறுகளுக்கு சோர்வடையாமல், அஞ்சாமல், முன் வைத்த காலை பின் வைக்காமல் முன்னேறிச் சென்றுக் கொண்டே இருக்க வேண்டும். வெல்லும் வரை வேகம் வேண்டும்.

வரலாற்றில் நிகழ்ந்த ஒரு கதை. மௌரிய பேரரசர் சந்திர குப்தர், இந்திய வரலாற்றில் குறிப்பிடத் தக்கவர். அவரின் குரு சாணக்கியர். மன்னாளும் மன்னர் எப்படி ஆட்சி செய்ய வேண்டும் என்பதை 'அர்த்த சாஸ்திரம்' மூலம் உலகறியச் செய்தவர். அதனால் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டார். அரசவை கூடிய ஒரு நாள் சாணக்கியர் எழுந்து ''மன்னா, மக்களில் பலர் ஏழ்மை நிலையில் கடுங்குளிரால் வாடுகிறார்கள். அவர்களுக்கு அரசு செலவில் கம்பளிப் போர்வை கொடுத்து உதவ வேண்டும்'', என்றார். உடனே அரசரும் ''தங்களின் கோரிக்கையை ஏற்கிறேன்.

அந்தப் பொறுப்பை தங்களிடமே ஒப்படைக்கிறேன்'' என்றார். அதன்படியே ஏழைகளுககு வழங்க வேண்டி கம்பளிப் போர்வைகளை சாணக்கியர் வீட்டுக்கு மன்னர் அனுப்பிவைத்தார். இந்த விஷயம் அந்த ஊர் கொள்ளையர்களுக்குத் தெரிய வந்தது. கம்பளிப் போர்வையை திருடி விற்றால் பல ஆயிரம் பொற்காசுகள் கிடைக்கும் என்று நினைத்து அது குறித்து திட்டமிட்டார்கள். குளிர் காலம், நள்ளிரவு ... சாணக்கியர் வீட்டிற்கு கொள்ளையர்கள் சென்றனர். கம்பளிப் போர்வைகள் விதவிதமாக மலை போல் கிடந்தன. ஆனால் சற்று தூரத்தில் ஒரு கிழிந்த கம்பளியைப் போர்த்திக் கொண்டு சாணக்கியரும், அவரது தாயாரும் படுத்திருந்தனர். இதை பார்த்த திருடர்கள் திருடுவதையும் மறந்து, தூங்கிக் கொண்டிருந்த சாணக்கியரை எழுப்பினர். கண் விழித்த சாணக்கியர் திகைத்து பதறி எழுந்தார். எதிரே இருந்த திருடர்களில் ஒருவன் ''ஐயா, நாங்கள் உங்கள் வீட்டில் உள்ள கம்பளிப் போர்வையைத் திருட வந்தோம். இவ்வளவு புதிய போர்வைகள் இருக்கும் போது நீங்களும், உங்கள் தாயாரும் கிழிந்த போன பழைய கம்பளியைப் போர்த்திக் கொண்டு தூங்குகின்றீர்களே. இவற்றில் இரண்டை எடுத்துக் கொள்ளக் கூடாதா ?'' என்றான். அதற்கு சாணக்கியர் ''அவை எங்களுக்குச் சொந்தமானவை அல்ல. ஏழை எளிய குடிமக்களுக்கு வழங்கப்பட இருக்கும் அரசாங்க பொருள்கள். அதை எப்படி என் உபயோகத்திற்கும் பயன்படுத்த முடியும் ? மன்னர் என் மீது வைத்துள்ள நம்பிக்கை என்னாவது ? என்றார். திருடர்கள் சாணக்கியரின் கால்களில் விழுந்து வணங்கி, ''எங்களை மன்னித்து விடுங்கள் இனி பிறருக்குச் சொந்தமான பொருள்களை திருடுவதில்லை'' என்று சத்தியம் செய்தார்கள்.

பிறருக்கு தொண்டு செய்யக் கூடிய தூய வாழ்க்கையை வாழ்ந்தவர் சாணக்கியர். அந்தத் தூய வாழ்க்கையின் மூலம் மூடிய கதவுகளையும் திறக்கச் செய்யலாம். அந்தக் கதவுகள்தான் வெற்றியின் ரகசியம். இக் கதை கடந்த கால வரலாற்றுக் கதை. இதைப் போலவே இக்காலத்தில் உண்மை, உழைப்பு, உயர்வு என்ற தாரக மந்திரத்தை சிரம் ஏற்று சாதனை புரிந்து வெற்றிப் பெற்ற உண்மைக் கதை ஒன்றை சொல்லித்தான் ஆக வேண்டும். குமராட்சி ஒன்றிய கார்காத்தார் சங்கத்தில் என்னை பொருளாளராக தெரிவு செய்தனர். பதவி ஏற்பு விழாவில் பதவி பிரமாணம் செய்த போது, நமக்கு அருகாமையிலுள்ள சீர்காழி, மயிலாடுதுறை, கடலூர் போன்ற ஊர்களில் சங்கத்திற்கென கட்டிடம் கட்டி, நம்மவர் விழாக்கள் சங்கக் கட்டிடத்தில் நடத்துகிறார்கள். ஆனால் அவர்களை விட, நம்மின மக்கள் அதிகம் வாழும் பகுதியான சிதம்பரத்தில் நமக்கென சொந்தக் கட்டிடம் இல்லை. இது எனக்கு பெரிய ஆதங்கமாக உள்ளது. இன்னும் மூன்று ஆண்டுக்குள் சிதம்பரம் பகுதியில் 'கார்காத்தார் சங்கக் கட்டிடம்' கட்டி முடிக்க வேண்டும். அதற்கான முயற்சியில் நாம் அனைவரும் இணைந்து செயல்பட்டு கட்டிடத்தை கட்டி முடிப்போம் என்று கூறினேன். அன்று முதல் பொறுப்பாளர்களும், மற்றும் சங்க உறுப்பினர்கள் சிலரும் சேர்ந்து நிதி வசூல் செய்ய ஆரம்பித்தோம். அதனின் முதல் முயற்சியாக கார்குல வள்ளல் திரு. வெங்கடேசம் பிள்ளை அவர்களை சந்தித்துநிதி உதவிகேட்டோம். ஒரு நல்ல செயலுக்காக நிதிகேட்டு வந்துள்ளீர்கள். பணம் தருகிறேன் என்று சொன்னார்கள். ஐயாவிடம் ஆசீர்வாதம் பெற்று, ஒரு கணிசமான தொகையை நிதியாக பெற்றேன். சோர்ந்து விடாமல் முயற்சியோடு முழுமையாக வசூல் செய்து கட்டிடத்தை கட்டி முடியுங்கள் என்று சொல்லி வாழ்த்தினார்கள். அதனைத் தொடர்ந்து குமராட்சி ஒன்றியத்தில் அடங்கிய கிராமங்கள் தோறும் வீடு வீடாகச் சென்று நிதி வசூல் செய்தோம்.

சிதம்பரம் பகுதி மக்களையும் அணுகி நிதி பெற்றோம். தவிர வெளியூர்களில் உள்ள உறவினர்கள், மற்றும்தெரிந்த அன்பர்களிடமும்நிதிகேட்டுபெற்றோம். இவ்வாறாக எல்லாருடைய ஒத்துழைப்பால் கட்டிடம் ஒன்று வாங்கி அதனை சீரமைத்து புதுக்கட்டிடமாக கட்டி முடித்தோம். ''குமராட்சி ஒன்றிய கார்காத்தார் சங்க கட்டிடம்'' என்ற பெயர் பலகை வைத்தோம். கட்டிடத்திற்கு ''திரு. வெங்கடேசம் பிள்ளை அரங்கம் என்று பெயர் வைத்தோம். ஐயா அவர்களின் சார்பாக டைரக்டர் திரு. செந்தில்குமார், இராதா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சென்னை. அவர்களின் திருக்கரங்களால், கட்டிட திறப்பு விழா''சிறப்பாக நடந்தேறியது. இந்த வெற்றியின் ரகசியம் சங்கப் பொறுப்பாளர்களின் ஒற்றுமை, உழைப்பு, நேர்மை மட்டுமல்ல, நம்மின மக்களின் பேராதரவும் கிடைத்ததால் சாதிக்க முடிந்தது.

நன்றியுடன்

– இரா. திலகம்,

வையூர்.

**9789412635**

## நிகழ்கால நிதர்சனம்

Dr. D. Kalyanakumar, Trichy-18.

அமைதியான வெற்றிகரமான வாழ்க்கைக்கு வாழ்க்கை நெறிகளில் மிக முக்கியமான ஒன்று நிகழ்காலத்தில் வாழ்க என்பது தான்! இதே நெறியைத் தான் இந்து மதமும், வலியுறுத்தி வருகிறது. பகவான் ரமண மஹரிஷியை தரிசிக்க அவரது அனுக்கத் தொண்டர்களுள் ஒருவரான கிரிதாரிலால் என்பவர் **(18–3–1946)** அன்று வந்தார். இந்த யுகம் எப்போது முடியும் என்ற கேள்வியை அவர் பகவானிடம் கேட்டார். உடனே ரமண மஹரிஷி நான் காலத்தை உண்மையெனக் கருதுவதில்லை. இறந்த காலத்தைப் பற்றியும் முன்பிருந்த யுகங்களைப் பற்றியும் நமக்குத் தெரியாது. எதிர்காலத்தைப் பற்றியும் நமக்குத் தெரியாது ஆனால் நிகழ்காலம் இருக்கிறதென்பது தெரியும் அதை முதலில் தெரிந்து கொள்வோம். அப்போது எல்லா சந்தேகங்களும் தீரும் தூக்கத்தில் இந்த உலகமும் இறந்த காலம் அல்லது எதிர்காலம் ஆகிய ஒன்றுமே நமக்கு இருப்பதில்லை. ஆனால் 'நாம்' இருக்கிறோம்! மாற்றமில்லாததும் சாஸ்வதமுமானதையும் முதலில் தெரிந்து கொள்வோம்' என்றார்.

இன்றைய அவசர உலகத்தில் நாம் பொருளாதாரத்தில் முன்னேறியிருக்கிறோம் என்பதில் மாற்று கருத்து இருக்க முடியாது. நம் வசதி வாய்ப்புகள் பெருகியுள்ளன இருப்பினும் சந்தோஷமும் நிம்மதியும் குறைந்திருப்பதாகத் தோன்றுகிறது. வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கும் போது நிம்மதி குறைந்திருப்பது ஏன்? சந்தோஷமாக வாழ்வது எப்படி? சந்தோஷம் குறைந்தது எதனால்? இன்று பணப்புழக்கம் வெகுவாய் அதிகரித்தும் சந்தோஷம் குறைந்தது ஏன்? மக்களிடையே அன்பும் பண்பும் நேர்மையும் குறைந்துவிட்டது பெரியவர்களிடம் அவர்கள் காட்டும் மரியாதையும் குறைந்துவிட்டது. பரஸ்பரம் அன்பு குறைந்ததால் பாதுகாப்பு உணர்வும் குறைந்துவிட்டது. சுயநலம் அதிகரித்துவிட்டது. தவறான பழக்கவழக்கங்களும் நம் வாழ்வை பெரிதும் பாதித்துவிட்டன. சந்தோஷமாக வாழ என்ன செய்ய வேண்டும்? முதலில் உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும். யோகா, தியானம் தினசரி செய்யலாம். கூடியமட்டில் இயற்கை உணவை உண்ணலாம். அனாவசிய பயங்களையும் எதிர்மறை எண்ணங்களையும் தவிர்க்கலாம். எவ்வளவு பெரிய பிரச்சினை வந்தாலும் தாங்கும் மனப்பக்குவமும் வேண்டும். மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்கின்ற நினைப்பில் இருந்து விடுபட வேண்டும். மரண பயம் நீங்க வேண்டும். கடந்த காலத்தில் நடந்த சோகங்களில் வாழ்வதை நிறுத்த வேண்டும். எதிர்காலத்தை பற்றிய உணர்ச்சிவசப்படும் படபடப்புகள் கூடாது. நிகழ் காலத்தில் முழுமையாக இரசித்து வாழ வேண்டும்.

எப்போதும் நிகழ்காலத்தில் வாழ வேண்டும். கடந்த காலத்தில் நிகழ்ந்தவற்றை பற்றி நினைத்து வருத்தப்படுவதும் எதிர்காலத்தில் வரப்போவது நினைத்து கவலைப்படுவதும் நம்மை மகிழ்ச்சியாக வைக்க உதவாது. இதுவே நீங்கள் நிகழ்காலத்தில் மனதை நிலை நிறுத்தி வாழ துவங்கும் போது மிக எளிமையான விஷயங்களை கூட நீங்கள் ரசிக்க ஆரம்பித்து விடுவீர்கள், இவை உங்களை முழுமையாக்குவதோடு மகிழ்ச்சியாக வைக்கவும் உதவுகிறது. எளிமையான வாழ்க்கையை வாழ்வதற்கு முதலில் புற உலக பொருட்களின் மீது உள்ள ஆசையை குறைத்து கொண்டாலே உங்கள் மனதை மகிழ்ச்சியாக வைத்து உங்களை முழுமையாக மாற்ற உதவும் அனுபவங்களை பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நமது கண் முன்னே பல்வேறு வித அனுபவங்களை பெறுவதற்கான வாய்ப்புகள் கொட்டிக்கிடந்தாலும் நம்மால் அதனை முழுமையாக புரிந்து கொள்ள முடிவதில்லை. இதுவே தங்கள் தேவைகளை குறைத்துக்கொண்டு எளிமையாக வாழ்பவர்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் பயணம் செய்து அனுபவங்களை பெறுவதிலும் தங்கள் மனதிற்கு பிடித்தவர்களுடன் நேரம் செலவிடுவதிலும் தங்களுக்கு பிடித்த விஷயங்களை செய்வதிலுமே ஆர்வம் காட்டுபவர்கள். இதன் காரணமாகத்தான் அவர்கள் தேவைகளை குறைத்துக்கொண்டாலும் மற்றவர்களை விட அதிக மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள்.

எவ்வளவு நாட்களானாலும் நமது பழைய நினைவுகள் திடீரென தோன்றி நமது அப்போதைய நிம்மதியை மகிழ்ச்சியை கெடுத்துவிடும். அதுபோன்று திடீரென தோன்றும் அந்த பழைய நினைவுகள் நம்மை அப்போது எவ்வாறு துன்புற்றோமோ அதே இடத்திற்கே கொண்டுசென்று சிலநிமிடங்கள் நமது நிகழ்காலத்தை தகர்த்துவிடும். நமது மூளை நமது மகிழ்ச்சியான தருணங்களை விட நாம் துன்பப்பட்ட காலங்களை தான் அதிகமாக நினைவில் வைத்து நம்மை மேலும் துன்புறுத்தும். இது ஏற்படுவதற்கு நமது எதிர்மறை எண்ணங்கள் காரணமாக இருக்கும். அவை அச்சம், குற்றஉணர்வு, அவமானம் மற்றும் சோகம் ஆகியவை ஆகும். நமது மூளை எதிர்மறை எண்ணங்களை மட்டுமே அதிகம் நினைத்துக்கொண்டிருப்பதற்கு காரணம் அதன் வாழ்வதற்கான உள்ளுணர்வு காரணமாக இருக்கலாம்.

உங்களுக்கு பழைய நினைவுகளை ஏற்படுத்தும் இடங்களையும் பொருட்களையும் அறவே தவிர்த்துவிடுங்கள். எல்லா நினைவுகளையும் நீங்கள் தவிர்க்க முடியாது. ஆனால் நீங்கள் சில நினைவுகளை தவிர்க்க முடியும். சில நினைவுகள் தானாகவே மெல்ல மெல்ல மறந்து மறைந்துவிடும். அந்த பழைய நினைவுகளை முக்கிய விஷயங்களை நினைத்து மாற்றிக்கொள்ளுங்கள். மகிழ்ச்சியான தருணங்களுக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுங்கள் எப்போதும் கெட்ட நினைவுகளை மறந்து மகிழ்ச்சியான தருணங்களை மனதில் நினைத்திருங்கள். உதாரணமாக நீங்கள் உங்களுக்கு அன்பானவர்களுடன் சண்டையிட்ட தருணத்திற்கு பதில் அவர்களுடன் சேர்ந்து மகிழ்ந்திருந்த தருணங்களை நினையுங்கள். நிகழ்காலத்தில் வாழுங்கள். பழைய நினைவுகளை மறக்க நிகழ் காலத்தில் நீங்கள் செய்ய வேண்டிய விஷயங்களை பட்டியலிட்டு முதலில் செய்ய வேண்டியதை முடிப்பதற்கு ஆயத்தமாகுங்கள். நிகழ் காலத்தில் வாழ்வது உங்களுக்கு நேர்மறை சிந்தனைகளைக் கொடுக்கும்.

நாம் இந்த தேதியில் இந்த நேரத்தில் இந்த நொடியில் இந்த இடத்தில் இருக்கும் போது நமது சிந்தனைகள் மட்டும் கடந்த காலத்தில் இருந்தால் முன்னேற்றம் தராது. கடந்த காலம் சென்று மறைந்தது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். நிகழ்காலமே கண் முன் இருக்கும் உண்மை. கடந்த காலத்தின் தவறுகள் முடிந்துவிட்டது. இறந்த காலத்தில் செய்த தவறுகள் நிகழ்காலத்தில் தொல்லை தரலாம். ஆனால் அது முடிந்து போன ஒன்று கடந்தது கடந்தது தான். நாம் நிகழ்காலத்தில் வாழ்வோம். பழைய சுகங்களும் துக்கங்களும் வெறும் நினைவுகள் மட்டுமே. அவற்றை நிகழ்கால உணர்ச்சிகளாக மறு அவதாரம் எடுக்க வைக்க வேண்டாம். என் உறவினர்கள் நண்பர்கள் பல பேர் இப்போது உயிரோடு இல்லை. அந்த நினைவுகள் ஒரு சில நிமிடம் என் மனத்திரையில் வந்து போகும். அதையே நினைத்துக்கொண்டு நிகழ்காலத்தை பாழ்படுத்த மாட்டேன். பெற்றோர், இறந்த பழைய சோகங்கள், ஏமாற்றங்கள் இவற்றை நினைத்து உணர்ச்சிவசப்பட்டால் நிகழ்காலத்தில் பிரச்சினைகள் அதிகமாகும். கடந்த கால பிரச்சினைகளின் நினைவுகளை நிகழ்காலத்திலும் சுமக்கிறோம்.

இன்று எங்கும் பணம் ; எதிலும் பணம் என்று பணப் பேராசையும் பணத்திற்காக கொலை, கொள்ளை போன்றவை பெருகி வருவதையும் நாம் காண்கிறோம். இதற்குக் காரணம் இருப்பதை வைத்து வாழ்க்கைத் தேவையை பூர்த்தி செய்யாமல் அடுத்தவரின் சொத்துக்கோ பணத்துக்கோ ஆசைப்படும் எண்ணம் தான். பெரும் பணக்காரர்கள் தங்களிடம் உள்ள சொத்து போதாதென்று மக்களை ஏமாற்று வேலைகள் பலவற்றால் கொள்ளையடிக்கிறார்கள். இவை நமது நாட்டில் அன்றாடச் செய்திகளாகிவிட்டன. உலகச் செல்வங்களை போதுமென்ற மனம் இல்லாமல் அனுபவிப்பவர்கள் சாப்பிட்டும் வயிறு நிரம்பாதவர்களுக்கு ஒப்பானவர்கள். ஒருவன் தேவையான அளவு சாப்பிடும் போது வயிறு நிறைய வேண்டும். ஆனால் வயிறு நிறையவில்லை என்று கூறினால் அவனது நிலை எப்படியோ அதைப் போன்று தான் இருப்பதை வைத்துக்கொண்டு நிம்மதியடையாமல் இன்னும் வேண்டும் இன்னும் வேண்டும் என்று அலைபவன். வயது முதிர்ந்து வேறு உலகத்திற்குச் செல்லத் தயாராக வேண்டிய வேளையில் கூட செல்வத்தைச் சேகரிப்பதில் அதிக ஆர்வம் காட்டும் நபர்களையும் காண்கிறோம்.

மனிதர்கள் எதில் எப்போது மனத்திருப்தி அடைகிறார்கள் ? அவர்கள் விரும்பும் பணத்தையோ, செல்வத்தையோ வசதிகளையோ இன்பங்களையோ பூர்த்தி செய்து வைத்தால் திருப்தி அடைவார்களா ? அவர்கள் வேண்டுவதை விடவும் அதிகமாகக் கொடுத்தால் திருப்தியடைவார்களா, இல்லை... மனிதர்களுக்கு எவ்வளவு கொடுத்தாலும் திருப்தி ஆவதில்லை. இந்த உலகில் எதைக்கொண்டும் மனித மனம் அமைதி அடைவதில்லை. உணவை மட்டுமே மனிதர்கள் போதும் என்று சொல்வார்கள். என்னதான் விருப்பம் இருந்தாலும் சுவையாக இருந்தாலும் யாருமே 50 இட்லிகளை உண்பதில்லை. வயிறு நிறைந்ததும் போதும் என்று ஒதுக்கிவிடுவார்கள். அவர்களின் மனதுக்குள் இன்னும் கொஞ்சம் சாப்பிட வேண்டும் என்ற ஆசை இருக்கலாம். ஆனாலும் உடல் ஒத்துழைக்காது. வயிறு நிறைந்ததும் உடல் உணவு உண்பதை நிறுத்தச் சொல்லிப் போராடும்; போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.

உண்மையான மகிழ்ச்சி பெரும்பாலும் தற்போதைய தருணத்தில் முழுமையாக இருப்பதை உள்ளடக்கியது. அவர்கள் நினைவாற்றலைப் பயிற்சி செய்கிறார்கள் மற்றும் அவர்களின் அன்றாட அனுபவங்களில் முழுமையாக ஈடுபடுகிறார்கள். மகிழ்ச்சியாக வாழக்கூடிய மக்கள் சிறிய விஷயங்களில் கூட இன்பங்களை அனுபவிக்கிறார்கள். நிகழ்காலத்தில் மகிழ்ச்சியை அனுபவிக்கிறார்கள். கடந்த கால அல்லது எதிர்காலத்தைப் பற்றிய அதிகப்படியான கவலை அல்லது வருத்தத்தை விட்டுவிடுகிறார்கள்.

# சுதந்திர போராட்ட வீரர் கார்குல தியாகி ஈரோடு ஈஸ்வரன் பிள்ளை சிலை மற்றும் மணிமண்டபம் திறப்பு விழா






கார்குல தியாகி ஈரோடு ஈஸ்வரன் பிள்ளை, திரு. பிரகாசம் அவர்கள், சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த போது, ஈரோடு சட்டமன்ற உறுப்பினராக போட்டியின்றி 1946–ல் தேர்ந்தெடுக்கப்பட்டார். பவானிசாகரில் அணை கட்டித்தர வேண்டும் என்று கர்மவீரர் காமராஜரிடம் கோரிக்கை வைத்தார். மேலும் தனக்கு சொந்தமான 1 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நிலத்தை அணைகட்டுவதற்கு தானமாக வழங்கிய பெருமை உடையவர். இன்றைக்கும் ஈரோடு மாவட்டம் விவசாயத்தில் சிறப்பு பெற்று விளங்குவதற்கு இவரது கொடையே காரணமாகும்.

அன்னாரது தொண்டுள்ளத்தை பாராட்டும் வகையில் நீண்ட நாள் கோரிக்கையான பவானிசாகர் அணையில் முழு உருவ வெண்கல சிலை, மணிமண்டபம் அமைக்க ரூ. 3 கோடியே 50 லட்சம் தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்கி பணிகளை முடித்து 20–12–2024 தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களால் பவானிசாகரில் திறந்து வைக்க பெற்றது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஈரோடு கார்காத்த வேளாளர் சங்கம்**

# சந்தர்ப்ப சாட்சியம்
## CIRCUMSTANTIAL EVIDENCE

மேலையூர் ச. அன்பழகன், 98413 73184

சந்தர்ப்ப சாட்சியம் என்பது சில விஷயங்களை உறுதியாக பரிந்துரைக்கும். ஆனால் நேரடியாக நிரூபிக்காது அது நேரடியாக ஒரு சம்பவத்தைக் கண்ணால் கண்ட அல்லது காதால் கேட்ட சாட்சியின் நேரடியான சாட்சியம் அல்ல. ஆனால்அதைக் கொண்டு சில உண்மகளை அனுமானிக்க முடியும். உதாரணம்:–

ரகு என்பவன் வீட்டிற்கு சற்று கால தாமதமாக வருகிறான். ஏன் லேட் என்று அவன் தந்தை கேட்கும்போது வழியில் மழை பெய்ததால் சற்று ஒதுங்கி இருந்து விட்டு வந்தேன்; அதனால் நேரமாகி விட்டது. அப்போது மழை விட்டிருந்ததால் அவனால் மழை பெய்ததை நிரூபிக்க முடியவில்லை. அப்போது மாடி வீட்டுப் பெண் வெளியில் வந்து துணிகளை உலர்த்துகிறாள் அப்போது அவள் வரும் வழியில் மழையில் நனைந்துவிட்டேன் என்று கூறுகிறாள். இது மழை பெய்ததற்கு சந்தர்ப்ப சாட்சியமாகக் கொள்ளலாம். மேற் கொண்டு சந்தர்ப்ப சாட்சியத்தைப் பார்க்கும் முன்பாக இந்திய சாட்சியங்கள் சட்டத்தில் உள்ள பல் வகை சாட்சியங்களைப் பார்ப்போம்

இந்திய சாட்சியங்கள் சட்டம் 1872 ல் உள்ள சாட்சியங்கள்

### 1. வாய் மொழி சாட்சியம் பிரிவு 60

நீதி மன்றத்தில் ஒரு சாட்சி சொல்லும் உண்மைகளைப் அதிவு செய்யச் சொல்லி நீதி மன்றம் கூறுகிறதோ அவை எல்லாம் வாய் மொழி சாட்சியமாகும். அதாவது வாய் மொழி சாட்சியம் என்பது அந்த சாட்சி கூறும் சாட்சியம் அவர் தானே நேரிடையாகப்,பார்த்த அல்லது கேட்ட ஒரு நிகழ்வாக இருக்கும். வாய் மொழி சாட்சியம் என்பது நேரடியாக் இருக்க வேண்டும். நடந்த உண்மைகளைக் கூறுவதாக இருக்க வேண்டும்

### 2. ஆவண சாட்சியம் பிரிவு 3

நீதி மன்றத்தின் பரிசீலனைக்காக அங்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் ஆவண சாட்சியமாகும். வாய் மொழி சாட்சியத்தை விட ஆவண சாட்சியம் அங்குள்ள வழக்கம் பற்றி சாட்சி சொல்பவரின் சரியான மனப்பான்மை மற்றும் மனச்சாட்சியைக் காட்டகூடியதாக இருக்கும்

### 3 முதன்மை சாட்சியம் பிரிவு 62

முதன்மை சாட்சியம் என்பது மிகவும் சிறந்த முதல் தரமான சாட்சியம் ஆகும். சர்ச்சைக்குரிய ஒரு பொருள் பற்றிய மிகவும் முக்கியமான துப்பு கொடுக்கக்கூடிய சாட்சியமாக இருக்கும். ஒரு தீர்ப்பில் ப்ரிவி கௌன்சில் கூறுகையில் முதன்மை சாட்சியம் தான் சட்டம் எதிர்பார்க்கும் முதல் சாட்சியமாக இருக்கும், இரண்டாம் ரக சாட்சியம் என்பது வேறு நல்ல சாட்சியங்கள் கிடைக்காத போது கொடுப்பதாகும் என்று கூறியுள்ளது

### 4. இரண்டாம் ரக சாட்சியம் பிரிவு 63

இரண்டாம் ரக சாட்சியம் என்பது பெயருக்கு ஏற்றாற் போல் தரத்தில் சற்று குறைவானதாக இருக்கும். எனவே அது இரண்டாம் இடத்தைத்தான் பெறும், அந்த சாட்சியத்தை நீதி மன்றத்தில்,சமர்ப்பிக்கும் போதே அதை விட சிறந்த சாட்சியம் ஒன்று சமர்ப்பிக்கப் படாமல் விடு பட்டுள்ளது என்று தோன்ற வைக்கும். முதன்மை சாட்சியம் இல்லாத நேரத்தில் தான் அது சமர்ப்பிக்கப்படும்; எனவே தான் அது இரண்டாம் ரக சாட்சியம் எனப்படுகிறது

### 5. இயற்கையான / நேர்மையான சாட்சியம்

இயற்கையான/நேர்மையான சாட்சியம் என்றால் போலி யில்லாத யதார்த்தமான சாட்சியம் என்று பொருள்.. இந்த மாதிரி நேர்மையான சாட்சியம் நீதி மன்றத்தின் நேரடி பார்வைக்கு பொருளாகவே இருக்கும் அதாவது வாய் மொழியாகவோ ஆவணங்களின் மூலமோ விவரிக்காமல் அந்த பொருளையே நேரடியாக நீதி மன்ற பார்வைக்கு வைத்ததாக இருக்கும். உதாரணம் :– நீதி மன்ற அவமதிப்பு, சாட்சியின் நடத்தை போன்றவைகள். அவை திருப்திகரமான சாட்சிகள் என்று சொல்லப்படும்

### 6. கேள்விப் பட்ட சாட்சியம் வதந்தி

இது மிகவும் பலஹீனமான சாட்சியம் ஆகும். அதாவது சாட்சியம் கொடுப்பவர் தானே நேரிடையாகப் பார்க்காத அல்லது கேட்காத மற்றவர்கள் சொன்னதைக் கேட்டு சொல்வதாகும் . ஒரு வழக்கில். தீர்ப்பு சொல்லும் போது பம்பாய் உயர் நீதி மன்றம் கேள்விப்பட்ட சாட்சியம் சம்பந்தமற்றது என்று தள்ளுபடி பண்ணப்பட்டிருக்க வேண்டும் என்று கூறியுள்ளது. அதனுடைய நம்பகத்தன்மை பற்றி உறுதி இல்லாத ஒரு சாட்சியம் கிடைத்தால் அதை நம்பி செயல்படுவது மிக ஆபத்தானதாகும்.கேள்விப்பட்ட சாட்சியம் என்பது அந்த வகையைச் சார்ந்ததாகும்

### 7. நீதித்துறை சாட்சியம்

ஒரு உண்மையை நிரூபிக்கவோ மறுக்கவோ ஒரு நீதி மன்றத்தில் பெறப்பட்ட சாட்சியம் நீதித்துறை சாட்சியம் எனப்படும். நீதி மன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலம் கூட நீதித்துறை சாட்சியத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. சாட்சிகளின் வாக்குமூலங்கள், நீதி மன்றப் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள உண்மைகள் ஆகிய அனைத்தும் நீதித்துறை சாட்சியங்களைச்சாரும்.

**8. நீதி மன்றம் அல்லாத சாட்சியம்**

நீதி மன்றத்துக்கு வெளியே நீதிபதி/மாஜிஸ்ட் ரேட் அல்லாத வேறு தனி நபர் முன்னால் குற்றம் சாட்டப்பட்டவர் கொடுக்கும் ஒப்புதல் வாக்கு மூலம் நீதி மன்றம் அல்லாத் சாட்சியம் ஆகும்.

**9. நேரடி சாட்சியம்**

நேரடி சாட்சியம் என்பது ஒரு உண்மையை உறுதிப்படுத்தும் சாட்சியமாகும். அதற்கு ஒரு நல்ல உதாரணம் நீதி மன்றத்தில் ஒரு சாட்சி கொடுக்கும் வாக்கு மூலம் அல்லது ஒப்புதல் வாக்கு மூலமாகும்.

**10. சந்தர்ப்ப சாட்சியம் அல்லது மறை முக சாட்சியம்**

சந்தர்ப்ப சாட்சியம் அல்லது மறை முக சாட்சியம் என்பது ஒரு சர்ச்சையில் ஒரு உண்மையை நிரூபிக்க வேறு உண்மைகளை கொடுத்து முயற்சி செய்வது ஆகும். சந்தர்ப்ப சாட்சியங்கள் உறுதியான ஆதாரங்கள் அல்ல. ஒரு குற்றவியல் செயலில் என்ன நடந்தது என்பதற்கு அவை ஒரு யோசனையைக் கொடுக்கும்.

**எதற்காக சந்தர்ப்ப சாட்சியங்கள் ?**

சந்தர்ப்ப சாட்சியங்கள் நேரடி சாட்சியம் அல்ல என்ற போதும் சில நேரங்களில் சந்தர்ப்ப சாட்சியங்கள் தேவைப்படுகின்றன. பெரும்பாலான குற்றவாளிகள் குற்றம் செய்யும் போது மிக உஷாராக நேரடி சாட்சியம் ஏதும் இல்லாமல் பார்த்துக் கொண்டு செய்வார்கள். அதன் காரணமாக நீதி மன்றங்கள் பல நேரங்களில் சந்தர்ப்ப சாட்சியங்களை ஏற்று முடிவு எடுக்க வேண்டிய சூழ் நிலையில் உள்ளன,.உதாரணம் குற்றம் நடந்த சமயத்தில் பிரதிவாதியின் குற்றம் சாட்டப்பட்டவர் நடத்தை ஏற்கனவே சொன்ன மாதிரி சந்தர்ப்ப சாட்சியம் சில செயல்கள் நடந்துள்ளதைக் குறிக்கிறது ஆனால் அதனால் அந்த சந்தர்ப்பத்தை நேரடியாக நிரூபிக்க முடியாது

**உதாரணம் 1**

ஒரு நபர் அவரது அலுவலகத்தில் நிறைய பணம் கையாடல் செய்துள்ளதாகக் குற்றச்சாட்டு .அதனை நிரூபிக்க நேரடி சாட்சியம் டைரக் எவிடென்ஸ் இல்லை. ஆனால் அந்த நபர் குற்றம் நடந்ததாக சந்தேகப்படும் கால கட்டத்தில் அதிக செலவில் ஆடம்பர பொருட்கள் வாங்கியுள்ளார். அது அவர் குற்றம்புரிந்ததற்கு சந்தர்ப்பசாட்சியமாகக் கருதப்படும். நேரடி சாட்சியம் என்னும் டைரக்ட் எவிடென்ஸ் மற்றும் சந்தர்ப்ப சாட்சியம் என்னும் இன்டைரக்ட் எவிடென்ஸ் இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் சட்டம் பாரபட்சம் அல்லது வித்தியாசம் காட்டுவதில்லை

**உதாரணம் 2**

கிருஷ்ணன் என்பவர் தன் மனைவி உஷா என்பவருக்கும் ரவி என்பவருக்கும் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சாட்டி மனைவியிடமிருந்து விவாஹ ரத்து பெற வழக்கு தொடர்கிறார். கிருஷ்ணன் மற்றும் அவர் மனைவி உஷா இவர்களின் படுக்கை அறையில் உள்ள ஒரு புத்தகத்தில் ரவியின் கைரேகை பதிந்துள்ளது. அதனைக் கொண்டு ரவி அந்த படுக்கை அறைக்கு வந்துள்ளதாக நினைக்க முடியும். அந்த புத்தகத்தில் இருந்த ரவியின் கைரேகை இருந்தது அவர் படுக்கை அறைக்கு வந்திருப்பார் என்பதற்கு சந்தர்ப்ப சாட்சியம்தான். ஆனால் சந்தர்ப்ப சாட்சியம் நேரடி சாட்சியம் போல் அவ்வளவு வலுவானதல்ல. அதில் தவறான தகவலைப்புரிந்து கொள்ளவும் வாய்ப்பு உண்டு

இந்த உதாரணத்தில் உஷா அந்த புத்தகத்தை ரவிக்கு படிப்பதற்குக் கொடுத்து விட்டு பிறகு திரும்பப் பெற்றிருந்தால் அவருடைய கைரேகை அதில் பதிய வாய்ப்பு உண்டு

சந்தர்ப்ப சாட்சியம் நீதி மன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்படுமா ?

ஒரு வழக்கில் உண்மைக்கும் சந்தர்ப்ப சாட்சியம் கூறும் அனுமானத்துக்கும் உள்ள தொடர்பு மிக பலவீனமாக இருந்து அந்த வழக்கில் எந்த வித உதவிகரமாகவும் இல்லாமல் இருந்தாலொழிய பொதுவாக சந்தர்ப்ப சாட்சியங்கள் நீதி மன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். பல்வேறு குற்றவியல் வழக்குகளில் சந்தர்ப்ப சாட்சியங்களின் அடிப்படையில் பல தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன.

**உதாரணம்**

கல்லு என்பவருக்கும் உத்தரப் பிரதேச அரசுக்கும் இடையே நடந்த வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர், இறந்தவரைத் தன் நாட்டுத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாக வழக்கு நடந்தது. இறந்தவரின் படுக்கைக்கு அருகில் ஒரு தோட்டாக் குண்டு கண்டு பிடிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர் சம்பவம் நடந்த கிராமத்தில் இருந்து 14 மைல்களுக்கு அப்பால் கைது செய்யப்பட்டார். அவர் தன் வீட்டிலிருந்து ஒரு கைத்துப்பாக்கியை எடுத்துக்கொடுத்தார்,அதிலிருந்து அந்த துப்பாக்கி இருந்த இடம் அவருக்கு மட்டும் தான் தெரியும் எனபது தெரிந்தது. துப்பாக்கி போன்ற ஆயுதங்களின் நிபுணர் அந்த துப்பாக்கியிலிருந்து சுடப்பட்டுத்தான் இறந்தவர் கொல்லப் பட்டார் என்பதை நிரூபித்தார், உச்சநீதிமன்றம் "குற்றம் சாட்டப்பட்டவரை தண்டிக்கும் போது சந்தர்ப்ப சாட்சியம் இறந்தவரின் மரணம் குற்றம் சாட்டப்பட்டவரால் தான் ஆகியுள்ளது வேறு எவராலும் அல்ல என்பதை நிலை நாட்டியுள்ளது" என்று கூறியுள்ளது

**மற்று மொரு உச்ச நீதி மன்ற வழக்கு**

சந்தர்ப்ப சாட்சியம் தண்டனை கொடுப்பதற்குக் காரணமாக இருக்கலாம் , ஒரு வழக்கில் தீர்ப்பு

கூறுகையில் உச்ச நீதி மன்றம், பல வழக்குகளில் நேரடி சாட்சியங்கள் போதுமானதாக இல்லை என்றால் சந்தர்ப்ப சாட்சியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்று கூறியுள்ளது

ரூப் தேவி கொலை வழக்கின் மேல் முறையீட்டில் நீதியரசர்கள். K.T. தாமஸ் மற்றும் R.P. சேதி அடங்கிய உச்ச நீதி மன்ற ஆயம்,, "குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்தைப் பற்றி எந்த வித ஐயத்துக்கும் இடம் இல்லாத முழுமையான சந்தர்ப்ப சாட்சியத்தை அரசு தரப்பு அளித்தால் அதன் அடிப்படையில் விசாரணை நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவரை தண்டிக்கலாம்" எனக் கூறியுள்ளது

ரூப் தேவிக்கு ஷ்யாம் மோகன் என்பவருடன் 1973 ல் ஜூன் மாதத்தில் திருமணம் ஆனது. ரூப் தேவி 1977 மார்ச் 18 அன்று அவரது தந்தைக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். அந்த கடிதம் கிடைத்தவுடன் அவர் தந்தை ரூப் தேவியை பார்க்கச் சென்றுள்ளார். அப்போது அவருடைய மாப்பிள்ளையின் அண்ணன் ஹரி மோகன் என்பவர் ரூப் தேவி காலரா நோயால் 3 நாட்களுக்கு முன்னால் இறந்து விட்டதாக கூறியுள்ளார்.

அதில் ஐயம் கொண்ட ரூப் தேவியின் தந்தை 1997 மார்ச் 20 ஆம் தேதி போலீஸில் புகார் கொடுத்துள்ளார். அதன் பிறகு 2 நாட்கள் கழித்து ரூப் தேவியின் உடல் துப்பாக்கி குண்டு காயத்துடன் ஒரு சாக்கு மூட்டையில் கண்டு பிடிக்கப்பட்டது. விசாரணை நீதி மன்றம் ஹரி மோஹன் மீது கொலைக் குற்றம் சாட்டி ஆயுள் தண்டனை வழங்கியது

உயர் நீதி மன்றம் மேல் முறையீட்டில் அந்த ஹரி மோஹனை விடுதலை செய்தது. அந்த தீர்ப்பை எதிர்த்து உத்தரப்ரதேச அரசு உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்தது

இறந்து போன பெண் ரூப் தேவிக்கும் அவரது மாமனார் மாமியாருக்கும் இடையே வரதட்சணை விஷயத்தால் நல்ல உறவு முறை இல்லாதிருந்தது, இறந்து போனவர் தன் தந்தைக்கு எழுதிய கடிதத்தில் தான் தன்னுடைய மாமனார்/ மாமியாரால் கொல்லப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்தைத் தெரிவித்து இருந்தது, அவருடைய உடலில் இருந்த துப்பாக்கி குண்டு காயம், மற்றும் குற்றவாளி வசம் இருந்த உரிமம் பெறப்பட்ட துப்பாக்கி ஆகிய அம்சங்களைக் கருத்தில் கொண்ட உச்ச நீதி விசாரணை நீதி மன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்தது

இந்திய சாட்சியங்கள் சட்டம், மற்றும் சி.ப்.ஐ.நிக்.இன், லான்.காம், லெக்ட்லா.காம் மற்றும் லீகல் இந்தியா.காம் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுத்து வழங் கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப் பாக்கம், சென்னை 97. போன் 98413 73184

# மின்னஞ்சல் நெறிமுறைகள்

**கோவிந்தராசு குஞ்சிதபாதம் -**

**இளையபெருமாள் நல்லூர்**

Kaaraalan Data Factory,

Adambakkam, Chennai-88.

Ph: 9176038261

இது ஜூன் மாத இதழில் வெளியிடப்பட்ட "மின்னஞ்சல் நெறிமுறைகள்" கட்டுரையின் தொடர்ச்சியாகும்.

## "கூட்டத்தின் நெறிமுறைகள்" (Meeting Ethics)

கூட்டத்தின் நெறிமுறைகள் என்பது கூட்டங்களில் பின்பற்ற வேண்டிய நடத்தை முறைகளை குறிக்கிறது. இது கூட்டங்களை பயனுள்ள மற்றும் மதிப்பு மிக்கவையாக வைத்திருக்க உதவுகிறது. இங்கே பொதுவான மற்றும் முக்கிய நெறிமுறைகள் சிலவற்றைப் பார்ப்போம்.

### பங்கேற்பாளர்களுக்கு (Participants)

1. நேரந்தவறாமை : கூட்டத்திற்கும் மற்றவர்களுக்கும் மரியாதை காட்ட சரியான நேரத்தில் அல்லது சற்று முன்னதாகவே வந்து சேருங்கள். நீங்கள் தாமதமாக வரப்போகிறீர்கள் என்றால் மீட்டிங் நடத்துபவருக்குத் தெரியப்படுத்தவும்.

2.சரியான உடை : உங்கள் உடையானது கூட்டத்தின் சம்பிரதாயத்துடன் பொருந்த வேண்டும்.

3.தயாராக இருங்கள் : கூட்டத்தில் விவாதிக்க வேண்டிய விஷயங்களின் பட்டியல் (நிகழ்ச்சி நிரல் – Agenda) மற்றும் தேவையான ஆவணங்களை முன்கூட்டியே மதிப்பாய்வு செய்து குறிப்புகளை எடுத்து கூட்டத்தில் பங்களிக்க தயாராக இருங்கள்.

4.கவனமாக கேளுங்கள் ; கற்றலில் கேட்டல் நன்று எனவே பேச்சாளரிடம் உங்கள் முழு கவனத்தையும் செலுத்துங்கள். மேலும் தலையசைப்புகள் மற்றும் முகபாவனைகளுடன் உடன்பாட்டைக் காட்டுங்கள்.

5.நிகழ்ச்சி நிரலைப் பின்பற்றவும் : கூட்டத்தை ஏற்பாடு செய்ய செலவழிக்க நேரத்தையும், முயற்சியையும் மதித்து உங்கள் கலந்துரையாடல் எப்போதும் கூட்டத்தின் நோக்கம் (Objective of the meeting) தொடர்புடையதாக இருக்க வேண்டும்.

6.பொருத்தமான நேரத்தில் கேள்விகளைக் கேளுங்கள் : இது கூட்டத்தில் உள்ள ஈடுபாடு மற்றும் ஆர்வத்தைக் காட்டுவதாக அமையும். உங்கள்

முறைவரும்வரை காத்திருங்கள்,உங்கள் கருத்துகளை தெளிவாகவும் சுருக்கமாகவும் பகிருங்கள். எண்ணங்களை மென்மையாக வெளிப்படுத்துங்கள்.

7.சத்தமாகவும் தெளிவாகவும் பேசுங்கள் : பங்கேற்பாளர்கள் உங்கள் மனப்பான்மையை புரிந்து கொண்டு உங்கள் பேச்சைக் கேட்க இது உதவுகிறது.

8.மரியாதையை பேணுங்கள் : அறையில் உள்ள அனைவரையும் மரியாதையுடன் நடத்துங்கள், அவர்களின் யோசனைகளுடன் நீங்கள் உடன்படவில்லை என்றாலும் மற்றவர்களின் கருத்துகளை மதியுங்கள்.

9.குறிப்பெடுக்கவும் : முக்கிய அம்சங்களை நினைவில் வைத்துக்கொள்ளவும், உங்கள் பொறுப்புகளை செயலாற்றவும் குறிப்புகள் மிக முக்கியம்.

10.கவனச்சிதறல்களை தவிர்க்கவும்: கூட்டத்தின் போது உங்கள் கைபேசியைப் பயன்படுத்துவதையும், கூட்டத்திற்கு தொடர்பில்லாத பேச்சு/செயல்களையும் தவிர்க்கவும்.

11. சாப்பிடவும் குடிக்கவும் : தண்ணீர் மற்றும் காபி கொண்டு வருவது பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளத்தக்கது. ஆனால் உணவைக் கொண்டு வருவது சரியா என்பதை அமைப்பாளரிடம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

12. சுத்தம் செய்யுங்கள் : கூட்டம் முடிந்த பிறகு நீங்கள் பயன்படுத்திய காபி கப், காகிதம் அல்லது உணவுப்பொட்டலங்கள் போன்ற குப்பைகளை அகற்றுங்கள். ஏதேனும் சிதறல்கள் இருந்தால் அவற்றை சுத்தம் செய்து மேசை, நாற்காலி மற்றும் பிற பொருட்களை சுத்தமாக ஒழுங்குபடுத்தி சரியான இடங்களில் திருப்பி வையுங்கள்.

**அமைப்பாளர்களுக்கு (Organizers)**

1. தெளிவான நோக்கங்களை அமைக்கவும் : கூட்டத்தின் நோக்கம் மற்றும் நீங்கள் அடைய விரும்பும் முடிவுகளை வரையறுக்கவும்.

2.நிகழ்ச்சி நிரலை உருவாக்கி பகிரவும் : கூட்டத்தில் விவாதிக்க வேண்டிய தலைப்புகளை மற்றும் ஒவ்வொன்றிற்கும் ஒதுக்கப்பட்ட நேரத்தை வரையறுக்கவும் அஜெண்டாவை முன்னதாக பங்கேற்பாளர்களுடன் பகிர்வும்.

3.சரியான பங்கேற்பாளர்களை அழைக்கவும்: கூட்டத்தில் இருக்க வேண்டியவர்களை மட்டும் அழைக்கவும்.

4.நேர மேலாண்மை : கூட்டம் சரியான நேரத்தில் தொடங்குவதும், முடிவடைவதும் மிகவும் முக்கியமானது. சரியான நேரத்தில் முடிவடையும் கூட்டங்கள், கூட்டத்தில் பங்கேற்கும் அனைவரின் நேரத்தை மதிப்பது, கூட்டம் முடிந்த பிறகு, பங்கேற்பாளர்கள் தங்கள் மற்ற பணிகளை தொடர முடியும். பங்கேற்பாளர்கள் அடுத்த கூட்டங்கள் அல்லது செயல்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தாது குறிப்பிட்ட நேரத்தில் முடிவடையும் கூட்டங்கள் முக்கியமான முடிவுகளை எடுக்க உதவும்.

5.விவாதத்தை வழிநடத்தவும் : உரையாடலை வழிநடத்திட, அனைவருக்கும் பேச வாய்ப்பு கொடுத்து, விவாதத்தை சரியான தன்மையில் வைத்திருக்கவும்.

6.பங்கேற்பை ஊக்குவிக்கவும் : அனைத்து பங்கேற்பாளர்களும் தங்கள் கருத்துக்களை பகிர்வதில் வசதியாக உணரும் சூழலை உருவாக்கவும்.

7.மீட்டிங் குறிப்புகள் : (Minutes of Meeting) என்பது கூட்டத்தின் போது விவாதிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் முடிவுகள் மற்றும் நடவடிக்கைகளை பதிவு செய்யும் ஆவணம் ஆகும்.

8.பொறுப்புக்கூறலின் முக்கியத்துவம் : கூட்டத்தின் முடிவில் முக்கிய அம்சங்களை சுருக்கமாக கூறவும் எதற்கு யார் பொறுப்பு, எப்போது பணிகளை முடிக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தி தனிநபர்களுக்கான பணிகளை செயலாற்ற மீண்டும் வலியுறுத்துங்கள். இது கூட்டத்திற்குப்பிறகு அனைத்து உறுப்பினர்களும் ஒத்த கருத்தில் இருப்பதை உறுதி செய்யும்.

## வருந்துகிறோம்

சீர்காழி தாலுகா வைத்தீஸ்வரன் கோவில் (பூர்வீகம் திருப்புன்கூர்) திரு. T.S. தண்டபாணி பிள்ளை (ஆசிரியர் ஓய்வு) முன்னாள் சங்கத்தலைவர் அவர்கள் 19–12–24 இயற்கை எய்தியமைக்கும், சீர்காழி தாலுகா புழுசாப்பேட்டை, முன்னாள் சங்கத்தலைவர் திரு. S. ஜெயராமன் பிள்ளை அவர்களின் மனைவி திருமதி. பானு அம்மையார் அவர்கள் 20–12–24 இயற்கை எய்தியமைக்கும் சீர்காழி சங்கம் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

– சி. அகோரம்,
செயலாளர்.

# தி கார்காத்தார் சங்கம் (மெட்ராஸ்)

எண். 64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு, சூளைமேடு, சென்னை – 600 094. போன் : 044 – 2472 4882

கல்லூரியில் படிக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நம்குல மாணவ / மாணவிகளுக்கு நடப்பு கல்வி ஆண்டில் கல்வி உதவித்தொகை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட தகவல்கள் 15.02.2025க்குள் செயலாளர், தி கார்காத்தார் சங்கம் (மெட்ராஸ்), எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை – 600 094. என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

1. மாணவன் / மாணவி பெயர் :
2. தந்தை / தாய் பெயர் :
3. முழுமையான நிரந்தர முகவரி :
4. பெற்றோர் / மாணவ / மாணவி கைபேசி எண் :
5. படிக்கப் போகும் வகுப்பு :
6. கல்லூரியில் பணம் கட்டிய ரசீது (இந்த ஆண்டு) :
7. பெற்றோர் பார்க்கும் தொழில் மற்றும் மாத வருமானம் :
8. வங்கியின் பெயர் மற்றும் கிளை :
9. வங்கியில் கணக்கு வைத்திருப்பவர் பெயர் :
10. வங்கி கணக்கு – வங்கிக் கணக்குப் புத்தகத்தின் முதல்பக்க நகல்.
11. படிக்கும் கல்லூரியின் பெயர் :
12. படிக்கும் கல்லூரியின் துறை தலைவர் / ஆசிரியர் சான்று கடிதம் :
12. மாணவ / மாணவியின் கையொப்பம் :
13. உள்ளூர் கார்காத்தார் சங்க நிர்வாகிகளின் பெயர், பரிந்துரை, செல் நம்பர் அவர்கள் சங்க (Letter Padகளில்) அல்லது சீல்வைத்து தனியாக கடிதம்.

குறிப்பு : CREW கல்வி அறக்கட்டளை, மற்ற சங்கங்களிடம் கல்வி உதவித்தொகை பெற்றவர்கள் விண்ணப்பம் அனுப்புவதைத் தவிர்க்கவும். படிவத்தில் உள்ள அனைத்து தகவல்களும் பூர்த்தி செய்யப்பட்டு தேவையான சான்றிதழ்கள், ஒப்புதல் இரசீது இணைக்கப்பட்டால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். வெள்ளை காகிதத்தில் கடிதம் போல் எழுதி அனுப்பபடுபவை கட்டாயமாக ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.

**கைலை. சண்முகம்,**
செயலாளர்

## கல்வி உதவித்தொகை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் இரசீது

தி கார்காத்தார் சங்கம் (மெட்ராஸ்) அவர்களிடமிருந்து கல்வி உதவித்தொகையாக கீழ்கண்ட பணம் / காசோலையாக பெற்றுக்கொண்டேன்.

ரூபாய்.........................................................

Revenue Stamp

கையொப்பம்

## சாதனையாளர்



## மதிப்புறு முனைவர் சு. செல்லையா,

D.Sc., Ph.D., F.R.E.S. (London)

பேராசிரியர் முனைவர் சு. செல்லையா அவர்கள் தமிழ்நாடுவேளாண்மைபல்கலைக்கழகத்தின்பல்வேறு துறைகளில் சிறப்புடன் பணியாற்றிய தலைசிறந்த அறிவியலாளர் ஆவார். ஆடுதுறையிலுள்ள தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தின் முதல் இயக்குனர் என்ற பெருமையுடைய இவர் அந்நிறுவனத்தை பன்னாட்டுத் தரத்திற்கு உயர்த்தியவர். இவரது சீரிய தலைமையில் வெளியிடப்பட்ட நெல் இரகங்களான ஆடுதுறை 37, ஆடுதுறை 38, ஆடுதுறை 39 மற்றும் வெள்ளைப்பொன்னி ஆகியவையும் அண்ணாமலை 1 என்ற கத்தரி இரகமும் இன்றளவும் நம் தமிழகத்தில் புகழ்மிக்க இரகங்களாகும். இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தால் இயங்கும் பூச்சி மேலாண்மை பயிற்சிநிறுவனத்தின்இயக்குனராகஇவர்பணியாற்றிய போது நாடளாவிய பூச்சியியல் வல்லுநர்கள் 24 பேருக்கு சிறந்த முறையில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

இளமறிவியல் பட்டப் படிப்பில் வேளாண் பூச்சியியல் துறைப்பாடங்களில் முதல் மதிப்பெண் பெற்றதன் மூலம் கோச்சென் பரிசுப் பதக்கத்தினைப் பெற்றதனைத் தொடர்ந்து மூதறிவியல் பட்டப் படிப்பிலும் தனிச்சிறப்பு விருதினையும் பெற்றவர் இவர். இவரது முனைவர் பட்ட ஆராய்ச்சியினை மதிப்பாய்வு செய்த மூன்று அயல்நாட்டு அறிவியலாளர்கள் இவரை வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள பன்னாட்டு நெல் ஆராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் பட்ட மேல்நிலை ஆராய்ச்சியாளராகப் பணிபுரிந்த நெல் சார்ந்த பூச்சியியல் துறைக்கு இவர் ஆற்றிய பங்கு அனைவராலும் வெகுவாகப் பாராட்டுப் பெற்றது. 1994–ஆம் ஆண்டில் தமிழக அரசின் தமிழ்நாடு அறிவியலாளர் விருதினை முதன் முதலில் பெற்ற பெருமை இவருக்குரியது. இவர் இலண்டனிலுள்ள புகழ்பெற்ற இராயல் பூச்சியியல் சங்கத்தின் சக உறுப்பினராகத் திகழ்ந்துள்ளார். பூச்சியியல் துறைக்கு இவர் வாழ்நாளில் ஆற்றிய அளப்பரிய பங்கிற்காக வாழ்நாள் சாதனையாளர் விருதினை புது தில்லியிலுள்ள இந்திய பூச்சியியல் சங்கம் இவருக்கு வழங்கி கௌரவித்துள்ளது. மேலும் அன்னை தெரசா விருது, சிறந்த ஆராய்ச்சியாளர் விருது சாந்தி அறக்கட்டளை நினைவு விருது மற்றும் பல்வேறு பிற நாட்டு விருதுகளையும் வென்றவர்.

இவரது சிறந்த பணிக்கு மிக முக்கியமான அங்கீகாரம் எதுவென்றால்நம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் 2013–ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அறிவியல் முனைவர் பட்டம் ஆகும். நம் பல்கலைக்கழகத்தில் பணிமூப்பு எய்தியவர்களில் இப்பட்டத்தைப் பெற்ற ஒரே அறிவியலாளர் இவர் மட்டுமே எனக் கூறினால் அது மிகையாகாது. பூச்சியியல் துறைப் பேராசிரியராக இவர் ஆற்றிய விரிவுரைகள் இவரது மாணாக்கர்களால் வியந்து போற்றப்பட்டவை. இது வரை 25 மாணவர்களின் ஆராய்ச்சிக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்துள்ளார். அத்துடன் ஏழு புத்தகங்களையும் 280 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் பிரசுரித்த பெருமை இவருடையது. இவரது புத்தகமானது பன்னாட்டு நெல் ஆராய்ச்சி நிறுவனத்தால்வெளியிடப்பட்டுஇன்றளவும்பூச்சியியல் துறை வல்லுநர்களால் விரும்பி வாசிக்கப்பட்டு ஐயங்கள் தெளிவுபெற வழிவகை செய்கிறது.

பன்னாட்டு உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் ஆலோசகராக அழைக்கப்பெற்று அந்நிறுவனம் நடத்திய பன்னாட்டு மாநாடுகளில் உரை நிகழ்த்திய வித்தகராய்த் திகழ்ந்துள்ளார். மேலும் பல்வேறு நாடுகளுக்குப் பயணப்பட்டு பன்னாட்டு அறிவியல் மாநாடுகளில் பங்கேற்று ஆராய்ச்சிக் கட்டுரைகளை வழங்கியுள்ளார்.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் மற்றும் இந்திய அரசின் பல்வேறு ஆராய்ச்சி மதிப்பீட்டுக் குழுக்களின் உறுப்பினராகவும், உலக வங்கி மற்றும் இந்தியத் தொழில்நுட்பக் கழகம் ஆகியவற்றின் ஆலோசகராகவும் பணிபுரிந்த பெருமை பேராசிரியர் முனைவர் சு. செல்லையா அவர்களையே சாரும். நம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் புகழ்பெற்ற முன்னாள் மாணவர் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் அவருடைய பெயர் மற்றும் உருவப்படமானது பல்கலைக்கழகத்தின் புகழ் மண்டபத்தில் இடம்பெறவிருக்கிறது.

அவரை வாழ்த்தி மகிழ்வதில் குடவாசல் கார்காத்தார் சங்கம் பெருமிதம் கொள்கிறது.

**சிதம்பரம் நகரம் & குமராட்சி ஒன்றிய**
**கார்காத்தார் சங்கம் இணைந்து நடத்தும்**

சிதம்பரம் பகுதி

# 20-வது மங்கல சந்திப்பு

அன்புடையீர்! வணக்கம்.

நமது சங்கங்களின் சார்பாக **20-வது** மங்கல சந்திப்பு வருகின்ற **23.03.2025 ஞாயிற்றுக்கிழமை** காலை மணி **9.00 - 1.00** மணி வரை சிதம்பரம், கனகசபை நகர், காசி மடம் தெருவில் அமைந்துள்ள **ஸ்ரீ சிவகாமி அம்மை கலையரங்கத்தில்** நடைபெற உள்ளது. மணமகன், மணமகள் பதிவுகளை கீழ்கண்ட வழிமுறைகளில் ஏதேனும் ஒன்றை பின்பற்றி தாங்களே தங்களுடைய கைபேசி மூலம் பதிவு செய்யும் முறையையும் அறிமுகப்படுத்தியுள்ளோம். கீழ்கண்ட முகவரியில் **நேரடியாகவும்** பதிவு செய்து கொள்ளலாம்.

பதிவு ஒன்றுக்கு ரூபாய் **600/-**ஐ **Sivaraman Govind Pillai - G-Pay No : 75985 22750**-ல் செலுத்தவும். பதிவு செய்ய விரும்பும் அனைவரும் **13.03.2025**-க்குள் பதிவு செய்து ஒத்துழைக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். **தனிப்பிரதி மட்டும் வேண்டுவோரும்** கீழ்கண்ட முகவரியில் பதிவு செய்து கொள்ளவும்.

மணமகள் / மணமகன் **பதிவு எண்** தங்களுடைய கைபேசிக்கு **மார்ச் 1**-க்கு பிறகு குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்கப்படும். தபாலில் பெறுவதற்கு ஏற்படும் **கால தாமதங்களுக்கு** நாங்கள் பொறுப்பல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

**A.G. சிவராமன் பிள்ளை**
தலைவர், குமராட்சி ஒன்றிய கார்காத்தார் சங்கம்

**N. முருகன் பிள்ளை**
தலைவர், சிதம்பரம் நகர கார்காத்தார் சங்கம்

**பதிவு செய்யும் வழிமுறைகள்**

- **75985 22750 WhatsApp** நம்பருக்கு வணக்கம் என்ற குறுஞ்செய்தி அனுப்பி லிங்கை பெற்று பதிவு செய்து கொள்ளலாம்.
- **https://qr-codes.io/ZxG60V** என்ற லிங்கில் சென்று பதிவு செய்து கொள்ளலாம்.
- இந்த **QR Code**-ஐ ஸ்கேன் செய்து லிங்கைப் பெற்று பதிவு செய்து கொள்ளலாம்.
- இந்த முறையில் பதிவு செய்தால் மட்டும் நீங்கள் பதிவு செய்யும் **Email** முகவரிக்கு பதிவு விபரங்கள் வந்து சேரும்.

தொடர்பு முகவரி : **A.G. சிவராமன் பிள்ளை - Cell: 97870 68062**
**49, லால்கான் தெரு, சிதம்பரம் - 608 001.**
**D. புகழேந்தி - Cell : 97864 11357**

## விண்ணப்ப படிவம்

| | |
|---|---|
| பெயர் | ........ ஆண்/பெண் |
| பிறந்த தேதி | ........ |
| உயரம் (செ.மீ) | ........ |
| நட்சத்திரம் | ........ |
| கோத்திரம் | ........ |
| நிறம் | ........ |
| கல்வி தகுதி | ........ |
| பணி விபரம் & ஊதியம் | ........ |
| தந்தை பெயர் | ........ |
| பூர்வீகம் | ........ |
| பணி விபரம் | ........ |
| தாயார் பெயர் | ........ |
| பூர்வீகம் | ........ |
| பணி விபரம் | ........ |
| உடன் பிறந்தோர் | ஆண் ........ பெண் ........ |
| விருப்பம் மற்றும் இதர தகவல்கள் | ........ |
| தொடர்பு முகவரி | ........ |
| | ✆ ........ |
| | email ........ |
| | புத்தகத்தை தபாலில் பெற விருப்பமா ? ஆம்/இல்லை |

## சங்கப் பலகை

பங்கு பெறுவோர் : கோமதி, மீனா, வசுமதி, சித்ரா, ஆண்டாள், கௌரி, தீபிகா, பிரியா.

இடம் : மந்தவெளி, கோமதியின் வீடு.

மாலை 4 மணி அளவில் அனைவரும் கூடுகின்றனர்.

கோமதி வாங்க! வாங்க!! நீங்க எல்லாரும் எங்கள் வீட்டுக்கு வந்தது எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கு எனக் கூறியபடி கணவர், குழந்தைகளைத் தோழிகளுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

கோமதி : முதல்ல juice எடுத்துக்கோங்க! அப்புறமா நமது அரட்டையைத் தொடங்குவோம்.

பிரியா : என்ன ஜுஸ், ஓ! மாதுளம்பழமா! வீட்லே மாதுளம் பழம் juice போட்டால், அதில் ஒரு Spoon பால் சேருங்கள்.

வசுமதி : ஏம்பா? நான் இதுவரைக்கும் சேர்த்ததில்லையே!

பிரியா : பால் ஒரு ஸ்பூன் சேர்த்தால், தொண்டையில் ஒரு கரகரப்பு ஏற்படுமே, அது இருக்காது.

வசுமதி : தாங்க் யூ பிரியா! ஒரு குறிப்பை இன்று தெரிந்து கொண்டேன். ஆண்டாளக்கா! இந்த மாத பண்டிகைகளைப் பற்றி சொல்லுங்க அக்கா!

சித்ரா : முதல்ல பொங்கல் எப்படி போயிற்று? அதை சொல்லுங்க. அனைவரும் வீட்லே gas அடுப்பிலே பொங்கல் வைத்து படைத்தோம்.

மீனா : அந்த காலத்தில் கிராமத்தில் தாத்தா வீட்டில் கொண்டாடும் பொங்கல் நினைவுக்கு வர, அந்த நாள் திரும்பவும் வராதா? ன்னு ஒரு ஏக்கமும் வந்தது.

கௌரி : நிஜம் தான்! பெரிய முற்றத்திலே அடுப்புகளை வைத்து மூன்று பானைகளில் பொங்கல் பொங்கி, அனைவரும் பாலும் தண்ணியும் சேர்த்து பொங்கும் போது ‘பொங்கலோ, பொங்கல்’ என சத்தமிடுவது காதுகளில் ரீங்காரமிட்டது.

கோமதி : கூடத்திலே 13 தலைவாழையிலைப் போட்டு பச்சடி, கூட்டு, பொரியல், பொங்கல், சுண்டல், வாழைப்பழம், வெல்லம், நெய்யிட்டு படைப்பது எங்கள் வீட்டு வழக்கம். அதாவது வீட்டு தெய்வத்துக்கும் படைப்பதாக கூறுவார்கள்.

தீபிகா : எனக்கு மாட்டுப்பொங்கல் நினைவுக்கு வருது. அக்கா, மாட்டின் கழுத்தில் ஒரு மாலை கட்டுவாங்களே! அது என்ன மாலை?

ஆண்டாள்: அது நெட்டிமாலை, அது மட்டுமல்ல கரும்பு, வாழைப்பழம், வாழை இலை போன்றவைகளையும் சேர்த்து மாடுகளின் கழுத்தில் கட்டுவார்கள்.

சித்ரா : எங்கள் அம்மா கிராமத்தில் ஒரு வருஷம் பொங்கல் கொண்டாட போனேன். அந்த மாடுகள் அதைக் கட்டியவுடன் தலையை இப்படியும் அப்படியும் அசைத்து, அதைச் சாப்பிடும் அழகே தனி. மாடுகளைக் குளிப்பாட்டி மஞ்சள், குங்குமமிட்டு, கொம்புகளுக்கு வர்ணம் தீட்டி, அவைகளுக்கு வாழை இலையில் பொங்கல், சாதம், காய்கறிகளைக் கலந்து கையில் பிடித்துக் கொள்ள, அவைகள் ரசித்து சாப்பிடும்.

கோமதி : ஆமாம் ! மாலையில் மஞ்சு விரட்டு நடத்துவார்கள். ஒரு பணியாளர் பறை கொட்டியபடி, கடைசி வீட்டிற்குச் சென்று மாடுகளை திரட்டிக்கொண்டு, வரிசையாக அனைத்து வீட்டு மாடுகளும் தெருவில் வருவது பார்க்க அழகா இருக்கும்.

சித்ரா : அது முடிந்ததும், மாட்டு வண்டி பூட்டிக்கொண்டு, குழந்தைகள் அனைவரும் அதில் இடிச்சு, புடிச்சு அமர்ந்து ஒரு சில கிலோ மீட்டர் தூரம் சென்று வருவோம். அதில் வண்டியோட்டிகள் போட்டி போட்டுக் கொண்டு வேகமாகச் செல்லுவர். அதெல்லாம் பொற்காலம்! அக்கா, நீங்க மற்றதைப் பற்றியும் கூறுங்க!

ஆண்டாள்: தை மாத அமாவாசை நாங்கூர் கருட சேவை விழா, தைப்பூசம், இக்காலத்தில் மிகவும், விமரிசையாக கொண்டாடப்படுகின்றன. டீடெயிலாக கூறினால் நமக்கு நேரம் போதாது. சுருக்கமாக சொல்றேன்.

தீபிகா : ஒண்ணு எனக்குத் தெரியும். தை அமாவாசை பெருமாளுக்கும், தைப்பூசம் முருகனுக்கும் விசேஷம்.

ஆண்டாள்: ஆமாம்பா! தை அமாவாசை ஜனவரி 29–ஆம் தேதியும், தைப்பூசம் பிப்ரவரி 11–ஆம் தேதியும் வருகின்றன. அமாவாசையன்று, திருமங்கையாழ்வாரின் உற்சவர் திருநகரியிலிருந்து கிளம்பி, 11 பெருமாள்களையும் சேவித்து, மங்களாசாசனம் செய்து, திருநாங்கூர் நாராயணப் பெருமாள் கோவிலுக்கு எழுந்தருள அழைப்பு விடுப்பார். மாலை 6 மணி அளவில் திருநாங்கூரில் கார்காத்தார் தெருவில் உள்ள பெருமாள் கோவிலுக்கு வந்து விடுவார். அடுத்த நாள் அனைத்து பெருமாளின் உற்சவர்களும் சுமார் 12 மணி அளவில் கோவிலின் முன் எழுந்தருள, திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்விப்பார். பின் ஆரத்தியுடன் கோவிலுக்குள் சென்று விடுவர்.

மீனா : நான் ஒரு முறை திருநாங்கூர் சென்று கருட சேவை தரிசனம் பெற்றுள்ளேன். இரவு 10 மணி அளவில், அனைத்து பெருமாளும் கருட சேவைக்கு அலங்காரத்துடன் தயாராகி, ஒருவர் பின் ஒருவராக கோவிலுக்கு வெளியே வர, ஆழ்வார் குடதீபமும், கற்பூர ஆரத்தியும் காட்ட, 12 பெருமாள்களும் அத்தெருவில் எழுந்தருளி காட்சி அளிக்கின்றனர். அது ஒரு கண்கொள்ளாக் காட்சி.

ஆண்டாள்: தைப்பூசம் முருகனுக்குரிய பண்டிகை. தை மாத பௌர்ணமியும், பூச நட்சத்திரமும் சேரும் தினத்தில் இத்திருநாள் கொண்டாடப்படுகிறது. மிகவும் மங்கலகரமான தினம், பார்வதி தேவியின் வேல்கொண்டு முருகப்பெருமான் சூரபத்மனை வென்ற தினம். முருகன் கோவில்களில் காவடி எடுக்கும் பழக்கம் உள்ளது.

வசுமதி : எல்லா முருகன் கோவில்களிலும் முக்கியமாக பால் காவடி, அலகு காவடி, பால்குடம் எடுக்கும் வழக்கம் உள்ளது. 48 நாட்கள்விரதம்இருந்து,நடைப்பயணமாககோவிலுக்கு வருபவர்களும் உண்டு. தலத்தில் ஓரிடத்தில் பக்தர்கள் கூடி, ஊர்வலமாக கோவிலுக்கு வந்து, முருகப்பெருமானுக்கு அபிஷேகம் செய்விப்பார்கள்.

பிரியா : மலேஷியாவில் உள்ள பத்துமலை முருகன் கோவிலும், இலங்கை கதிர்காமத்திலும் மிகவும் கோலாகலமாக, தைப்பூசத் திருவிழா நடைபெறுகிறது.

சித்ரா : அங்கு மட்டுமல்ல; ஆங்கில ஆதிக்கத்தில் தமிழர்கள் எங்கெல்லாம் சென்று செட்டிலாகி உள்ளார்களோ, அத்தனை நாடுகளிலும் அதாவது தென்கிழக்காசிய நாடுகள், சிங்கப்பூர், இந்தோனேஷியா, மொரீஷியஸ், ஃபிஜி, தென் ஆப்பிரிக்கா என அனைத்திடங்களிலும் நம் தமிழர்கள் தைப்பூசத்தைச் சிறப்பாக கொண்டாடுகின்றனர்.

பிரியா : ஆமாம்பா! அது போல நாம் தற்சமயம் கடல் கடந்து அமெரிக்கா, லண்டன், கனடா என சென்று, அங்கும் தற்சமயம் விமரிசையாக நடைபெறுகிறது. அதுவும் லண்டனில் முருகர் கோவிலில் மிகவும் விசேஷமாக கொண்டாடுகின்றனர்.

கௌரி : ஆண்டின் கடைசியில் சில இறப்புகள் நமக்கு வருத்தத்தை அளிக்கிறது. தபலா மாஸ்டர் ஜாகிர்உசேன், டிசம்பர் 15 ஆம் தேதி சான்பிரான்ஸிஸ்கோவில் இறைவனடி சேர்ந்துள்ளார்கள். நமது முன்னாள் பிரதமர் திரு. மன்மோகன் சிங் அவர்களும் டிசம்பர் 26–ஆம் தேதி இரவு காலமாகிவிட்டார். அவர்களைப் பற்றி ஏதேனும் தெரிந்தால் கூறுங்கள்.

சித்ரா : நான் ஜாகிர் உசேன் குறித்துக் கூறுகிறேன். அவர் மும்பையில் மாஹிம் என்னும் பகுதியில், தபலா சக்கரவர்த்தியான உஸ்தாத் அல்லாரக்காவின் மகன் ஆவார். அவர் தினப் பாராயணமாக சரஸ்வதி தேவி சுலோகங்கள் மட்டுமன்றி குரான், பைபிள் என சிறுவயதிலிருந்தே ஓதுவது வழக்கம். அவருக்கு நமது மத்திய அரசு பத்மஸ்ரீ, பத்மபூஷண், பத்மவிபூஷண் விருதுகளை அளித்து கௌரவித்துள்ளது. மேலும் அவர் நான்கு முறை 'Grammy Awards' வாங்கியுள்ளார். அவர் இறந்த போது அவரின் வயது 73. இன்னும் சில வருடங்கள் நம்முடன் இருந்து, இசைத்தேனை வழங்கியிருக்க ஆண்டவன் அருள்புரிந்திருக்கலாம்; ஏனோ தெரியலை; அழைத்துக்கொண்டு விட்டார்.

வசுமதி : நமது முன்னாள் பாரத பிரதமர் திரு. மன்மோகன்சிங்ஜி 92 வயது வரை வாழ்ந்து மறைந்துள்ளார். இவர் தற்போது பாகிஸ்தானில் உள்ள பஞ்சாபில் 1932ஆம் ஆண்டு, செப்டம்பர் 26ல் பிறந்தவர். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். டில்லியில் பேராசிரியராக, நாட்டின் தலைமை பொருளாதார ஆலோசகராக, இந்திய ரிசர்வ் வங்கி கவர்னராகவும் பதவி வகித்துள்ளார். நரசிம்மராவ் பிரதம மந்திரியாக இருந்தபோது, இவருக்கு நிதியமைச்சர் பதவி கொடுத்து அரசியலுக்குள் இழுத்தார். இவர் இறக்கும் வரை தேர்தலில் நின்று, ஜெயித்து மந்திரியாக ஆனதில்லை.

தீபிகா : ஆமாம்! ஆமாம்! ஒருமுறைதான் எலெக்ஷனுக்குநின்றுதோற்றுவிட்டார். அதன் பின் ஒன்லி ராஜ்யசபா மெம்பர்தான். ஆனால் 13வது பிரதமராக 10 ஆண்டுகள் பதவி வகித்துள்ளார். 'இந்திய பொருளாதாரப் புரட்சியின் கிங்' என இவர் போற்றப்படுகிறார். இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தை 2009ல் நடைமுறைப்படுத்தினார். சீக்கிய மதத்தைச் சேர்ந்த இவர், நேருவுக்குப் பின் பத்தாண்டுகள் பிரதமராக பதவி வகித்த பெருமை பெற்றவர்.

கௌரி : சரிப்பா! இப்ப சின்னப் பையனை வாழ்த்துவோம்பா! நம்ம தமிழ்நாட்டுக்கும், நமது தேசத்திற்கும் பெருமை சேர்த்த குகேஷ் D. ரஜினிகாந்த் அவர்களை சர்வதேச செஸ் சாம்பியன்ஷிப் விருதினைப் பெற்றமைக்காக வாழ்த்துவோம்.

கோமதி : அவரின் அப்பா, கோச், வேலம்மாள் பள்ளிக்கு எல்லாம் எவ்வளவு பெருமையாக இருக்கும்! 18 வயதில், டிங்லாரன் எனும் சீன விளையாட்டு வீரரைத் தோற்கடித்து, விருதினைக் கைப்பற்றி உள்ளார். மெண்டல் கன்டிஷனிங் கோச் Paddy Upton அவர்களுக்கும், விஸ்வநாதன் ஆனந்த் அவர்களுக்கும் கடமைப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

ஆண்டாள்: சரிப்பா! ஜெனரலா எதுவுமே பேசலையே! வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்களேன்!

மீனா : மழைநீர் துளிகளில் நம்பிக்கை விதை எனும் தலைப்பில் வந்த ஒரு செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். அறிவியல் சுற்றுச்சூழல் ஆராய்ச்சிமையத்தின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர் சுனிதா நரேன். இந்திய காடுகளை மேம்படுத்தும் ஆய்விலும், அது தொடர்பான பணியிலும் ஈடுபட்டு உள்ளார். பருவநிலை மாற்றத்தால், இந்தியாவில் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து விவாதம் ஏற்படுத்தி உலகின் கவனத்தை தன் பக்கம் ஈர்த்து வருகிறார். பிரபல அமெரிக்க குளிர்பானங்களில் பூச்சிக்கொல்லி நஞ்சு இருந்ததை தைரியமாக சுட்டிக் காட்டியவர். அறிவியல் முறைப்படி மழைநீரை சேகரிக்கும் தொழில்நுட்பம் உருவாக்கியதற்காக, தண்ணீருக்கான நோபல் பரிசு என புகழப்படும் 'ஸ்டாக் ஹோம் வாட்டர் அவார்டு' என்ற விருதினையும், பத்மஸ்ரீ விருதினையும் இவர் பெற்றுள்ளார். ராஜஸ்தானில் ஆல்வார் பகுதியில் இவர் உருவாக்கி உள்ள பசுமையை மீட்கும் தொழில்நுட்ப அமைப்பு உலகுக்கு முன் உதாரணமாக விளங்குகிறது.

வசுமதி : நான் ஒரு நியூஸ் சொல்றேன். இந்தியாவில் பிறந்து பிரான்சுக்கு குடிபெயர்ந்த சையது ஹைதர் ரசா, ஓர் உலகப் புகழ் பெற்ற ஓவியக் கலைஞர். பத்மபூஷண், பத்மவிபூஷண் விருதுகள் பெற்றவர். இவர் 2016ல் தனது 94ஆம் வயதில் மறைந்தார். இவரது ஓவியங்கள் விலை மதிப்பு மிக்கவை. இவரின் 'ஜெஷ்டேஷன்' என்ற ஓவியம் 51¾ கோடிக்கும், 'தபோவனம்' என்ற ஓவியம் 28 கோடிக்கும், 'சவுராஷ்டிரா' என்ற ஓவியம் 16 கோடி ரூபாய்க்கும் ஏலம் போனது. 2½ கோடி ரூபாய் மதிப்பிலான 'பிரக்ருதி' என்ற ஓவியம் 1992ல் வரையப்பட்டு, ஏலத்துக்காக மும்பையில் வைக்கப்பட்டிருந்த நிலையில், களவு போய்விட்டது. மும்பை போலீஸ் தேடிக் கொண்டுள்ளதாக செய்தி.

ஆண்டாள்: பிரியா, கீரைகள் குறித்து இந்த மாதமும் சொல்லுவதாக போன மாதம் கூறினாயே! இந்த மாதம் எந்தெந்த கீரைகள்?

பிரியா : இப்ப நான் சிறுகீரை, பசலைக்கீரை, மணத்தக்காளி கீரை குறித்து சொல்றேன். சிறுகீரை, சொறி, சிரங்கு, படை போன்ற தோல் நோய்களைப் போக்கும். சிறுநீர் எரிச்சலைத் தீர்க்கும். பசலைக்கீரை புது இரத்த உற்பத்திக்கு உதவும். சிறுநீர் கடுப்பு, நீரடைப்பு தணிக்கும். மலச்சிக்கலை நீக்கும். மணத்தக்காளி கீரை வாய்ப்புண், வயிற்றுப்புண்களை குணமாக்கும். உடல் சூட்டைத் தணிக்கும். சோர்வைப் போக்கும்; நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். அடுத்த மாசம் மீதி கீரைகளைப் பார்ப்போம். கோவில் யார் சொல்லப் போறீங்க?

ஆண்டாள்: மார்கழி மாசமா இருக்கறதால, ஏதாவது ஒரு பெருமாள் கோவிலைப் பற்றி சொல்றேன். நமக்கு நாலாயிர திவ்ய பிரபந்தம் கிடைக்க காரணமாக இருந்த நாதமுனிகள் அவதரித்து, பூஜை செய்த காட்டுமன்னார்கோவில் வீரநாராயணப் பெருமாள் கோவிலுக்குப் போவோம். வீராணம் ஏரிக்கரையில் உள்ள இத்தலம் ஸ்ரீ வீர நாராயணபுரம், வீர நாராயண சதுர்வேதி மங்கலம் எனவும்போற்றப்படுகிறது. முதலாம்பராந்தகசோழனால் கற்றளியாக மாற்றப்பட்டதாக, உத்தம சோழனின் கல்வெட்டு கூறுகிறது. ஆகையால் இக்கோவில் 1000 ஆண்டுகளுக்கு முந்தையது. சடையவர்ம சுந்தர பாண்டியன் 13ஆம் நூற்றாண்டில் தற்போதுள்ள பெருமாளைப் பிரதிஷ்டை செய்து, கோவிலையும் புதுப்பித்துள்ளார். மூலவர் வீரநாராயணப் பெருமாளும், மரகதவல்லித் தாயாரும் கிழக்கு நோக்கி தனித்தனி சந்நிதிகளில் அருள்பாலிக்கின்றனர். நாதமுனிகளும், அவரது பேரன் ஆளவந்தாரும் அவதரித்த தலம். இக்கோயிலில் நரசிம்மர், வராகர், நாதமுனிகள், ஆளவந்தார் ஆகியோருக்கும் சந்நிதிகள் உள்ளன. மூன்று கல்வெட்டுக்கள் இக்கோயிலை துவாராபதி என குறிப்பிடுகின்றன. மூலவர், ஸ்ரீதேவி, பூதேவி சிற்ப சாத்திரத்தில் கூறப்பட்டுள்ளபடி சுதா, சில்ப, தாரு என்ற முறையில் சுதை பிம்பங்களாக உள்ளன. கருவறை விமானத்தில் இரு பக்கங்களிலும் பாலி எழுத்துக்களிலும், பண்டைய தமிழ் எழுத்துக்களிலும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

வசுமதி : அக்கா, என் கணவரின் பூர்விகமாக இருந்தும், நான் இன்னும் இந்த கோவிலைப் பார்த்ததில்லை. அடுத்த முறையாவது குலதெய்வ கோயிலுக்குப் போகும்போது நிச்சயம் பார்க்க வேண்டும்க்கா.

சித்ரா : அடுத்த மாசம் வீடா அல்லது வெளி இடத்திலா?

ஆண்டாள்: அடுத்த முறை பெசன்ட் நகர் அறுபடை வீடு முருகன் கோவிலில் சந்திக்கலாம். நிறைய இடம் இருக்கும்.

அனைவரும் ஆமோதிக்க, கோமதி அனைவருக்கும் வழங்கிய அருமையான காரட் அல்வா, பஜ்ஜி, காபியுடன் மகிழ்ச்சியாக விடை பெற்று அவரவர் இல்லம் திரும்பினர்.

நன்றி! வணக்கம்!

## உறவுகள்

''யாதும் ஊரே யாவரும் கேளீர்''

– கணியன் பூங்குன்றனார்.

உறவு என்பது சொந்தம், நம் நலனை விரும்பும் அனைவரும் நமக்கு உறவே. ஒரு மரம் எப்படி புதிதுபுதிதாய் துளிர் விட்டுக் கொண்டே இருக்கிறதோ அதுபோல் தான் உறவுகளும், புதிது புதிதாய் விரிந்து கொண்டே இருக்கும். இன்று புதிய உறவுகளுக்கு இருக்கும் மரியாதை பழைய உறவுகளுக்கு இருப்பதில்லை. பழைய உறவுகளே ஆணி வேர்கள், அவைகளின் பலத்தில் தான் புதிய உறவுகள் துளிர் விட்டு வளர்கின்றன. உறவுகளை உருவாக்கிக் கொள்வதன் பின்னணியில் இருப்பது தேவைகள்தான். உறவு முறையால் அன்பு வளர்க்கப்படுகிறது. ஒற்றுமை வலுப்படுகிறது, சமுதாயத்தில் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கிறது. வாழ்க்கையின் உந்து சக்தியே புரிதல்தான். எந்த உறவாக இருந்தாலும் புரிதல் மட்டும் வலிமையாக இருந்தால் வாழ்க்கை வரமாகும். உறவுகள் மூன்று வகைப்படும்.

1. இரத்த உறவுகள் 2. சட்ட உறவுகள் 3. நட்பு உறவுகள்.

1. இரத்த உறவுகள் / குடும்ப உறவுகள் :

இரத்த உறவுகள் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டவை. கண்ணுக்குத் தெரியாத பாசமெனும் கயிற்றால் இறுக்கமாகக் கட்டப்பட்டவை. தாத்தா, பாட்டி, தாய், தந்தை, சகோதரர்கள், சகோதரி, பெயரப்பிள்ளைகள் ஆகியோர் உயிரியல் முறையில் தொடர்பானவர்கள். பெரும்பாலும் முன்பு இரத்த உறவுகள் பாசத்தாலும், உணர்வாலும் பின்னப்பட்டிருந்தது. இன்று பதவியாலும், பணத்தாலும் தான் பிணைக்கப்படுகிறது. குழந்தைகளாக இருக்கும் போது உள்ள பாசம், நேசம் அவர்கள் பெரியவர்களாக வளர வளர குறைகிறது. மருமகள், மருமகன் என்ற புதிய உறவுகளின் வருகையால், பழைய உறவுகள் துண்டிக்கப்படுகிறது. தாத்தா, பாட்டிகளின் பெயர் சொல்லவும், புகழ் விளங்கவும் பிறந்தவர்கள் பெயரன் பெயர்த்திகள் என்பர். மரபு சார்ந்த குடும்ப வழக்கில் தாத்தா, பாட்டிகளின் பெயர்களையே பெயரன், பெயர்த்திகளுக்கு வைக்கும் வழக்கம் இருந்தது. குறையில்லாத நிறை மனிதனை காண்பது அரிது. குடும்ப உறவுகள் வலுப்பட விட்டுக் கொடுத்தல், புரிந்துணர்வை ஏற்படுத்துதல் அனைவர்க்கும் நல்ல முடிவுகளை எடுக்க வாய்ப்பளித்தல், ஒரு வேளையாவது ஒன்றாக அமர்ந்து உணவு அருந்துதல்; அனைவரும் ஆண்டிற்கு ஒரு முறையாவது சேர்ந்து சுற்றுலா செல்லுதல், அனைவரும் கலந்து ஆலோசித்து முக்கிய முடிவுகளை எடுத்தல் போன்றவைகள் குடும்ப உறவுகள் இனிதாக அமைய வழிவகுக்கும்.

2.சட்ட உறவுகள் :

கணவன், மனைவி உறவு என்பது மற்ற எல்லா வகை உறவுகளில் இருந்தும் வேறுபட்டது. அது சுமார் 20 ஆண்டுகளுக்கு பின் ஏற்படுகின்ற சட்ட உறவு. இடையிலே வந்த உறவு என்றாலும் இறுதி வரை மட்டுமின்றி அடுத்தடுத்த தலைமுறை வரை தொடரும் உறவு அது. ஒருவர் மீது ஒருவர் அக்கறை; பூரண நம்பிக்கை; நல்ல புரிதல் அவசியம். ''விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை'' என்பதற்கு ஏற்ப வாழ்தலே சிறந்த இல்வாழ்க்கை. அந்த காலத்தில் மனைவி என்றால் மனை+வி அதாவது வீட்டை விளங்கச் செய்பவள் என்றார்கள். கணவன் வேலைக்குச் செல்வான், மனைவி வீட்டை நிர்வகிப்பாள் என்ற நிலை மாறி, இன்று பெண்கள் ஆணுக்கு நிகராகப் படித்து வேலைக்குச் செல்கிறார்கள். அதனால் மனைவி குடும்பத்தலைவி, இல்லதரசி என அழைக்கப்படுகிறாள். இந்தச் சூழலில் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவ வேண்டும் எனில் கணவன், மனைவி இருவரும் குடும்பப் பணிகளைப் பகிர்ந்து செய்தல் வேண்டும். மன்னர்கள் காலத்தில் இளவரசிகள் ''சுயம்வரம்'' மூலமும், தலைவிகள் தலைவனின் வீரத்தைச் சோதித்தும் தங்கள் துணைகளைத் தேர்வு செய்தனர். இடையில் ஆணாதிக்க சமுதாயம் பெண்களைப் படிக்க விடாமல் வேலைக்குச் செல்ல விடாமல் வீட்டிற்குள்ளே முடக்கி வைத்தனர். ஆனால் பெண்கள் இன்று, மீண்டும் படித்து, வேலைக்குச் சென்று ஆண்களுக்கு நிகராகத் தங்கள் துணையைத் தாங்களே தேர்வு செய்யும் உரிமையைப் பெற்று வருகின்றார். சங்க காலத்தில் திருமணம் ஆகாத ஆணும், பெண்ணும் ஓரிடத்தில் சந்தித்து தங்கள் பெற்றோருக்குத் தெரியாமல் காதல் கொள்வது 'களவொழுக்கம்'' என்று சொல்லப்பட்டது. அந்த நிலை இன்று மீண்டும் வந்துவிட்டது. இன்றைய இளைஞர்களிடம் வந்துள்ள புதிய கலாச்சாரம் ''சேர்ந்து வாழ்தல்'' (Living Together) ஆணும் பெண்ணும், பெண்ணும் ஆணும், சேர்ந்து வாழ சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ''கற்பொழுக்கம்'' என்பது இல்வாழ்க்கை, பண்டைய தமிழ் மரபில் சேர்ந்து வாழ்தல், திருமணம் செய்து கொண்டு குடும்பமாக வாழ்தல் ஆகும்.

**நட்பு உறவுகள் :**

''உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு''.

சொந்தங்கள் என்பது பனித்துளி போன்றது. சிறுபொழுதில் மறைந்து விடும், நட்பு என்பது பரந்த வானம் போன்றது. நம்மைச் சுற்றி எப்போதும்

நிலைத்து நிற்கும். நட்பு, தோழமை, சினேகம் என்பது இருவரிடையே அல்லது பலரிடையே ஏற்படும் ஓர் உறவாகும். வயது, மொழி, இனம், நாடு என்ற எந்த எல்லைகளும் இன்றி புரிதலையும் அனுசரித்தலையுமே அடிப்படையாகக் கொண்டது. கோப்பெருஞ்சோழன் – பிசிராந்தையார்; பாரி – கபிலன்; அதியமான் – ஔவையார்; துரியோதனன் – கர்ணன்; கிருஷ்ணன் – குசேலன் போன்ற பலர் நட்புக்கு இலக்கணமாக வாழ்ந்திருக்கிறார்கள். நம் ஒவ்வொருவர் வாழ்விலும் நம் சிந்தனைகளையும், நற்குணங்களையும் பட்டை தீட்டி வாழ்விலும், பணியிலும் பிரச்சனை ஏற்படும் போது தீர்வினைத் தருவது நட்புறவு மட்டுமே. "நட்பில்லா மனிதன் என்றால் அவனொரு மனிதன் இல்லை; நட்புக்காக உயிரைத் தந்தால் அவனைப் போன்று புனிதன் இல்லை." "கூடா நட்பு கேடாய் முடியும்" என்ற மூதுரையையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். நல்ல நட்புறவு உள்ளவர்கள் மகிழ்வுடன், நீண்ட ஆயுளுடன் வாழ்வதாக ஓர் ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

உறவு வட்டம் பெரியதாக இருக்கும் குடும்பங்களில் மனநிறைவும், மகிழ்ச்சியும் தானாக வந்து சேருகிறது. மாறாக உறவை ஒதுக்கும் குடும்பங்களில் மன உளைச்சலும், பதற்றமுமே காணப்படுகிறது. கணவன், மனைவி உறவில் விரிசல் ஏற்பட்டு இன்று குடும்ப நல நீதி மன்றங்களில் பல ஆயிரம் வழக்குகள் நடந்து வருகின்றன. நட்புறவில் பணம் கொடுக்கல், வாங்கலில் மன வருத்தம் ஏற்பட்டு நட்பு முறிகிறது. எந்த உறவு மகிழ்வைத் தரும் என்று முடிவு எடுக்கும் பொறுப்பை உங்களுக்கே அளிக்கிறேன்.

அனைவருக்கும் என் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

– ப. சுவாமிநாதன்,

மயிலாடுதுறை.

**9360185457**

## ஆங்கிலமயமாதல்

காலணிய ஆட்சி காலத்தில் தொடங்கி, உலகமயமாதல் மற்றும் நவீனமயமாதலால் தெரிந்தோ தெரியாமலோ ஆங்கிலம் நமது தினசரி வாழ்வில் ஓர் அங்கமாகிவிட்டது. ஒரு நாளில் ஆங்கில எழுத்துக்கள் நம் கண்களில் படும் அளவிற்கு தமிழ் எழுத்துக்கள் படுவதில்லை.

பெரு நகரங்களில் பள்ளி, கல்லூரி, அலுவலகம் தொடங்கி நாம் பயன்படுத்தும் அலைபேசி மற்றும் இதர சாதனங்கள் வரை ஆங்கிலம் பிரதானமாக பயன்படுத்தப்படுகிறது.

ஆங்கிலம் நம்மோடு கலப்பதினால் நம் மொழியிலுள்ள சில வார்த்தைகளை நாம் இழக்கிறோம் என்பது தான் உண்மை, உதாரணத்திற்கு கடைசியாக நாம் எப்போது 'பள்ளி', 'கடிகாரம்' போன்ற வார்த்தைகளை பயன்படுத்தினோம்? பள்ளி என்ற சொல்லை செய்திகளில் கேட்பதோடு சரி, நாம் பயன்படுத்துவதில்லை.

இப்படி நிறைய வார்த்தைகள் இன்றே சாமானியர் பழக்கத்திலிருந்து மறைந்து கொண்டிருக்கிறது. இனி வரும் காலங்களில் செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்ப வளர்ச்சியால் இன்னும் ஆங்கிலம் அதன் வேரினை நம் மனதில் ஆழமாய் பதிக்கக் கூடும் (என்னதான் தமிழ் மொழியும் அதில் இருந்தாலும் கூட) இதனால் நம் அடுத்த தலைமுறையினர் இன்று நாம் பயன்படுத்தும் சில வார்த்தைகளை பயன்படுத்தாமல் போக வாய்ப்புள்ளது.

இப்படி இருக்க, நம் மொழியை எந்தவித சிதைவும் இன்றி அடுத்த தலைமுறைக்கு கொடுப்பது எப்படி?

* நாம் புத்தக வாசிப்பாளராக இருந்தால் பெரும்பாலும் தமிழ் புத்தகங்களை படித்து அதனை வீட்டில் சேகரிக்கலாம்.

* நாட் குறிப்பு எழுதுபவராக இருந்தால் அதனை நம் மொழியில் எழுதலாம்.

* பெரு நகரங்களில் வசிக்கும் மக்கள் வீட்டில் தமிழ் செய்தித்தாள்களை வரவழைத்து படிக்கலாம்.

* இப்படி நம் வீட்டிலிருக்கும் சிறார்களுக்கு தமிழை பார்க்க, படிக்க வீட்டிலேயே வழி வகுத்தோமானால் ஓர் அளவிற்கு அவர்களிடத்தில் தமிழ்மொழியை, அதன் சிறப்பை கொண்டு சேர்க்க முடியும்.


* ஏதேனும் தொழில்நுட்ப உதவிக்காக நாம் அழைக்கும் உதவி எண்ணில் தமிழ்மொழியை தேர்வு செய்யலாம்.

* பணம் எடுக்கும் இயந்திரத்தில் தமிழை தேர்வு செய்யலாம்.


* அலுவல் வேலை தவிர்த்து மற்ற நேரங்களில் தமிழ் தெரிந்தோரிடம் தமிழில் பேசலாம்.

ஆங்கிலத்தில் "DECAY THROUGH DISOSE" என்பார்கள். "பயன்படுத்தாததன் மூலம் சிதைவு". வார்த்தைகளை பயன்படுத்தாமல் போனால் அது சிதைந்து போகக்கூடும். எனவே முடிந்த வரை தமிழ் வார்த்தைகளை படித்து எழுதி, பயன்படுத்து அடுத்த தலைமுறையினருக்கு சிதைவின்றி விட்டுச் செல்வோம்.

இரா. சோமசுந்தரம், சென்னை. (ஆரலூர்)



# சிறுவர் பகுதி




தயாரிப்பு **தஞ்சை தியாகு**

அலைபேசி: 94437 00375

Email: thiagu1943@gmail.com


துன்பம் அனுபவித்த காலத்தை மறந்துவிடு ஆனால் அது கற்பித்த பாடத்தை மறந்துவிடாதே.

## அவரோட நிலைமை என்ன?

ஒரு ஊர்ல ஒரு ராஜா இருந்தார். அவருக்குப்பிறந்தநாள் வந்தது. அரண்மனையிலே அவர் உக்கார்ந்து இருக்கார். அரண்மனைக்கு வெளியே ஒரு பெரிய கியூ. முக்கியமானவர்களெல்லாம் அரசரைக்கண்டுகிட்டு; போறத்துக்காக காத்துக் கிட்டிருக்காங்க. அவங்க அவங்களாலே எது முடியுமோ அதை பரிசா குடுத்துட்டு அவரை வணங்கிட்டுப் போறது வழக்கம். ஆனா அந்த ராஜாவோ ஒரு மூடி டைப் !சில நேரம் சந்தோஷமா இருப்பார். சில நேரம் விபரீதமா நடந்துக்குவார். ஒரு மாதிரியான ராஜா! அன்னைக்குப்பார்த்து அவரு மூடு சரியில்லை. வரிசையில் நின்ன ஒருத்தர் முதல்ல உள்ளே போனார்.அவரு கையில இருந்த ஒரு எலுமிச்சம் பழத்தை ராஜா கையில குடுத்தார்.

ராஜாவோட மூடுதான் சரியில்லையே! அதனால அவரு அந்தப் பழத்தை வாங்கினார்....உடனே அதை குடுத்தவர் வாயையே திறக்கச் சொன்னார். அவரு வாயிலேயே அந்தப்பழத்தை வச்சி அடைச்சி ஒரு நாளு பூறா அப்படியே இருக்கணும்ன்னு உத்தரவு போட்டுட்டார்.

எலுமிச்சம்பழம் குடுத்தவர் அதிர்ச்சியடையணும்லே ...அடையல..அதுக்கு பதிலாக சிரிக்க ஆரம்பிச்சுட்டார். ராஜாவுக்கு இன்னமும் கோபம்....ஏன் சிரிக்கறே ? ...ன்னார்....அதுக்கில்லே மன்னா.. எலுமிச்சம் பழத்தை என்னுடைய வாய்க்குள்ளே ஒரு நாள் பூரா வச்சிக்கறது எனக்கு ஒண்ணும் கஷ்டமில்லே... ஆனா அரண்மனைக்கு வெளியிலே நிக்கற கியூவுலே ஒருத்தர் ஒரு பெரிய பலாப்பழத்தை வச்சுக்கிட்டு நின்னுகிட்டிருக்கார்..அவரோட நிலைமை என்ன ஆகும்னு நினைச்சிப்பார்த்தேன் .அதுதான் சிரிப்பு வந்துட்டது!... அப்படின்னார்.

## கொக்கென்று நினைத்தாயோ ......

மிகவும்கோபக்கார முனிவர் ஒருவர் காட்டில் தவம் செய்து கொண்டிருந்தபோது கொக்கு ஒன்று அவர் தலையில் எச்சமிட்டு விட்டது.முனிவர் கோபமாக அந்த கொக்கைப் பார்க்க அது அந்த வினாடியே சாம்பலாகிவிட்டது.பிறகு அந்த முனிவர் பசியாறுதல் வேண்டி ஒரு பெண்ணிடம் பிச்சை கேட்டார்.அந்த பெண் தனது கணவருக்குப் பணிவிடைகளைச் செய்துவிட்டு நிதானமாக வந்து முனிவருக்கு உணவு கொடுத்தாள். காக்க வைத்துவிட்டமைக்காக முனிவர் அப் பெண்ணை சாபமிட முற்பட அவள் என்னை கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா ? என்று கேட்டாளாம். முனிவர் ஆடிப் போய்விட்டார்.தொட்டதற்கெல்லாம் சாபம் கொடுக்கும் நீங்கள் இன்னமும் பூரண ஞானம் பெறவில்லை போல் தோன்றுகிறது. ஒரு முகவரியைக் கொடுத்து இன்னாரைப்பார்த்தால் முழு ஞானம் பெறுவீர்கள் என்றுஅனுப்பினாள்.அதுஒரு கசாப்புக்கடைக்காரர் முகவரி. வேதங்களையும், உபநிஷத்துக்களையும் கற்றுத் தேர்ந்த எனக்குப் போயும் போயும் ஒரு கசாப்புக்கடைக்காரர் ஞானபோதம் தருவதாவது என்ற முகச்சுளிப்போடு முனிவர் பார்க்க, நான் கசாப்புக்கடைதான் நடத்துகிறேன். உங்களைப்போல பெற்ற தாயையும் தந்தையையும் வயதான காலத்தில் தவிக்க விட்டு விட்டு கடவுளைத் தேடுகிறேன் என்று காடுகளிலும் மலைகளிலும் வீணே அலையவில்லை. பெற்றோருக்குச் செய்யும் தேவையான சேவையினையே இறைவனுக்குச் செய்யும் தவமாக எண்ணிவாழ்ந்து வருகின்றேன் என்றாராம் அந்த கசாப்புக்கடைக்காரர். முனிவர் ஞானமும் பெற்றார்.



**இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்**

**கடனறி காட்சி யவர் –குறள்**

ஒப்புரவு அறிந்து ஒழுகுதலாகிய தம் கடமை அறிந்த அறிவை உடையவர், செல்வம் இல்லாத காலத்திலும் ஒப்புரவுக்குத் தளரமாட்டார்.



### வாழ்க்கை வேறு! கற்பனை வேறு!

நீங்கள் காணும் சினிமா, டி.வி நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவை வாழ்க்கைக்கு ஒவ்வாத வீணான கனவுகளும், கற்பனைகளுமே.தேர்வு நேரத்தில் இவற்றை சற்றே ஒதுக்கிவையுங்கள்.வாழ்க்கையின் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு அதன்படி வாழ முற்படுங்கள்.நான் யார் ? என் கல்வி தகுதி என்ன ?பொருள் வளம் என்ன ?அறிவின் உயர்வு என்ன ? செல்வாக்கு என்ன ? இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்து ,எனக்கும்,என்னை வாழவைக்கும் தாய் தந்தையர்க்கும் சமூகத்திற்கும் பயன் உள்ளவனாக எப்படி வாழ்வது ? என்பதைத் தீர்மானித்து அதன்படி வாழக் கற்றுக்கொள்ளுங்கள்.

### ஒற்றுமைக்கு ஸ்ரீமுஷ்ணம்

இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு ஸ்ரீமுஷ்ணம் பூவராகசுவாமி சாட்சியாகத் திகழ்கிறார். கடலூர்மாவட்டம், கிள்ளையை ஆண்டுவந்த நவாப் நீண்டகாலமாக நோய்வாய்ப் பட்டிருந்தார். ஸ்ரீமுஷ்ணம் பூவராக சுவாமி அருளால் நவாப்புக்கு நோய் நீங்கியது. அதற்காக கிள்ளை நவாப் ஏற்படுத்திய கட்டளைப்படி பூவராகப் பெருமாள் உற்சவர்,மாசி மகத்திருவிழா வின்போது கிள்ளை தர்காவுக்குச் செல்கிறார்.தர்காவில் மேளதாளம் முழங்க வரவேற்பும், தீப ஆராதணையும் நடைபெறுகிறது.நவாப் கட்டளைப்படி இவ்விழா இன்றும் நடைபெறுகிறது என்பதுதான் செய்தி.

### நான் என்ற அகங்காரம்

மௌரியப் பேரரசர் அசோகச் சக்ரவர்த்தி ஒரு முறை தனது பரிவாரங்களுடன் நகர் வலம் வந்து கொண்டிருந்தார்.அப்போது ஒரு புத்த பிட்சு சாலையில் சென்று கொண்டிருந்தார். அவரைப்பார்த்ததும் சக்ரவர்த்தி பல்லக்கிலிருந்துஇறங்கிவந்து அவரைகாலில்விழுந்துவணங்கினார். அரசரின்தலைபுத்தபிட்சுவின்பாதங்களைத் தொட்டது. இதைப் பார்த்ததும் அமைச்சருக்கு கோபம் ஏற்பட்டது. மிகப்பெரிய அரசர் ஒரு புத்தபிட்சுவின் காலில் விழுந்து வணங்குவதா ? என்று. மறுநாள் அரசரிடம் கேட்டார். அதற்கு அரசர் பதிலேதும் கூறாது மந்திரியிடம் ஒரு புலித்தலை,ஒரு ஆட்டுத்தலை, ஒரு மனித தலை இவற்றைக் கொண்டுவரும்படி கூறினார். மறுநாள் அவற்றை விற்று வரும்படிக் கூறினார். மந்திரி சென்று விற்றபோது ஆட்டுத்தலை, புலித்தலையை விற்றுவிட்டார். மனிதத் தலையை யாரும் வாங்க முன் வரவில்லை எனத் திரும்பினார். இலவசமாக விற்கச் சொன்னார். அப்போதும் யாரும் வாங்க முன்வரவில்லை என்றார்.அப்போது அரசர் கூறினார், மனிதனுக்கு மட்டும் உயிரோடு இருக்கும் வரையில்தான் மதிப்பு.எனவே நான் என்ற அகங்காரம் அழித்து வாழ்தலே சிறப்பு என்று கூறினார்.

### குட்மார்னிங் எப்போது ?

நிறையபேருக்கு எப்போது குட் மார்னிங் சொல்லவேண்டும், எப்போது குட் ஈவ்னிங் சொல்ல வேண்டும் என்பதில் குழப்பமாக இருக்கும். அதற்குத்தான் இந்த அட்டவணை.
விடியற்காலை 1 மணியிலிருந்து மதியம் 12 மணிவரை குட்மார்னிங்,
மதியம் 12.01 முதல் பிற்பகல் 4மணி வரை குட் ஆப்டர்நூன்
பிற்பகல் 04.01 முதல் இரவு 8.00 மணி வரை குட் ஈவ்னிங்
இரவு 08.01 முதல் இரவு 12.59 மணி வரை குட் நைட்
இரவு 11 மணிக்குப்பேசினாலும் குட்ஈவ்னிங்தான் சொல்லவேண்டும்
குட்நைட் என்பது முடிவில் மட்டுமே சொல்லப்படும் வாழ்த்து.




1. தட்டினால் பறப்பான்,தடவினால் சாவான் அது என்ன ?
2. அம்மா சப்பை,மகள் உருண்டை அது என்ன ?
3. தாய் குப்பையிலே,மகள் சந்தையிலே.அவை என்ன ?
4. பஞ்சை அதிகமாய் சாப்பிட்டு படுத்தே கிடக்குது.அது என்ன ?
5. நாலுகால் வீரன் நன்றிக்கு உதாரணம் .அவன்யார் ?
6. பார்த்தால் கல்தான்.பல் பட்டால் தண்ணீர்தான்.அது என்ன ?
7. காலடியில் கடக்கிறானே என்று இவனை உதைக்க முடியாது.அவன் யார் ?
8. பச்சப் பெட்டியில் பத்துச்சரம் முத்து.அது என்ன ?
9. ஒட்டியது இங்கே.வெட்டியது எங்கோ! அது என்ன ?
10. ஊர் முழுக்க ஒரே பந்தல்.அது என்ன ?




உள்ளத்தில் அன்பும் உடலில் நலனும்
எண்ணத்தில் நிறைவும் இல்லத்தில் மகிழ்வும்
செல்வமும் செழிப்பும் பொங்கிப்பெருகி
புது வாழ்வு மலர மங்களப் பொங்கலுக்கு
மகிழ்வான வாழ்த்தும் வணக்கமும்.
புத்தாண்டு பிறக்கும் தைத்திங்கள்
பொங்கல் திருநாளாம் இன்னாளில்
நட்பு பெருகிட வளம் பல பெற்றிட
மனதில் மகிழ்ச்சி நிலைத்திட மீண்டும்
மீண்டும் சந்திப்போம்
மனம் திறந்து பேசுவோம் மாற்றங்கள் ஏற்போம்!
நல்லன நினைப்போம் அல்லன மறப்போம்நலம் பெறுவோம் !.

**மனதில் கட்டுப்பாடு வேண்டும்**

மனதைப்பொறுத்தே உங்களது எண்ணமும் செயல்பாடுகளும் அமையும்.உங்கள் மனம் நல்லதை மட்டுமே நினைத்துக்கொண்டிருந்தால் நீங்கள் பார்க்கும் தீமையில்கூட நன்மையே தெரியும் .அதே சமயம் மனம் தவறான சிந்தனையுடன் இருந்தால் நன்மையான செயல்கூட தீமையானதாகத் தெரியும்.அது நன்மையானது தான் என்று நிருபித்தாலும் மனம் அதனை ஏற்காது.ஆக மனதைவைத்துதான் அனைத்தும் எடைபோடப்படுகிறது.எனவே முதலில் மனதை நன்றாக வைத்துக்கொள்ளவேண்டும்.மனதை நம்கட்டுப்பாட்டிற்குள்கொண்டுவந்தாலே எல்லாம் நன்றாக நடந்துவிடும்.

**சிரித்து மகிழ சில சொற்கள்**



1. ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதர் முன்னால் நின்று ஒரு பக்தர் புலம்பினார்:

நீ ரொம்ப ஜாலியா காலை நீட்டிப்படுத்துக்கிட்டிருக்கியே ...இது நியாயமா!

பக்கத்தில் நின்றவர் சொன்னார்: ஆண்டவனை இப்படியெல்லாம் பேசலாமா?

நீங்க பேசப்படாது.ஆனால் நான் பேசலாம்.ஏன்னா நான் இவருக்கு சொந்தக்காரன்!

எப்படி ?இதோ படுத்திருக்காரே... இவரு சம்சாரத்தோட (லட்சுமி) சகோதரிதான் (மூதேவி) எனக்கு சம்சாரமா வந்து வாச்சிருக்கா!

2. சாப்பிட வந்தவர்கிட்டே என்னய்யா சொன்ன ? சாப்பிடாம எழுந்து போயிட்டாரு......

எங்க ஓட்டல்ல செஞ்சது எல்லாமே உங்க வீட்டுல செஞ்சதுமாதிரியே இருக்கும்னுதான் சார் சொன்னேன். .

3. மேட்டூர் அணை ஒரு நாளிலேயே ஆறு அடி உயர்ந்ததுன்னு கட்டுக்கதை விடறாங்க பேப்பர்ல!

எப்படி சொல்ற ?

நான் தினமும் அணையை பார்கிறேன்.கொத்தனார் அணை எப்படி கட்டினாரோ,அப்படியேதான் இருக்கு!

4. நீ அந்த ஆளைக் கொலை பண்றதுக்கு முன்ன , அவர் கண்ணை ஏன் துணியால் கட்டின ?

அவர் ஐ விட்னஸ் ஆயிடக்கூடாதேன்னுதான்.

5. ஹோட்டல்ல சாப்பிட்டா வயிறுதானே வலிக்கும் ? உங்களுக்கு மட்டும் ஏன் முதுகு வலிக்குது?

மணிக்கணக்கிலே குனிஞ்சுகிட்டே மாவு ஆட்டினா முதுகு வலிக்காதா?

6. சார் நான் நீச்சல் கத்துக்கறேன் . எங்கே ?

தண்ணியிலதான்.

### வாழும் காலம் கொஞ்சமே!

இளம்வயது பெண் ஒருத்தி பேருந்தில் பயணித்துக்கொண்டிருந்தார்.அடுத்த நிறுத்த்தில் பருமனான பெண் ஒருவர் பல பைகளுடன் அந்தப்பேருந்தில் ஏறி அந்த இளவயதுப் பெண்ணின் பக்கத்தில் அமர்ந்தார்.அவரது பருத்த உடலும் பைகளும் இளம் பெண்ணை நெருக்கிக்கொண்டிருந்தன.பக்கத்தில் அமர்ந்திருந்த பயணி ஒருவர் இதனைப்பார்த்து அதிருப்தி அடைந்தார்.உடனே அந்த இளம்பெண்ணிடம் ஏன்எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. பேசாமல் இருக்கிறீர்கள்! என ஆதங்கப்பட்டார்.அப்பெண்ணோ புன்னகைத்தவாறு கூறினார்:நாம் சேர்ந்து பயணிக்கப்போவது குறுகிய நேரம்தான். எனவே அற்பமான விஷயத்திற்காக மரியாதை குறைவாக பேசுவதோ வாதிடுவதோ தேவையற்றது.நான் அடுத்த நிறுத்தத்தில் இறங்கத்தானே போகிறேன்! என்றார்.அற்பமானதொரு விஷயத்திற்காக மரியாதை குறைவாக பேசுவதோ வாதிடுவதோ தேவையற்றது.நாம் சேர்ந்து பயணிக்கப்போவது ஒரு குறுகிய காலமே! பொன்னெழுத்துக் களில் பதிக்கவேண்டிய அற்புதமான பதில்.

இங்குநாம் வாழப்போகும் காலம் மிகவும் குறைவானது என்பதை உணர்வோமாயின்

வாய்ச் சண்டைபோடுவது,வீண் வாதத்தில் ஈடுபடுவது ,பிறரை மன்னிக்க மறுப்பது எதிலுமே அதிருப்தியும் குற்றமும் காணும் போக்கினைக் கொண்டிருப்பது நம் நேரத்தையும் சக்தியையும் வீணடிக்கும் செயல் என்பது புரிந்திடும். ஒருவர் நம்மைப் புண்படுத்திவிட்டாரா ? அமைதியாக இருக்கப் பழகிடுவோம்.உறவையும் நட்பையும் போற்றுவோம். ஒருவரை ஒருவர் மதித்து வாழ்வோம். ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவோம்.மன்னிப்போம்மறப்போம்.நன்றி பாராட்டி மகிழ்வாக வாழ்வோம்!

### உங்களுக்குத்தெரியுமா ?

1. உலகிலேயே மிகப்பெரிய நூலகம் மாஸ்கோவில் உள்ள லெனின் நூலகம். 2 கோடி நூல்கள் உள்ளன.

2. சயன்ஸ் என்பது லத்தீன் மொழிச்சொல் இதற்கு எனக்குத்தெரியும் என்பது பொருள்.

3. செயற்கை வெப்பத்தினால் பனி மலைகள் உருகத்தொடங்குவதைத் தடுக்காவிட்டால் 2025 ம் ஆண்டு ,300 கோடி மக்களுக்கு உலகில் தண்ணீர்கிடைக்காமல் போய்விடும்.

4.ஆயிரம் மைல் பயணமும் ஓர் அடியில்தான் துவங்குகிறது.

5. வாழ்க்கைக்குப்பொருள்வேண்டும் , வாழ்வதிலும் பொருள் வேண்டும்.

6.இதயம் ரோஜா மலராக இருந்தால் பேச்சில் அதன் வாசம் தெரியும்.

7.பிரார்த்தனை செய்யும் உதடுகளைவிட உதவி செய்கின்ற விரல்களே உன்னதமானவை.

8.சங்ககாலம் எனப்படுவது எது கி.மு.300 முதல் கிபி 300 வரை.

9.இதயத்தின் ஒலியை அளக்கப்பயன்படும் கருவி பெயர் கார்டியோ கிராம்.

10.எல்லாவகை இரத்தத்துடனும் சேரும் இரத்தவகை ஒ பாசிட்டிவ்

11.ஆஸ்த்மா நோயைக்குணப்படுத்தும் மருந்து ஊமத்தைச்செடியிலிருந்து தயாரிக்கப்படுகிறது .

20.தேசியகீதம்பாட ஒதுக்கப்பட்ட நேரம் 52 செகண்டுகள்

21.உலக அறிவொளி நாள் செப்டம்பர் 8 கொண்டாடப்படுகிறது

22.இந்தியாவின் வர்த்தகத் தலைநகரம் மும்பை.

23.உலக வங்கி இங்கிலாந்தில் 1944ஆம் ஆண்டு துவங்கப்பட்டது

24.விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படும் உயரிய இந்திய விருது .அர்ஜுனா



தேசிய கீதம் (நாட்டுப்பண்) பெரும்பாலும் அந்த நாட்டையும், மக்களையும் வாழ்த்துவதாக இருக்கும். ஆனால் ஐரீஷ் நாட்டு தேசிய கீதத்தின் இந்தவரிகள் முற்றிலும் வித்தியாச மானவை:....மனம் விட்டு சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்,அது ஆத்மாவின் அற்புதஇசை! நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள், அது மகிழ்ச்சிக்குச் செல்லும் பாதை !...

**விடுகதை விடைகள்** 1.கொசு 2.அம்மி, குழவி 3.வைக்கோல்,நெல் 4.தலையணை 5.நாய் 6.பனிக்கட்டி 7.முள் 8.வெண்டைக்காய் 9.கடிதம் 10,வானம்

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. கோ. ராஜகோபால் பிள்ளை**
ம. மேலவன்னியூர்
குமராட்சி ஒன்றியம் திமுக
முன்னாள் ஒன்றிய துணை செயலாளர்

**திருமதி. ரா. சிவதனுசு**
ம. மேலவன்னியூர்

தங்களின் பிரிவால் துயரில் ஆழ்ந்த எங்களை தெய்வமாக
வானின்று வாழ்த்தி நல்வழிகாட்டிட வேண்டுகிறோம்.

என்றும் உங்கள் நினைவோடு வாழும்

மகன் : **R. கண்ணன்,** ஓய்வு – தமிழ்நாடு மின்சார வாரியம்

மருமகள் : தெய்வத்திருமதி **K. விமலா,** சிதம்பரம் முன்னாள் நகர் மன்ற உறுப்பினர்

பேத்தி : **K. கவிதா,** HCL Technologies, Chennai

பேரன் : **N. வெங்கடேஷ்,** RENAULT NISSAN, Oragadam, Chennai

மற்றும் **உறவினர்கள், நண்பர்கள்**

8A, திருவள்ளுவர் தெரு, சிதம்பரம் – **608 001.**

# குரோம்பேட்டை கார்காத்தார் சங்கம்

## 18 வது ஆண்டு விழா
## 29.12.2024



*Thiru.D.Thirugnanasambandam*
*Past President Receiving*
*Lifetime Achiever Award*





*Guru Maha Sannidhaanam releases*
*Mrs.Vanaja Elangovan's Book on*
கார்குல கலாச்சாரம்



*Thiru.Dr.M.SelvaGanapathi*
*Receiving*
*Lifetime Achiever Award*





*President Mr.S.Manohar*
*Receives the Book*



*Thiru.Saba.Sivakumar*
*Advisor Receiving Blessings*





*Secretary Mr.B.Thiyagarajan*
*Receives the Book*



*Thiru.Dr.S.Muthukumar,*
*Advisor Receiving Blessings*



*Treasurer Mr.R.Vasanthakumar*
*Receives the Book*

# தருமை ஆதீனம் திருக்கயிலாய பரம்பரை
# 27வது குரு மகா சந்நிதானம்
## ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்மந்த பரமாச்சாரிய சுவாமிகளின் வரவேற்பு

# மயிலாடுதுறை நகர கார்காத்த வேளாளர் சங்க ஆண்டு விழா
















# ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
15.09.1942

மறைவு
17.02.2020

அரியலூர் மாவட்டம், அங்கராய நல்லூர் கிராமம்
தெய்வத்திருவாளர்கள். இராஜகோபால் பிள்ளை – மீனாட்சி அவர்களின் மகன்

**Dr.A.R. இராதாகிருஷ்ணன், M.D.,DM., (Nero)** அவர்கள்
பேராசிரியர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை (ஓய்வு) தஞ்சாவூர்.

பிள்ளைகளுக்கு நல்ல தந்தையாய்
பெற்றோர்களுக்கு நல்ல மகனாய்
மாணாக்கர்களுக்கு நல்ல ஆசானாய்
மனைவிக்கு அன்பான கணவராய்
சகோதர – சகோதரிகளுக்கு பாசமான சகோதரனாய்
நண்பர்களுக்கு உற்ற தோழனாய்
உறவினர்களுக்கு நல்ல உறவாய்
என்றும் எங்கள் நினைவில் நின்று சென்றாய்...

என்றும் உங்கள் நீங்கா நினைவில்...

திருமதி. **பார்வதி இராதாகிருஷ்ணன்** (மனைவி)
189, செட்டியார் காலனி, காந்திஜி ரோடு, தஞ்சாவூர். செல் : 9944117277

மகன் **R. பாலகிருஷ்ணன்** (USA)
மருமகள் **B. ரம்யா** (USA)
பேத்தி **B. அமிர்தா** (USA)

மகள் **S. கவிதா** (USA)
மருமகன் **R. சீனிவாசன்** (USA)
பேரன் **S. கௌதம்** (USA)
பேத்தி **S. சஞ்சனா** (USA)

# CHENNAI KARKATHAR ASSOCIATION

Choolaimedu, Chennai - 600 094.

# LADIES HOSTEL



- A/c. & Non A/c. Single Cot, Big Size Room
- Free Wi-Fi
- Free Washing Machine
- Free Aquaguard Water
- Two Wheeler Parking available
- Camera Facilities Available Inside & outside Area
- Security Persons available
- Three Times food, Breakfast, Lunch & Dinner
- Milk available Morning only
- 24 Hours warden available
- Catering Available
- Food Timings : Morning 7.30 a.m. to 9.30 a.m.
  Lunch : 12.00 p.m. to 2.30 p.m.
  Dinner : 7.30 p.m. to 9.00 p.m.



**No. 64, Sowrashtra Nagar 10th Street,**
**Choolaimedu, Chennai - 600 094.**
**Cell : 94454 82798, 99943 26976**
**E-mail : kaveri9941@gmail.com**

# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 1/1** செல்வி<br>**கவுஸல்யா சங்கரநாராயணன்**<br>மிருகசீரிடம் 4ம் பாதம்<br>வஞ்சிரமுட<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : அமெரிக்காவில் வேலை செய்யும் H1B யுடன் (or) Ph.D., படிக்கும் வரன் | **30.04.98** | அமெரிக்காவில்<br>M.S. | தற்போது<br>Ph.D.<br>மூன்றாம் ஆண்டு | திரு. R. சங்கரநாராயணன்,<br>D4202, Mandarina Apt.,<br>7, Lock Street,<br>Kotturpuram,<br>Chennai - 600 085.<br>Cell : **94451 46979**<br>**+968 – 95827225** (Whatsapp) |
| **B 2/1** செல்வி **R. பானுபிரியா**<br>கேட்டை – 3ம் பாதம்<br>எரவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம் (முல்லையூர்)<br>விருப்பம் : சமபணியில் உள்ள பொருத்தமான வரன் | **21.11.98**<br>165 cm | B.E. (ECE) | Sr. Software Engineer,<br>Fresh Works<br>Chennai | திரு. T. Ramesh,<br>D.No. 11, SNR Flats,<br>Viswanathapuram Main Road,<br>Kodambakkam, Chennai - 600 024.<br>Cell : **90801 87596, 94445 56972** |
| **B 3/1** செல்வி **N. லட்சியவதனி**<br>பரணி<br>கூடலுட<br>பூர்வீகம் : K.ஆடூர் (சிதம்பரம்)<br>விருப்பம் : சமபடிப்பு, சிறந்த குடும்ப பின்னணி, நல்ல பணியில் உள்ள வரன். | **12.02.2000**<br>155 cm | M.Com., | | திரு. G. நடராஜன்,<br>**77**/B, VSR நகர்,<br>முதல் குறுக்குத் தெரு,<br>சிதம்பரம் – **608 001.**<br>Cell : **63822 74339** |
| **B 4/1** செல்வி **S. Dhivyasri**<br>Ayilyam<br>Vangaramuda<br>Pinnalur | **12.10.2001**<br>158 cm | B.E. (ECE) | Engineer, Renault Nissan Technology & Business Centre India<br>Rs. 6 Lakhs/PA | திரு. E. Sendhilnathan,<br>Plot No. 99,<br>Gokulam Vinayaka Apartments,<br>4th Avenue, Prithivakkam Main Road,<br>Ambattur, Chennai - 600 053.<br>Cell : 98414 50276 |
| **B 5/1** செல்வி **ப. சங்கீதா**<br>பூராடம்<br>பூவனுட<br>பூர்வீகம் : கொருக்கை (மயிலாடுதுறை)<br>விருப்பம் : சமபடிப்புடன், IT நிறுவன வேலை | **14.06.95**<br>150 cm | | IT Company<br>Chennai<br>(Softcrylic Solutions) | திரு. S. பன்னீர் செல்வம்,<br>Plot No. 35, ஹரி நாராயணன் நகர்,<br>சங்கீத் நகர் விரிவாக்கம்,<br>காத்தாயி அம்மன் கோயில் அருகில்<br>கூறைநாடு, மயிலாடுதுறை<br>Cell: **94884 64659, 94866 09659** |
| **B 6/1** செல்வி **K. வித்யாலஷ்மி**<br>பூரம்<br>கொங்கராய<br>பூர்வீகம் : மயிலாடுதுறை<br>குறிப்பு : சட்டப்படி விவாகரத்தானவர், குழந்தைகள் இல்லை, மறுமணம் | **14.04.87** | DCT, BCA | | திரு. L. கமலக்கண்ணன்,<br>புதுச்சேரி – **605 004.**<br>Cell: **93844 59230** |
| **B 7/1** செல்வி **வே. சுபஸ்ரீ**<br>உத்திராடம்<br>சேதரிய<br>பூர்வீகம் : கொத்தட்டை<br>விருப்பம் : MBBS | **20.07.97**<br>154 cm | M.B.B.S., | | திரு. பி. வேல்முருகன்,<br>22-D, Type III Qtrs.<br>வட்டம் – **20,**<br>நெய்வேலி – **608 703.**<br>Cell: **94434 39280, 78068 98747** |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 8/1** செல்வி **S. சத்யா**<br>சதயம்<br>பஞ்சதரிய<br>பூர்வீகம் : கெளுத்தூர் | **20.05.98**<br>5' - 6" | B.Sc.,<br>(Computer Science)<br>MBA | Welfare Officer<br>Young Brand Apparal, Private Ltd.,<br>Rs. 3,00,000/PA | திரு. A. செந்தில்,<br>23அ, கரையான் தோப்பு,<br>ராஜா தெரு, திருவிழந்தூர்,<br>மயிலாடுதுறை – 609 001.<br>Cell : **94873 32726, 94454 53251, 94452 97413** |
| **B 9/1** செல்வி **வெ. ஆனந்தி**<br>உத்திரம் – 2ம் பாதம்<br>முனதரிய<br>பூர்வீகம் : கிளிமங்கலம் | **21.11.2000**<br>155 cm | B.C.A., | Softeon In Mayiladuthurai<br>(Transfer to Chennai also) | திருமதி. V. காந்தி,<br>76/1, தெற்கு தெரு,<br>கிளிமங்கலம் – **606 105.**<br>திட்டக்குடி வட்டம்,<br>கடலூர் மாவட்டம்<br>Cell : **95854 61819, 82707 92581** |
| **B 10/1** செல்வி **க. தேவிருக்மணி**<br>ஆயில்யம் – 3ம் பாதம்<br>நெப்புக்குட<br>விருப்பம் : பட்டப்படிப்பு படித்து நல்ல பணியில் உள்ள 1994க்கு பிறகு பிறந்த வரன் | **26.12.99**<br>5' - 5" | B.Sc.,<br>(Maths) | C.T.S. Chennai | திரு. வை. சக்திவேல்,<br>121/1, நடுத் தெரு,<br>கூடலூர் & PO, பெண்ணாடம் வழி,<br>திட்டக்குடி வட்டம்<br>கடலூர் மாவட்டம் – 606 111.<br>Cell : **98422 58273** |
| **B 11/1** செல்வி **M. தனலட்சுமி**<br>உத்திரம் 4ஆம் பாதம்<br>பழுவட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : சமபடிப்பு | **07.05.98**<br>154 cm | B.Tech (CS) | Software Professional<br>EPSILON<br>Bangalore<br>Rs. 10 Lakhs/PA | திரு. K. மணிகண்டன்,<br>G1, Ashok Manor, Ruby Builders,<br>5/2, Kalamegam Street,<br>East Tambaram, Chennai - 600 059.<br>Cell : **94447 11045, 99416 20355** |

## காக்களூர் ஜலநாராயணப் பெருமாள்

தாரிணி தியாகராஜன்,
மயிலாடுதுறை.

திருவள்ளூர் காக்களூர் அருகில் பூங்கா நகரில் உள்ள சிவா விஷ்ணு ஆலயம் ஏகாதசியில் வணங்கினால் குழந்தை வரம் தரும் ஆலயமாகத் திகழ்கிறது. திருவள்ளூர் ரயில் பாதையில் காக்களூர் ரயில் நிலையத்தில் இறங்கி ஆட்டோவில் செல்லலாம். தரிசன நேரம் காலை 7 to 12, மாலை 4 to 8 மணி.

கோவிலில் நுழையும் போதே ஒரு நறுமணம். ஏலக்காய், பன்னீர், ஜவ்வாது மற்றும் வாசனை திரவியங்கள் கலந்த மணம். பக்கத்தில் உள்ள தொட்டியில் இருந்துதான். அங்குள்ள தண்ணீரில் ஜலநாராயணப் பெருமாள் எழுந்தருளியிருக்கிறார். இவருக்கு அபிஷேகம் பன்னீரும் வாசனை திரவியங்களும்தான். பால், தயிர் மற்ற திரவியங்கள் அபிஷேகம் கிடையாது. வலம்புரி சங்கால் தண்ணீர் எடுத்து நெல்லிக்கனிக்கு அபிஷேகம் செய்து அதை பிரசாதமாக எடுத்து சென்று ஒரு நாள் பூஜையில் வைத்து மறுநாள் பக்தியுடன் உட்கொண்டால் மழலை இன்பம் பெறலாம் பலன் பெற்றவர்கள் கூறுகிறார்கள்.

இந்த சிவா விஷ்ணு ஆலயத்திற்கு 1990–ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அதற்கு முன் கோயிலின் பின்புறம் மிகப் பெரியதாக வளர்ந்து விட்ட வில்வ மரத்தை வெட்டலாமா? அல்லது இருபது வருடங்களாகப் பூக்காத நாகலிங்க மரத்தை வெட்டலாமா என்ற யோசனை. சிற்பக்கலை வல்லுனர்களையும் வாஸ்து சாஸ்திர நிபுணர்களையும் கலந்தாலோசித்து அவர்கள் யோசனைப்படி ராஜகோபுரத்தின் ஈசான்ய மூலையில் தொட்டியில் நீரைத் தேக்கலாம் என்றும் அந்த நீரில் நேபாளத்தில் காட்மண்டுவில் உள்ளது போல் ஜல நாராயணர் சிலை வைக்கலாம் என முடிவானது. அதையடுத்து 12 டன் எடையுள்ள கல்லில் 8 மாதத்தில் உருவான சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதைவிட அதிசயம் அதற்கு அடுத்த நாள் 20 ஆண்டுகள் பூக்காத நாகலிங்க மரம் குப்பென்று பூத்ததுதான்.

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 1/1** செல்வன் **V. வெங்கடேசன்**<br>மகம்<br>சாத்துகுட<br>பூர்வீகம் : அகர ஆலம்பாடி, சிதம்பரம்<br>விருப்பம் : குடும்பத்திற்கு ஏற்ற வரன். | **22.02.97**<br>168 cm | DME | Site Engineer<br>Singpore<br>Rs. 80K/PM, | திரு. வீர சுப்பரமணியன்,<br>அகர ஆலம்பாடி,<br>சேத்தியா தோப்பு வழி,<br>புவனகிரி (Tk) **– 608 702.**<br>Cell : **97861 99060 / 99652 54653** |
| **G 2/1** செல்வன் **K. மணிவேல்**<br>கேட்டை<br>முதனுட<br>பூர்வீகம் : மதுராந்தகநல்லூர் (சிதம்பரம்)<br>விருப்பம் : படித்த பணியில் உள்ள வரன்/ பணிக்கு செல்ல விருப்பமுள்ள வரன் | **15.02.93**<br>6' - 0" | B.E.,<br>(EEE), | Jr. Asst.<br>Commercial Tax<br>Rs 36,000/PM | திரு. T. கேசவன்,<br>5/234-2, நியூ அம்பேத்கர் நகர்,<br>ஜாகீர்ரெட்டிப்பட்டி,<br>சேலம் **– 636 302.**<br>Cell : **94422 59692** |
| **G 3/1** செல்வன் **Achudhan Rajendran**<br>Anusham<br>Kalingaraya<br>பூர்வீகம் : Nandeeswaramangalam | **10.07.92**<br>188 cm | MBA., | Nykaa<br>Assistant Sales Manager<br>Rs. 10 Lakhs/PA | திருமதி. R. Gunavathi,<br>T5, B-Block,<br>Golden Jubilee Appartments,<br>Dharga Road, Pallavaram,<br>Chennai - 600 043.<br>Cell : **93623 12879, 95852 31123** |
| **G 4/1** செல்வன் **இரா. விவேக்**<br>ஆயில்யம் (3ம் பாதம்)<br>இடைய<br>பூர்வீகம் : நாகமங்கலம் (அரியலூர்)<br>விருப்பம் : படித்த வேலைக்கு செல்லும் பெண் | **31.05.98**<br>5' - 6" | B.E.<br>(Mech.) | Senior Testing Engineer<br>HCL, Chennai<br>Rs. 9.5 Lakhs/PA | திருமதி. இரா. லதா,<br>**356–1,** மேல தெரு, அம்பாபூர்,<br>நாகமங்கலம்,<br>அரியலூர் **– 621 701.**<br>Cell : **98849 38924, 80126 82125** |
| **G 5/1** செல்வன் **B. Dinesh Raj**<br>Ashwini<br>Vilvaraya<br>பூர்வீகம் : Karuvazhakarai | **02.05.92**<br>176 cm | B.E.,<br>(Mechanical) | Operation Incharge<br>Rs. 4.70 Lakhs/PA | திரு. G. Baskaran,<br>1/64, South Vellazha Street<br>Karuvazhakarai (PO),<br>Tharangambadi (T.k.)<br>Mayiladuthurai (Dt.)<br>Cell : **94437 03677, 63692 69113** |
| **G 6/1** செல்வன் **பா. ஆதித்யன்**<br>உத்திரட்டாதி 4ம் பாதம்<br>பஞ்சதரிய<br>பூர்வீகம் : கெளுத்தூர்<br>விருப்பம் : சமபடிப்பு, வேலையில் உள்ள வரன். | **17.08.92**<br>5' - 11" | B.E. (ECE) | ராம்கோ சிஸ்டம்<br>சென்னை<br>Rs. 14 Lakhs / PA | திரு. A. பாலசுப்ரமணியன்,<br>23A, கரையான் தோப்பு,<br>ராஜா தெரு,<br>திருவிழந்தூர்,<br>மயிலாடுதுறை Dt.<br>Cell : **94873 32726, 94454 53251** |
| **G 7/1** செல்வன் **U. ஸ்ரீராம் (எ) செல்வமுத்து**<br>பூரட்டாதி<br>பல்லவராய | **12.08.95**<br>5' - 6" | Diploma<br>Computer<br>Engineering | Prop. Vinayaka<br>Cable Vision | திரு. K. உதயகுமார்,<br>40/1, வெள்ளாழத் தெரு,<br>மணல்மேடு,<br>மயிலாடுதுறை மாவட்டம்–609202.<br>Cell : **94878 85900, 82488 28378** |
| **G 8/1** செல்வன் **S.A. பிரபாகரன்**<br>கேட்டை – 2ம் பாதம்<br>பங்களதரிய<br>பூர்வீகம் : பின்னலூர் (சிதம்பரம் வட்டம்) | **23.08.96**<br>170 cm | M.Tech<br>(Mechanical<br>CAD - CAM)<br>VIT-Chennai | L & T Technology<br>Services Ltd.,<br>Bangalore | திரு. மு. செந்திலதிபன்,<br>103, வாகீசன் நகர்,<br>பார்வதிபுரம்,<br>வடலூர் **– 607 303.**<br>கடலூர் மாவட்டம்<br>Cell : **94449 03240, 94432 89639** |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 9/1** செல்வன் **B. Balaji**<br>Karthigai<br>Vilanthuda<br>Sirugizhandanallur<br>விருப்பம் : B.E., B.Tech, IT பணியில் உள்ள வரன் | **21.05.93**<br>5' - 6" | B.E.,<br>ECE | Network & Cyber Security Administrator @ Coforge Ltd. Chennai<br>Rs. 7 to 8 Lakhs/PA | திரு. A. Balathandayutham,<br>16/C, Lalithambal Nagar,<br>Ammapettai & PO,<br>Chidambaram Tk - 608 401.<br>Cell : **94867 86453, 94862 16463** |
| **G 10/1** செல்வன் **R. Sabari**<br>Moolam<br>Dheenuda<br>Perumangalam | **10.10.94**<br>175 cm | B.E.,<br>(Civil) | Civil Engineer at Sathiapal Engineers Pvt. Ltd.<br>Rs. 35,000/PM | திரு. S. Ravichandran,<br>40, Swamy Sannathi Street,<br>Vaitheeswaran Koil,<br>Mayiladuthurai - 609 117.<br>Cell : **97504 09805, 99764 91391**<br>**81485 05817** (Whatsapp) |
| **G 11/1** செல்வன் **செ. அரவிந்தன்**<br>சுவாதி<br>வண்ணமுட<br>பூர்வீகம் : கண்ணங்குடி, சிதம்பரம்<br>விருப்பம் : படித்த, பணியில் உள்ள வரன் | **11.03.93**<br>178 cm | B.E.,<br>M.B.A., | Technip Energies Guindy, Chennai<br>Rs. 9 Lakhs/PA | திரு. கோ. செந்தில்குமார்,<br>24, முத்துகுமரசாமி நகர்,<br>கண்ணங்குடி மெயின் ரோடு,<br>சிதம்பரம் – **608 001.**<br>Cell : **99657 75919** |


## கும்பகோணம் மண்டல கார்காத்தார் சமூக நலச்சங்கம்

## 29-வது மங்கல சந்திப்பு

கும்பகோணம் மண்டல கார்காத்தார் சமூக நலச்சங்கம் சார்பாக வருகின்ற **06–04–2025** ஞாயிற்றுக்கிழமை மங்கல சந்திப்பு நடைபெற உள்ளது. மங்கல சந்திப்பு நிகழ்ச்சி வெண் திரை மூலம் வரன்கள் அறிமுகம் செய்ய இருப்பதால் விண்ணப்பத்துடன் புகைப்படம் அவசியம் இணைக்கவும். பதிவு ஒன்றுக்கு ரூ. 600/–

விண்ணப்பம் வேண்டுவோர் கீழ்க்கண்ட வாட்ஸ் ஆப் எண்ணிற்கு தொடர்வு கொண்டு பெற்று கொள்ளவும். வெளியூர் கார்குல சொந்தங்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு பூர்த்தி செய்த விண்ணபத்தை கொரியர் வாயிலாக அனுப்பவும்.

முகவரி : திரு. **R. சுகுமார் @ M.R.K. பாண்டியன்,**

**17/18,** பெரிய அப்பாவு தெரு, கும்பகோணம். **Cell : 7598073235 / 9442013459**

மங்கல சந்திப்பு பதிவு ரூ. 600/–ஐ A.S. பழனி என்ற பெயரில் வரையோலையாக மட்டும் அனுப்பி வைக்கவும் அல்லது நேரில் செலுத்தவும், மங்கல சந்திப்புக்கான இடம் வரன் பதிவு செய்பவர்களுக்கு வாட்ஸ் அப் வாயிலாக தெரிவிக்கப்படும். பதிவு இல்லாமல் புத்தகம் தர இயலாது.

மேலும் விவரங்களுக்கு : S. விஜயகுமார் – 9443984770 – A.S. பழனி – 8870342493

M. சாமிநாதன் – 9443662462 – T.S. சூரியநாராயணன் – 9443589510

சுயம்வர பார்வதி கலா ஹோமத்துடன் இனிதே ஆரம்பம் ஆகிறது. அன்றைய தினம் பதிவு செய்பவர்களுக்கு புத்தகம் கிடைப்பது அரிது, புத்தகம் வேண்டுவோர் வரன் விவரப்பட்டியலுடன் 31.03.2025–க்குள் பதிவு செய்யவும் பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

**- S. விஜயகுமார்,**
செயலாளர்.

# "ஓம்"

## என்ற பிரணவ மந்திரத்தின் மகிமை.

நாம் அனைத்து மந்திரத்தை ஜெபிக்கும் முன்பும் ஓம் என்ற பிரணவ மந்திரத்தை ஜபிப்பது வழக்கம். இறைவனை போற்றி பாடும்போது ஓம் என்று கூறுவதுண்டு. ஓம் நமச்சிவாய, ஓம் முருகா, ஓம் விநாயகா போற்றி இப்படி ஓம் இல்லாமல் எந்த மந்திரத்தையும் கூறுவது கிடையாது. அப்படி ஓம் என்னும் மந்திரத்திற்கு என்ன விசேஷம், அதன் பொருள், அதை உச்சரிப்பதால் என்ன பயன் என்று பார்ப்போம் வாருங்கள்.

ஓம் என்பது இந்த உலகம் இயங்குவதற்கான ஒரு மூல சக்தியாக விளங்குகிறது. அனைத்து மந்திரங்களுக்கும் இதுவே உயிர் நாடியாக இருக்கிறது. இந்த பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்பு இந்த பிரபஞ்சம் முழுவதும் பரவி இருந்த ஒரு சக்தியாக இருந்தது. ஓம் என்ற பிரணவ மந்திரத்திற்கு பல பொருள்கள் இருப்பதாக கூறப்படுகின்றது. ஓம் என்றால் "அனைத்து சக்திகளும் அதில் அடக்கம்" என்று பொருள் கொள்ளலாம். ஆனால் ஓம் என்பதற்கு பற்பல பொருள்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. அதில் ஒன்று தான் "இறைவா எனக்குள் இருக்கும் ஜீவனை உன்னுடன் சேர்த்துக் கொள்" என்ற பொருள்.

மேலே உள்ள பொருளை அடிப்படையாக கொண்டு பார்த்தால், ஒருவர் ஓம் நமச்சிவாய என்று ஜபித்தால், சிவபெருமானே என்னுள் இருக்கும் ஜீவனை உங்களோடு சேர்த்துக் கொண்டு பிறவா நிலையை எனக்களியுங்கள் என்று பொருள்படுகிறது. ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் பொருள் ஒருபுறம் இருக்க, அந்த மந்திரத்தை ஜபித்தால் என்ன பலன்களை பெறலாம் என்று பார்ப்போம் வாருங்கள்.

ஓம் என்னும் மந்திரம் 'ஆ', 'ஓ', 'ம்' ஆகி மூன்று ஓசைகளால் உருவான ஒரு அற்புத மந்திரம் ஆகும். இந்த மந்திரத்தில் உள்ள மூன்று ஓசைகளையும் ஒருவர் உச்சரிக்கும் போது உடலில் பல மாறுதல்கள் நிகழ்கின்றன. 'ஆ' என்ற ஓசை ஒருவர் எழுப்பும் சமயத்தில் உடலின் கீழ்பகுதி முதல் வயிற்று பகுதி வரை இயக்கம் பெறுகிறது. 'ஓ' என்ற ஓசையை உச்சரிக்கு பொழுது மார்பு பகுதி சீரான இயக்கத்தை பெறுகிறது. 'ம்' என்ற ஓசையை உச்சரிக்கும் பொழுது நமது மூளை பகுதி தூண்டப்படுகிறது. அதோடு நமது முகத்தில் உள்ள தசைகளும் நன்கு வேலை செய்கின் றன.

ஒருவரது மனதை ஒருமைப்படுத்தி அவரது எண்ண ஓட்டங்களை கட்டுப்படுத்தி தியான நிலைக்கு இட்டு செல்லும் அற்புத சக்தி ஓம் என்னும் மந்திரத்திற்கு உள்ளது. இந்த மந்திரத்தை தொடர்ந்து ஜெபிப்பதன் மூலம் நமது உடலின் இயக்கம் சீரமைகிறது. நமக்குள் இருக்கும் எதிர்மறை ஆற்றல் அழிந்து நேர்மறை ஆற்றல் பெருகுகிறது.

'ஓம்' என்ற சொல் ஆண்பாலும் இல்லை; பெண்பாலும் இல்லை, மூன்றாம் பாலினமும் இல்லை ஒருமை ஒலியே. இதற்கு ஒருமையோ, பன்மையோ கிடையாது. வேற்றுமை உருபுகளும், அதாவது முதலாம் வேற்றுமை முதல் எட்டாம் வேற்றுமை வரையுள்ள உருபுகளும் இதற்குக் கிடையாது. இலக்கண வரம்புகளுக்கெல்லாம் இது அப்பாற்பட்டது.

படைத்தல், காத்தல், ஆழித்தல் எனும் முத்தொழில்களின் பொருளாக விளங்குகிறது 'ஓம்' எனும் பிரணவச் சொல். ஓம் என்பது இறைவனின் ஒலி அலைகளின் அடையாளமாகும். மனிதனின் வாயால் உச்சரிக்கப்படும் அனைத்து வார்த்தைகளும், 'ஓம்' என்ற ஒலியின் வெளிப்பாடாகும். மனிதனின் உச்சரிப்பு, தொண்டையிலிருந்து தொடங்கி உதடுகளில் முடிவடைகின்றது. 'அ' என்ற சொல் தொண்டையில் உருவாகின்றது. 'உ' மற்றும் 'ம்' என்ற சொற்கள் உதட்டில் உருவாகின்றன.

எனவே தான் (AUM) 'ஓம்' என்பது, உதடுகள் உச்சரிக்கும் அனைத்து சொற்களின் அடையாளச் சின்னமாகும். எனவேதான், இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே இந்த 'ஓம்' என்ற வார்த்தைக்குள் அடக்கமாகும். இறைவன் பிரபஞ்சம் முழுமைக்குள் அடங்கியிருப்பதால், இறைவனையே அடையாளம் காட்டுகின்ற சொல் 'ஓம்' என்பது இறைவனை அடையாளப்படுத்தும் புனிதச் சொல்லாகவே கருதப்படுகிறது.

ஓம் மந்திரம் கடவுளின் ஒலி ரூபம் என்கின்றனர். வார்த்தைகளின் மூலம் ஏற்படும் அதிர்வினைக் கொண்டு உடல் நோய், மன நோய் இவற்றினை தீர்க்கும் முறையினை நம் முன்னோர்கள் குறிப்பாக சித்தர்கள் அறிந்து மனித சமுதாயத்திற்கு அளித்து உள்ளனர். இதனைப் பயன்படுத்தி மக்களும் பயன் பெறலாம். இதனால் நோய்கள் நீங்கி உடலும், உள்ளமும் ஆரோக்கியத்துடன் புத்துணர்ச்சியாக இருக்கும். நோயற்ற வாழ்வை பெற நீங்கள் ஒரு பைசா கூட செலவு செய்ய வேண்டியதில்லை. ஓம் என்று சொன்னாலே போதும். அதை சற்று சத்தமாகவும்

சொல்லலாம் அல்லது மனதிற்குள்ளேயும் சொல்லலாம். மனதில் 'ஓம்' என்ற எழுத்தினை கவனத்தில் நிறுத்தியும் தியானம் செய்யலாம்.

'ஓம்' எனும் புனித சத்தம்

அ + உ + ம் என பிரிவு படுகின்றது.

பூமி + ஆகாயம் + தேவ உலகம்

ப்ரம்மா + விஷ்ணு + சிவன்

ரிக் / யஜுர் + சாம வேதங்கள் என்பதினை 'ஓம்' உணர்த்துகின்றது.

பொதுவில் யோகா பயிற்சி செய்பவர்கள் ஓம் சொல்லும் பயிற்சியினை அன்றாடம் யோகா பயிற்சிக்கு முன்னால் மேற்கொள்ளவும். இதனால் அவர்கள் கவனத்திறன், அமைதி, ஆற்றல்திறன் கூடுவதாகவும், மன அழுத்தம் நீங்குவதாகவும் கூறுவர். சில ஆண்டுகளுக்கு முன்னால் இதற்காக விஞ்ஞான ஆய்வு மேற்கொள்ளப்பட்டன. இதில் 'ஓம்' என சொல்லச் சொல்லி அதனை பதிவு செய்தனர். அந்த அலைகள் முறையற்றதாகவும், மூளையின் ஸ்திர தன்மை அற்றதையும் காட்டின.

அவர்களாகவே ஒரு குறிப்பிட்ட காலம் 'ஓம்' பயிற்சி செய்ய வைத்து பின்னர் அதனை பதிவு செய்தனர். அதன் அலைகள் சீராய், முறையாக இருந்தன. அவர்களும் அவர்கள் கவனத்திறனும், ஆற்றலும் வெகுவாய் முன்னேறியுள்ளதனை கூறினர். மனதின் முழு அழுத்தமும் 'ஓம்' என்ற சொல்லின் உச்சரிப்பில் முழுவதுமாகத் தீர்வதாக ஆய்வில் அறியப்பட்டது. விஞ்ஞான ரீதியாக இது நிரூபணம் செய்யப்பட்டது.

**'ஓம்' மந்திரம் சொல்வதன் பலன்கள் :**

* ஓம் மந்திரம் சொல்லப்படும் போது சுற்று சூழல் சுத்தமாகின்றது.
* பாஸிடிவ் அதாவது ஆக்கப்பூர்வ அதிர்வுகள் ஏற்படுகின்றன.
* நம்மை சுற்றியுள்ள 'ஆரா' என்னும் ஒளி வட்டம் தூய்மையாகின்றது.
* தியான நிலையிலும் அதன்பின் ஆழ்நிலை தியானத்திலும் கொண்டு செல்லும்.
* உடலில் நச்சுப் பொருட்கள் நீங்குகின்றன.
* உடல் தன்னைத்தானே சிகிச்சை அளித்து சீர் செய்கின்றது.
* நினைத்த இலக்கை அடையவும், கவனத்தன்மையும் உண்டாகின்றது.
* வயதானவர்களின் குரல் வளம் காக்கப்படுகின்றது.
* தெளிவுத்தன்மை பிறக்கின்றது.
* பலர் சேர்ந்து இந்த மந்திரத்தினை குழுவாக உச்சரிக்கும் பொழுது நிறைந்த சக்தி அவ்விடத்தில் உருவாகின்றது.
* வேண்டாத ஊளைச்சதை குறைகின்றது.
* சருமம் சுத்தமாகின்றது.
* தண்டுவடம் நிமிர்ந்து உறுதித்தன்மை பெறுகிறது.
* ஓம் உச்சரிப்பினைக் கேட்டால் கூட அட்ரினல் அளவு குறைகிறது.
* கொலஸ்டிரால் அளவு குறைகின்றது.
* இருதய துடிப்பு படபடப்பின்றி இருக்கின்றது.
* உயர் ரத்த அழுத்தம் கட்டுப்படுகின்றது.
* ஸ்டிரெஸ் ஹார்மோன் அளவு கட்டுப்படுகின்றது
* மனநிலை சீராவதால் அவரது சொல், செயல், அனைத்தும் பண்பானதாக இருக்கின்றது.
* உடலும், மூட்டுகளும் மென்மையானதாக இருக்கின்றன.

அமெரிக்க க்ளீவ்லண்ட், பல்கலைக்கழகம் மேற்கூறிய பலன்களை 'ஓம்' மந்திர ஆய்வு முடிவுகளாக வெளியிட்டுள்ளன.

**'ஓம்' மந்திரம் சொல்லும் முறை :**

* வீட்டிற்குள் ஒரு அமைதியான இடத்தினை தேர்வு செய்யுங்கள்.
* ஒரு சிறிய பாய் ஒன்றினை அமர பயன்படுத்துங்கள்.
* 15 – 20 நிமிடம் இதற்கென தனி நேரம் ஒதுக்குங்கள்.
* சிறிது நேரம் அமைதியாய் அமர்ந்து உங்கள் மூச்சினை கவனியுங்கள். கண்கள் மென்மையாய் மூடி இருக்கட்டும்.
* பின் 'ஓம்' என்ற சொல்லினை அ, ஓ என்ற முறையில் சத்தமாக சொல்லுங்கள்.
* முடிந்த வரை கண்களை மென்மையாய் மூடி மூச்சினை கவனியுங்கள்.
* தினமும் இதனை செய்யுங்கள்.
* ஓம், ஆம் (AUM) என்று எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம்.
* கர்ப்பிணி பெண்கள் 'ஓம்' சொல்வதன் மூலம் அவர்கள் ஸ்டிரெஸ் நீங்குவதுடன் அவர்களுக்கு அமைதியான குழந்தைகள் உருவாவதாக கூறப்படுகின்றது.

* குழந்தைக்கு தாயின் குரல் தெளிவாக பதிவாகின்றது.
* கர்ப்பிணி பெண்கள் அமைதிபடுவதன் மூலம் சுகப்பிரசவம் ஏற்படுகின்றது.
* சொல்ல முடியவில்லை என்றால் 'கேசட் கேட்பதும் நல்லதே' என்று அறிவுறுத்தப்படுகின்றது.
* கருப்பையில் இருக்கும் குழந்தை ஓம் வடிவில்தான் உள்ளது என்பதே ஓம் மந்திர சொல்லுக்கும், மனித வாழ்விற்கும் உள்ள நெருங்கிய தொடர்பினை உணர்த்தும்.

இன்றே இப்பயிற்சியினை ஆரம்பியுங்கள்...!

– அர்ச்சனா சுவேதாரண்யம்,

பெசன்ட் நகர்,

சென்னை–90.

செல் : 9943702054

## உள்ளமே.... உனக்குதான் (கருணை)

விஜய் தொலைகாட்சியில் சில வாரங்களுக்கு முன்பு நீயா, நானா' என்ற நிகழ்வில், விவாதத்தில் திருமண நிகழ்வை குறித்து, கேட்ட தொகுப்பாளர் கோபிநாத் அவர்களின் சிந்தனைக்கு முதல் வணக்கம். கேள்வி மணமகன் போட்டோ பார்த்து ஏன் சம்மதம் தெரிவிக்க மறுக்கிறீர்கள்.

அதற்கான பதில் போட்டோவில் மனதிற்கு பிடித்தது போல் இருப்பார்கள். ஆனால் நேரடியாக பார்த்தால் மனதிற்கு பிடிக்காமல் இருக்கலாம், ஆகையால் நேரடியாக பார்த்தால் மனதிற்கு பிடித்த போட்டோ தெளிவு இல்லாமலும் இருக்கலாம், ஆகையால் நேரடியாக பார்த்து முடிவு செய்வதே, சிறந்த வாழ்க்கை ஏற்படலாம். இறைவனால் தீர்மானிக்கப்பட்ட 'ஊனமுற்றோர்' என்ற சொல் மனதை காயப்படுத்துகிறது என்பதால் திரு கலைஞர் அவர்களின் சிந்தனையாக மாற்று திறனாளி என்று அவர்கள் அழைக்கப்பட்டார்கள்.

அப்படி ஒரு பெண்ணை சமுதாயத்தில் சிலர் ஏற்றுக்கொள்வர், சிலர் மறுப்பர். சிலர் ஏற்றுக்கொண்டு பின் விவகரத்து செய்வர். மாற்று திறனாளி பெண் என்று நன்றாக தெரிந்து ஏற்றுக்கொள்பவரை உடன் பிறந்தோர் உறவுக்காரர்கள் சொல்லி மனம், அறிவு குழம்புவதால் நிச்சயமான பிறகு மறுக்கும் சில மனங்கள். அவர்களின் குழப்ப நிலையுள்ளவர்களுக்கு பெண்ணை எப்படி கொடுக்க முடியும். இதற்கு யார் காரணம் உடன் பிறந்தோர் ஒரு பக்கம், உறவுகள் ஒரு பக்கம், உறவுகளில் ஒரு மனம் கூறுகிறது, 'தலைமகனுக்கு' தை மாதம் திருமணம் வைத்தால் ஆகாது என்று ஒருவர் கூற நிச்சயமாகி இருந்த திருமணம் மறுக்கப்படுகிறது. கண் வைத்து பெண்ணை பார்க்கிறார்கள் குறை என்று வந்தால் கால் சரியில்லை கை சரியில்லை, குழந்தைபேறு இருக்குமா, சில வினாக்கள் எழுப்பி, நிச்சயம் நின்று போகிறது. மணமகன் எடுத்த முடிவில் மாறலாமா! மாறிவிட்டால், அவரை எந்த பெண்ணும் சம்மதிக்கமாட்டார்கள் இது அவர்கள் செய்யும் பாவத்தின் சாபம். பின் தோஷநிவர்த்தி என்று செய்வது ஆணுக்கு பெண் பார்க்கவோ பெண்ணுக்கு ஆண்பார்க்கவோ உறவுகளை அழைத்தால் நல்லதே செய்ய வேண்டும் புத்திமதி என்ற பெயரில் கூறும் அறிவுரை...

அது கெடுதலாக மாறி மனகுழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள். தடங்கல் இல்லையா, பெண் திருமணத்திற்கு வரும் வரை வாழ்ந்த பெற்றோர்கள் சிந்தனை சிந்திப்பதற்கு இடமில்லையா, தடங்கல் என்றால் வேண்டாம் என்று முடிவு எடுத்து இறைவன்விட்ட வழி என்று நினைக்க வேண்டியதுதானே., உறவுகள் சொல்லியும் தேவையற்ற வார்த்தைகள் கேட்டு முடிந்தவரனை குற்றம் குறைச் சொல்லி நிச்சயம், நின்று போனாலோ அந்த பெண்ணின் நிலைமை காத்திருந்து காலங்கள் போய் விடும். அதற்கு உறவுகள் துணை நிற்குமா? ஆட தெரியாத நபர்க்கு முற்றம் சரியில்லை என்பது போல உறவுகளிடம் முடிவு சொல்லுங்கள்... முடிவை கேட்காதீர்கள் இதனை படிப்போர்க்கு உண்மை சம்பவம் என்று புரிதல் வேண்டும். இறைவன் மூலம் உன்னதமான உண்மையான செயல்பாட்டிற்கு சேவை மனப்பான்மை உள்ள மனிதர்கள் சிலர் இருப்பார்கள் நாடி வந்தோர்க்கு அவர்களின்

உள்ளம் என்றுமே உனக்குதான்...

– வேளா. சோம சுவாமிநாதன்,

ஆச்சாள்புரம். 9751730940



## முருகனும் முத்தமிழும்

இரா. சீனிவாசன் எம்.பில் அண்ணாமலைநகர், சிதம்பரம்.

உலகில் பேசப்படும் மொழிகளில் காலத்தால் தொன்மை வாய்ந்தது தமிழ் என்னும் கருத்தினை 'முந்து தமிழ்' (திருப்புகழ் பா. 97) என வரும் திருப்புகழ்த் தொடர் குறிப்பிடுகிறது. இலக்கிய, இலக்கண அருமையையும் சொல்வதற்கு இயலாத சிறப்பிற்குரிய செவ்வியல் மொழி தமிழ் மொழி என்னும் செய்தியை 'பகர்தற்கு அரிதான செந்தமிழ்' (திருப்புகழ் பா 114) என்னும் தொடர்களில் அருணகிரிநாதர் விளக்குகிறார்'.

பாண்டிய மன்னர்கள் மதுரையில் மூன்று சங்கங்களை வைத்துத் தமிழை வளர்த்தனர். இடைச்சங்க, கடைச்சங்க காலத்தில் தோன்றிய மாபெரும் இலக்கண நூல் தொல்காப்பியம். இதில் தமிழர்களுடைய பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம், மொழியைப் பற்றி சிறப்பாக பேசப்படுகிறது. கடைச்சங்க நூல்களாவன. எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் ஆகும். பத்துப்பாட்டின் சிறப்பினை மனோன்மணியம் சுந்தரனார்

''பத்துப்பாட்டாதிமனம் பற்றினார் பற்றுவரோ ?
எத்துணையும் பொருட்கு இயையும் இலக்கணமில்
கற்பனையே''

என்று பாராட்டுகின்றார். தொல்காப்பியம் நிலத்தின் அடிப்படையில் ஐந்து பிரிவாக குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என பிரிக்கப்பட்டன. குறிஞ்சிக்கடவுள் முருகன்.

தமிழ்க்கடவுள் முருகன். தமிழில் முருகன் பற்றித் தோன்றிய முதல் நூல் திருமுருகாற்றுப்படை, இந்நூல் சங்க இலக்கியத்திலும், பதினோராம் திருமுறையிலும் அமைந்து உள்ளது குமரவேலை மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது திருமுருகாற்றுப்படை இந்நூல் பத்துப்பாட்டிற்கு கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளது. முருகனிடம் ஆன்மீக அருள் பெறுவதற்காக வழிகாட்டியாக இந்நூல் அமைந்துள்ளது.

நக்கீரர் முருகனின் தோற்றமும், பெருமையும் என்னும் தலைப்பில்

(தொடக்கத்தில்)

''உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல் கண்டாங்கு
ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி

........................................................................

மறு இல் கற்பின் வாற்றுதல் கணவன்''

என்று பாடுகிறார். முருகன் சூரியனைப் போன்று ஒளியையுடைய திருமேனியை உடையவன். சேர்ந்தவர்களைப்பாதுகாக்கும் திருவடிகளையுடையவன். பகைவரை அடக்கும் திருக்கையையுடையவன் தெய்வயானையாரின் கணவன்.

தமிழர்கள் உலகப் பார்வையே பார்த்தார்கள். முதல் சொல்லே உலகம் என்று தொடங்குகிறது. உலகம் உவக்க வேண்டும் மகிழ வேண்டும் என்பதே தமிழரின் நோக்கம். இதே போன்று ''உண்டால் அம்ம இவ்வுலகம்'' என்ற தொடர் புறநானூற்றில் உள்ளது. ''உலகம் யாவையும்'' என்று கம்பர் தொடங்குவார். ''உலகெலாம்'' என்று தொடங்குவார் சேக்கிழார். உலகம் மகிழ, உலகம் உய்வதற்காகவே திருமுருகாற்றுப்படை எழுதப்பெற்றது என்பது கருத்து.

மேலே சொல்லப்பட்ட பாடலில் மூன்று வரிகளில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன. 'ஞாயிறு இறைவனையும், உலகம் உயிர்த் தொகுதியையும், உலகை சூழ்ந்திருக்கும் இருள் தளையையும் குறிப்பதாகக் கொள்ளலாம். ஞாயிற்றின் ஒளியால் உலகின் இருள் நீங்குவது போலவும், முருகனருளால் உயிர்களின் மலம் நீங்குகிறது என்றும் கருத்தை இத்தொடர்கள் உணர்த்துகின்றன.

அறுபடை வீடுகளில் உள்ள ஆறுத்திருத்தலங்களில் முருகப்பெருமான் ஆட்சி செய்யும் அற்புதம் விளக்கப்படுகிறது. திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமி மலை, திருத்தணி, பழமுதிர்ச்சோலை போன்ற ஆறுதலங்களின் பெருமை பேசப்படுகிறது.

''பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்கு

சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்''

கடலினுள் சூரபன்மன் சென்று ஒளிந்தான்; மாமரமாக நின்றான். அம்மாமரத்தை இரண்டாகப் பிளந்து சூரனைக் கொன்றது ஒளி பொருந்திய இலையையுடைய நீண்ட வேல். அவ்வேல் முருகனுக்கு உரியது என்று நக்கீரர் பாடுகிறார். மேலும் நக்கீரர்

''மாமுதல் தடித்த மறுஇல் கொற்றத்து
எய்யா நல்இசை, செவ்வேல் சேஎய்''

என்று பாடுகிறார். மாமரமாக இருந்த சூரனை இரண்டாகப் பிளந்து கொன்று வெற்றி பெற்றான். இதற்குக்காரணமாக இருந்தது அறிய முடியாத புகழையுடைய சிவந்தவேல். அதனால் செவ்வேல் சேஎய் என்று அழைக்கப்படுகிறான். இரண்டாகப் பிளந்த மாமரம் ஒன்று மயில் ஊர்தியாகவும் மற்றொன்று சேவல், கொடியாகவும் முருகப்பெருமான் அமைத்துக்கொண்டார். மேலும் சூரனுக்கு அருள்புரிந்து மயிலாகவும், சேவலாகவும் ஐக்கியப்படுத்திக் கொண்டார் என்று அறியலாம்.

''முருகப்பெருமானின் புகழ், வேல், மயில், சேவல் ஆகியவற்றின் பெருமைகளைப் பாடுவதே அருணகிரிநாதரின் முதன்மையான குறிக்கோள்.

''ஆடும் பரி வேல் அணி சேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்''

(கந்தரனுபூதி பா.1)

''சிகராத்திரி கூறிட்ட வேலும் செஞ்சேவலும்
செந்தமிழால் பகர் ஆர்வம் ஈ''

(கந்தரலங்காரம் பா–52)

எனவரும் அருணகிரிநாதரின் அருளிச் செயல்களில் உள்ள தொடர்கள் நமக்கு உணர்த்துகின்றன.

''பைந்தாள் குவளைத் தூஇதழ்கிள்ளி
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின் வைத்து,
திலகம் தைஇய தேம் கமழ் திருநுதல்''

சூர மகளிர் தலை அலங்காரம், நெற்றியில் அணியும் வலம் புரிசங்கு, நெற்றியில் திலகம் ஆகியவற்றை சிறப்பாக நக்கீரர் பெருமான் பாடுகின்றார். அக்கால மகளிர் செய்யும் தலை அலங்காரம், நெற்றியில் அணியும் அணிகலன்களை எல்லாம் இக்கால நவநாகரீக மகளிர் செய்வதைப்போல அழகாக எடுத்துக்காட்டியுள்ளார். அந்த மகளிர் முருகனின் கோழி கொடியைப் புகழ்ந்துபாடி வாழ்த்தி ஆடுகின்றனர். இவர்கள் பாடி, ஆடும் ஒலி எதிரொலியாக மலைப்பக்கம் கேட்கின்றது என்று குறிஞ்சி மலையையும், இயற்கையையும் வர்ணித்துப்பாடுகின்றார் நக்கீரர்.

ஆறுமுகங்களின் செயல்கள்பற்றி நக்கீரர் பாடுகிறார்

''மா இருள் ஞாலம் மறுஇன்றி விளங்க
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் ஒருமுகம்

.................................................................

மடவரல், வள்ளியோடு, நகை அமர்தன்றே'

என்று முருகன் முகம் அவனைப் பார்த்தோரின், நினைத்தோரின் அக இருள் நீங்குகிறது என்றும், வேண்டியவர்களுக்கு மகிழ்ந்து கொடுப்பது ஒரு முகம், அந்தணர்கள் செய்யும் வேள்வியை ஏற்று மகிழ்வது ஒரு முகம், எல்லாத்திசைகளிலும் நோக்கி இனிமை தருவது ஒரு முகம், பகைவரை அடக்கி தீமையை அழிக்கும் ஒரு முகம், இன்ப வாழ்வை உணர்ந்த வள்ளியோடு மகிழ்வாக உள்ள முகம் என்று ஆறுமுகங்களின் பெருமையைப் பாடுகின்றார். இதேகருத்தை திருப்புகழில் அருணகிரிநாதர் பின்வருமாறு பாடுகின்றார்.

''ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே
ஈசருடன் ஞான மொழி பேசும் முகம் ஒன்றே

...........................

ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே''

என்று பாடுவதை கேட்டு இன்புறத்தக்கது
பன்னிருகைகளின் செயல்களைப்பாடியுள்ளார்.

அறுபடை வீடுகளில் ஒன்றான திருவாவினன் குடி (பழனி) மிகப் பெருமை வாய்ந்த தலமாகும். இது சித்தர்களால் நிர்மாணித்து வழிபாடு செய்யப்பட்ட சிறந்த திருத்தலமாகும். போகசித்தர் நவபாஷாணத்தினால் வடித்து வணங்கிய திருமேனிதான் இன்று நாம் கொண்டாடும் பழனியாண்டவர் என்னும் முருகப்பெருமான்.

''பலவின் முதுபழம் விழைவு செய்தொழுகிய
நறவு நிறைவயல் கமுகடர் பொழில் திகழ்
பழனிமலை வரு புரவலர் அமரர்கள் பெருமாளே''

பழனி – திருப்புகழ் – 132.

''திருப்புகழ் பெற்ற தலங்களில் பழனியே அதிகமாக 96

பாடல்களைக் கொண்டிருப்பது திருவாவினன் குடிக்கு 13 பாடலும் சிவமலை, சிவவெற்பு, சிவகிரி, என 4ம், பழனிசிவகிரிக்கு 2ம் வீரை, வீராபுரி, பழனி என 6ம், பழனி, பழனிமலை, பழனிப்பதி என 71 பாடல்களும் உள்ளன. எனவே அருணகிரிநாதர் வெகுகாலம் தங்கி இருந்து திருப்புகழ் பாடினார் என்பது பெறப்படும்.''

படைப்புத்தொழிலைச் செய்யும் பிரமன் பிரவணமந்திரத்திற்கு பொருள்கூற இயலாமல், முருகன் பிரமனை சிறைப்பிடிக்கிறார். பிரமனை விடுவிக்க திருமால், சிவன், இந்திரன் மற்றும் தேவர்கள் வந்தனர். முருகப்பெருமானே முத்தொழில் செய்கிறார். ''பலர்புகழ் மூவரும் தலைவர் ஆக'' என்று நக்கீரர் பெருமையாகப்பாடுகிறார்.

திருஏரகம்–சுவாமிமலையில் சிவபெருமான் கேட்க முருகப்பெருமான் தன் தந்தை மடி மீது அமர்ந்து பிரணவமந்திரத்திற்குப் பொருள் கூறுகின்றார். எனவே முருகப்பெருமானை சுவாமிநாதன் என்றும் குருநாதன் என்று அழைப்பர்.

''குருவாய் அரற்கு உபதேசம் வைத்த
குகனே குறத்தி மணவாளா
குளிர்கா மிகுந்த வளர்புகமெத்த
குடகாவிரிக்கு வடபாலார்
திருவேரகத்தில் உறைவாய் உமைக்கோர்
சிறுவா! கரிக்கும் இளையோனே''

என்று அருணகிரிநாதர் இந்த வரலாற்றை அழகுதமிழில் பாடுகின்றார்''.

சுவாமிமலையில் அந்தணர்கள் மிகுதியாக வாழ்ந்துள்ளனர். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், கோடல், கொடுத்தல் என ஆறுவகைத் தொழில்களையும் செய்தனர். அவர் முருகனைப்புகழ்ந்து ஓம் நமோ குமாராய என ஆறெழுத்து மந்திரத்தை தம் நாவினால் இனிமையாகப் பாடினர். அங்கும் முருகன் இருப்பான்.

முருகன் எல்லா மலைகளிலும் எழுந்தருளுகின்றான். ஒவ்வொரு குன்றில் வாழ்பவர்களும் குரவைக் கூத்தாடுவர். பூசாரி என்ற வேலன் தலை மாலை அணிந்துள்ளான். மலையில் வாழும் வேடர்கள் நீண்ட மூங்கில் குழாய்களில் முற்றிவிளைந்த தேனாலாகிய மதுவை தம் சுற்றத்தாருடன் குடித்து மகிழ்ந்தனர். தொண்டகம் என்னும் சிறிய பறையை முழக்கி குரவைக் கூத்து ஆடுவர். அவர்கள் மார்பில் சந்தனம் மணக்கும். இங்கு நக்கீரர் குறிஞ்சி நில மலைவளம் பற்றியும், குறவர்களின் வாழ்க்கையினையும், கூத்து ஆடுதலையும் படம் பிடித்துக் காட்டுகின்றார். மலைமகளிர் சுனையில் நீராடி கண்ணிமாலையை தலையில் அணிவர். தழை ஆடை அணிவர். ஆடையில் கடம்பப்பூவையும் கட்டி இருப்பர். ஆடை குளிர்ச்சியாக இருக்கும். அம்மகளிர் மயில் போன்ற சாயலையும், நடையையும் உடையவர்கள். மலையில் வெறியாடுகின்ற இடத்தில் எதிர் ஒலிக்கும்படி முருகன் புகழைப் பாடுவர். வேண்டுபவர்களுக்கு முருகன் எல்லா வரத்தையும் தருவான் என்று நக்கீரர் குன்றுதோராடலில் பாடுகின்றார்.

பழமுதிர் சோலையில் சோலைக்காட்சி அருவிக்காட்சியும், இயற்கை வளமும் சிறப்பாக வர்ணித்து நக்கீரர் பாடுவதை அறியலாம். அந்த பழமுதிர் சோலைக்கு உரியவனாகிய முருகன் உனக்குப் பெறுவதற்குரிய பரிசில்களை நல்குவான் என்று கூறி முடிக்கின்றார்.

நிறைவாக முருகு நூலின் பெருமை சித்தாந்த கருத்துக்கள் முருகனது வேலின் பெருமை. ஆற்றல், குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கைநெறி, மகளிர் தலை அலங்காரம், ஆடைகள் இவற்றை அறிகிறோம். முருகன் சிவனிடம் பிரணவமந்திரத்திற்கு பொருள் கூறுதல் மலையின் வளம், இயற்கை வர்ணனை இசைக்கருவிகள், கூத்து ஆகியவற்றைக் கண்டோம்.

நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப் படையைத் தினமும் பாராயணம் செய்தால் முருகன் நேரில் வந்து நம் மனக்கவலையைப் போக்குவான். நாம் நினைத்தவற்றை எல்லாம் தருவான்.

முருகா! சரணம்!



## திருவிளையாடற் புராணம்

### 56, இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்.

'சிவகாமியின் செல்வன்'

டாக்டர் தி. பாலசுப்பிரமணியன்.

சென்ற இதழ் தொடர்ச்சி...

**குலேச பாண்டியன் புலம்பி அழுது வருந்துதல் :**

அடியார் சொன்ன செய்தி மன்னன் செவியில் நெருப்பில் காய்ச்சிய வேலெனப் புகுந்தது. நடுங்கினான். ஒடுங்கினான். உணர்வு மங்கக் கிடந்தான். சற்று நேரத்தில் தெளிந்தான். அறிவு வந்தது. எழுந்தான். "எம்பெருமானே! என்ன பிழை செய்தேன்? இங்கின்றி எங்குற்றாய்? திரிபுரம் எரித்தவனே! பழைய சிவலோகத்தின் கண் உள்ளாயா? கயிலையில் உள்ளாயா? மெய்யடியார் மனத்தின் கண் உள்ளாயா? மறைமுடியின் கண் உள்ளாயா? எங்கு சென்றாய்? சிவனே?" என்று புலம்பினான், மனந்தளர்ந்தான்.

**வழுதி (பாண்டியன்) இறைவனை வையையாற்றின் தென்கரையில் தரிசித்தல் :**

அப்பொழுது ஒரு சிலர் பாண்டியனிடம் ஓடி வந்தனர். வையையாற்றின் தென் கரையில் தாங்கள் ஒரு கோயிலைக் கண்ட அதிசயத்தை விளக்கினர். "நான்முகன் இவ்வுலகைப் படைத்த நாள் முதல் ஒரு காலத்திலேனும் காணாத காட்சி! சங்கப் புலவர்களோடும்,மீனாட்சியம்மையோடும்சோமசுந்தரக் கடவுள் வந்து அங்கு எழுந்தருளி இருக்கிறார்" என்றனர். உடனே பாண்டியன் விரைந்தான். அங்கு சென்று இறைவனைக் கண்டான். வணங்கினான். அழுதான். ஐயனே! திருவடிகள் சிவக்க, மதுரை மா நகர் பொலிவிழக்க உலக மாதாவோடு இங்கு வந்து எழுந்தருளியுள்ளீர்களே! காரணம் என்ன? அடியேனால் ஏதாகிலும் தவறு நிகழ்ந்துவிட்டதோ? அடியேனின் பரிசனங்களாலோ, பகைவராலோ, கள்வராலோ, விலங்குகளாலோ இத்தமிழ் நாட்டின்கன் இடையூறு ஏதாகிலும் நிகழ்ந்துவிட்டதோ? அறம் குறைந்ததோ? ஏதாலும் தவநெறி பிறழ்ந்ததோ? அடியேன் ஏதும் அறிந்திலேன்" கூறுங்கள் பெருமானே!" என்றான்.

**இறைவன் விண்வழியே விடை மொழியளித்தல் :**

வையை நாடனே! உனது சோத்தம் கேட்டு மகிழ்ந்தோம்! (சோத்தம் என்றால் இழிந்தார் செய்யும் அஞ்சலி; இங்கு துதியை உணர்த்திற்று). திருத்தலங்களில் உயர்ந்தது திரு ஆலவாயே! இங்கு எண்ணிலா சுயம்பு இலிங்கங்கள் உள்ளன. அவற்றுள் **64** உயர்ந்தன. அவற்றுள் **8** மிகவும் உயர்ந்தன. அவ்வெட்டும் அட்டதிக்குப் பாலகர்களால் பூசிக்கப்பட்டவை. இவ்வெட்டுள் நாம் வந்து எழுந்தருளியிருக்கும் இலிங்கம் நமது தோழன் குபேரனால் பூசிக்கப்பட்டதாகும். மேற்கூறிய இலிங்கங்கள் யாவும் ஒருழிக்காலத்தில் மறைந்தன. இது நம் தோழன் கண்டு வழிபட்ட இலிங்கமாதலால் நாம் இங்கே வந்து உறைந்தருளினோம். ஆகையால் இவ்விடம் "வடதிருவாலவாய்" எனச் சிறப்புறும். நாம் கடம்ப வனத்தை விட்டு ஒரு பொழுதும் நீங்கி விடமாட்டோம். நீயும் வேறு தீங்குடையவன் அல்லன். இடைக்காடன் செய்த செய்யுளை இகழ்ந்தாய்; அப்பொழுதே நாம் அவன் பால் வைத்த அருளால் இங்கு வந்தோம்!" அதனைக் கேட்ட பாண்டியன் சிறியேன் செய்த இப்பிழையினைப் பெருமானாகிய தாங்கள் பொறுத்தல் பெருமையுடையதன்றோ!" என்று சொல்லி வணங்கினான். பிழை பொறுத்த பெருமான் மீண்டும் மீனாட்சியம்மையுடன் சங்கப்புலவர்களுடன் தம் திருக்கோயிலுக்குள் புகுந்தருளினார்.

**இடைக்காடன் பாண்டியனால் சிறப்பிக்கப்படுதல் :**

சோமசுந்தரக் கடவுளின் பின் திருக்கோயில் சென்று வணங்கிய பாண்டியன் இடைக்காடனோடு, சங்கப்புலவர்களோடு புடைசூழ அரண்மனை சென்றான். விதிப்படி இடைக்காடனை அலங்கரித்து புலவர்கள் சூழப் பொன்னாசனத்தில் இருத்தித் தானும் சிங்காதனத்தில் அமர்ந்து இடைக்காடன் இயற்றிய செய்யுளைக் கேட்டான். பரிசுகள் பல கொடுத்துப் பாராட்டி மகிழ்ந்தான். யானை, குதிரை, விளை நிலங்களையும் வெகுமதியாக வழங்கினான். அவன் பின் காலால் ஏழடி நடந்து போய்ப் புண்ணியப் புலவீர்காள்! அடியேன் இடைக்காடனுக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்தருள்வீர் என்று வேண்டினான். புலவர்களும் அதனை மறந்து அவனை வாழ்த்தினர். குலேசனுக்கு இறையருளால் அரிமர்த்தனன் என்னும் சிங்கம் போன்ற மகன் பிறந்தான். பல காலம் கழித்து அரிமர்த்தன பாண்டியனுக்கு முடிசூட்டி அரியணையில் அமர்த்தினான். பின்னர் இறைவன் திருவடிதீட்சை அடைந்தான்.

**நீதி :**

செருக்குவரின் பொறாமை வரும். நல்வினை, உழைப்பு, உறுதி, இறையருள் இவற்றால் ஒருவன் உயர்சிறப்படைகிறான். அவனுக்கு அதனைத் தந்தருளியவன் தாயான சிவன். பொறாமைப்பட்டால் தாயாகிய சிவன் சினப்படுவான். சிவன் சினத்தைப் பெறாமல் அருள் மட்டுமே பெற வேண்டுமென்றால் செருக்குபொறாமைஎன்னும்இருஇழிகுணங்களையும் அறவே கைவிட வேண்டும்.

### சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**அண்ணாநகர் :**

சங்க கூட்டம் கொரட்டூர் சங்க குடியிருப்பில் 15–12–2024 அன்று நடைபெற்றது. ஹெல்ப் ஏஜ் இண்டியா அமைப்பில் இருந்து திரு. சிவக்குமார் வந்திருந்து, வயதானவர்கள் எப்படி பத்திரமான முறையில் ஆண்ட்ராய்டுபோனை பயன்படுத்துவது எனபுரஜெக்டர் ஸ்கிரீன் உதவியுடன் விளக்கினார். நம் பெயரில் எத்தனை போன் இணைப்பு இருக்கிறது என பார்க்கும் முறையை போன் தொலைந்து விட்டால் எப்படி நம்பரை பிளாக் செய்வது நமது நம்பரை பயன்படுத்தினால் எப்படி தகவல் பெறுவது என சொல்லிக்கொடுத்தார். திரு. சிவக்குமார் அவர்களுக்கு சால்வை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

திநகர், ஏ.ஆர்.சி. காமாட்சி ஜுவல்லரியில் இருந்து திரு. சீனிவாசன், திரு. மோகன் வந்திருந்து எல்லோருக்கும் மாதாந்திர, தினசரி நாட்காட்டி வழங்கி நகையின் தரம் பற்றியும், கார்காத்தார் சங்கத்திலிருந்து வருபவர்களுக்கு சிறப்பு சலுகை தருவதாகவும் தெரிவித்தார்கள். அவர்களுக்கு தலைவர் அவர்கள் சால்வை அணிவித்து மரியாதை செய்தார்கள்.

தலைவர் அவர்கள் பேசும் போது ஹெல்ப் ஏஜ் இண்டியா சிவக்குமார் அவர்களுக்கும், ஏ.ஆர்.சி. காமாட்சி நிறுவனத்தினருக்கும் நன்றி தெரிவித்து கொண்டார். செயலாளர் பேசும் போது எல்லோரும் பன்னிரு திருமுறையில் இரண்டு மூன்று பதிகங்களாவது பார்க்காமல் சொல்ல பழகலாம். அது நினைவுத்திறனை மேம்படுத்த உதவும் எனவும் மாதம் இருமுறை திருமுறை பாடுதல் நிகழ்ச்சி நடைபெறுவதாகவும் தெரிவித்தார். இளைஞர்களை அழைத்து வந்து போன் பற்றிய சந்தேகங்களுக்கு விடை பெறலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது.

கோயம்பேட்டில் இருந்து புதிய உறுப்பினராக திரு. நடராஜன் அவர்கள் வந்திருந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு சொந்த ஊர் சிதம்பரம் என்றும், தற்போது சென்னையில் விஷன் பிராப்பர்ட்டி என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் வேலை பார்ப்பதாகவும் தெரிவித்தார். நிறைவாக திரு. பால அறிவொளி நன்றியுரையுடன் கூட்டம் நிறைவு பெற்றது.

– என். ஆனந்தகணபதி, செயலாளர்.
9094682811

**பெருங்களத்தூர் :**

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 22–12–2024 அன்று தலைவர் திரு. R. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் அனைவரும் இணைந்து தமிழ் தாய் வாழ்த்து பாட நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர்களாக திருவாளர்கள் K. நாகலிங்கம், A. பட்டாபிராமன், S. நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டு தங்களது கருத்துரைகளை வழங்கினார்கள். விளையாட்டு மற்றும் இதர போட்டிகளை 25–12–2024 அன்று நடத்துவது பற்றி இணைச்செயலாளர் திரு. V. சேகர் தலைமையிலான குழு விரிவாக விவாதித்து அதன் முடிவுகளை திரு. பரணிதரன் படிக்க சிற்சில மாற்றங்களுடன் செயற்குழு ஏற்றுக்கொண்டது. சங்கத்தின் பொதுக்குழு மற்றும் ஆறாவது ஆண்டு விழா சிறப்பாக நடத்துவது பற்றி விவாதிக்கப்பட்டு பொறுப்புகள், பகிர்ந்து அளிக்கப்பட்டது. உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் பொருளாளர் கலந்துகொள்ள முடியாததால் இன்றைய நிதி நிலை அறிக்கையை செயலாளர் திரு. G. ராஜகோபாலன் வாசிக்க செயற்குழு ஏற்றுக்கொண்டது.

திருவாளர்கள் R. கார்த்திகேயன் – தலைவர் S. சீனிவாசன் – துணைத்தலைவர் உறுப்பினர்களின் சந்தாதொகை மற்றும் நன்கொடை வசூலிப்பது பற்றி எடுத்துக் கூறி செயற்குழு உறுப்பினர்களை துரிதமாக செயல்பட வலியுறுத்தினார்கள்.

திரு. V. சேகர் அவர்கள் நன்றி நவில, அனைவரும் இணைந்து தேசிய கீதம் பாட கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– கோ. இராஜகோபாலன், செயலாளர்.

## கடலூர் :

சங்க கூட்டம் 06–12–2024 அன்று சங்கக் கட்டிடத்தில் சங்கத் தலைவர் தலைமையில் கூடியது. துணைச்செயலாளர் சிதம்பரம் அனைவரையும் வரவேற்றார். திரு. V. சிவப்பிரகாசம் அவர்கள் சேமிப்புத்திட்டப் பயனாளிகளை தேர்வு செய்தார்.

கூட்டத்தில் பேசிய தலைவர், வழக்கம் போல இவ்வாண்டும் 2025–ம் ஆண்டிற்கான மாதாந்திர நாட்காட்டியினை அச்சிட்டு 15 டிசம்பர் 2024க்குள் உறுப்பினர்கட்கு வழங்கிட கேட்டுக்கொண்டார். கட்டிடக்குழுத் தலைவர் திரு. S. பிறையோன் பொருளாளர், திரு. G. பாலசுப்பிரமணியன், செயலாளர் திரு. B. சிவமணி செயற்குழு உறுப்பினர் திரு. M. சுதாகரன் ஆகியோர் மேற்படி நாட்காட்டிகளை உரிய காலத்திற்குள் அச்சகத்திலிருந்து பெற்றிட ஆவண செய்திட கேட்டுக்கொண்டார்.

தலைவர், செயலாளர், பொருளாளர், துணைச்செயலர் மற்றும் திரு. S. சுரேஷ் ஆகியோர் மேற்குறிப்பிட்ட காலகெடுவிற்குள் நாட்காட்டிகளை சங்க உறுப்பினர்கட்கு விடுபடாமல் கொண்டுசேர்த்திட அன்புடன் கேட்டுக்கொண்டார். மேலும் கடலூர் மாவட்டம் "ஃபெஞ்சல்" புயலால் பாதிக்கப்பட்டுள்ளதால் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட பொது மக்கட்குத் தேவையான உதவிகளை செய்திடக் கேட்டுக் கொண்டார். மேலும் தங்களால் இயன்ற பொருளுதவிகளையும் வழங்கிட கேட்டுக்கொண்டார். பொங்கல், ஆங்கிலப் புத்தாண்டு விழாவினை எளிமையாகக் கொண்டாடலாம் என முடிவு செய்யப்பட்டது. அனைவருக்கும் பொங்கல், புத்தாண்டு வாழ்த்துக்கள்.

துணைத்தலைவர் திரு. S. இராஜதுரை அனைவருக்கும் நன்றி உரை ஆற்றியதுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

- T. விவேகானந்தன்,
தலைவர்.

## அரியலூர்

சங்க ஆண்டு விழா 25.12.2024 புதன்கிழமை அன்று தலைவர் V. செல்வராஜ் பிள்ளை தலைமையில், சாம்பசிவம் பிள்ளை தெரு தெய்வத்திரு. சிவ. தங்கவேல் பிள்ளை இல்ல மேல் தளத்தில் நடைபெற்றது.

சிறப்பு சொற்பொழிவாளராக 'சைவ திருமுறை நேர்முக பயிற்சி மைய பேராசிரியர் வடலூர். திருவாளர். சு. தியாகராஜன் பிள்ளை M.A.,B.Ed., அவர்கள் 'ஈசனடி போற்றி' எனும் தலைப்பில் மிக சிறப்பாக சொற்பொழிவு செய்தார். சங்க உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

வரவேற்புரை : சி. மதிவாணன் பிள்ளை செயலாளர், சிறப்பு விருந்தினர்: மு. செந்தில்நாதன் பிள்ளை மண்டல செயலாளர், V. சண்முகசுந்தரம் பிள்ளை பொருளாளர், கு. பாலகிருஷ்ணன் பிள்ளை ஆலோசகர், T. செந்தில்குமார் பிள்ளை கௌரவ தலைவர், S. மகாலிங்கம் பிள்ளை துணைத் தலைவர், D. கண்ணன் பிள்ளை துணைச் செயலாளர், செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் கலந்து கொண்டனர். கூட்டம் முடிவில் அனைவருக்கும் 2025 நாள்காட்டி காலண்டர் வழங்கி, மதியம் விருந்து அளிக்கப்பட்டது.

V. செல்வராஜ் பிள்ளை, தலைவர்

## செந்துறை :

16–12–2024 அன்று திருஞானசம்பந்தர் மடாலயத்தில் செந்துறை சங்கக்கூட்டம் தலைவர் திரு. த. வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சங்க செயலாளர் திரு. சா. ஜெயராமன் அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்றார்.

தலைவர் அவர்கள் தனது தலைமையுரையில் சங்கத்தின் வளர்ச்சிக்கு அனைவரின் ஈடுபாடு மற்றும் பொருள் (பணம்) ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்து, நமது ஒத்துழைப்பையும் கோரினார்.

இக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

28–09–2024–ல் அரியலூரில் நடைபெற்ற மாநில பொதுக்குழு கூட்டத்தில் Volunteer ஆக பணிபுரிந்த நமது செந்துறை சங்க உறுப்பினர்களுக்கு நன்றி.

அரியலூரில் 28–09–2024–ல் நடைபெற்ற பொதுக்குழுவில் நமது கோரிக்கையாக 'கல்லூரி படிக்கும் மாணவ / மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்குவது போல், +1, +2 படிக்கும் மாணவ + மாணவியருக்கும் கல்வி உதவித்தொகை வழங்க வேண்டும் என எடுத்துரைக்கப்பட்டது. இதை பரிசீலிப்பதாக கூறிய பொதுக்குழுவிற்கு எங்களது நன்றி.

பூர்த்தி செய்யப்பட்ட உறுப்பினர் படிவம் (membership form) தராதவர்கள் உடனடியாக கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அனைத்து குடும்ப உறுப்பினர்களும் ஆண்டு சந்தா தொகையை தவறாமல் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. நமது சங்கக் கூட்டம் ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை (First Sunday) திருஞானசம்பந்தர் மடாலயத்தில் மாலை 6 மணி அளவில் நடைபெறும். மடாலயத்தின் கட்டுமான பணிகளை விரைந்து முடிக்க செந்துறையைச் சேர்ந்த அனைத்து சொந்தங்களும் நிதியுதவி அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சங்கப் பொருளாளர் திரு. அ. மணி அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே முடிவுற்றது.

– சா. ஜெயராமன்,
செயலாளர்.

## இளையபெருமாள் நல்லூர்

ஆண்டின் தொடக்கத்தில், 50 ஆண்டுகளை கடந்து சிறப்பாக செயல்பட்டு வரும் நமது கார்காத்தார் சங்கத்திற்கு புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மகளிர்க்கு என தனி சங்கம் துவங்கப்பட்டது. ஜெயங்கொண்டம் பகுதியில் உள்ள 13 கார்காத்தார் சங்கங்களின் ஐம்பதாவது ஆண்டு பொன்விழா 3.3.2024 அன்று கொண்டாடப்பட்டது. வாண வேடிக்கை, மேளதாளத்துடன் கலந்து கொண்ட உறவுகள் அனைவரையும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது, குழந்தைகளுக்கு விளையாட்டு போட்டி நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது.

65 வீடுகளைக் கொண்ட கார்காத்தார் சொந்தங்கள் அனைவரும் கார்காத்தார் ஒப்புரவு வாங்க சம்மதம் தெரிவித்து, வீட்டுக்கு ஒரு ஒப்புரவு என்ற அடிப்படையில் 100% கார்காத்தார் ஒப்புரவு வாங்கி பெருமிதம் கொண்டுள்ளோம்.

20.3.2024 – அன்று மாநில நிர்வாகிகள் முன்னிலையில் ஜெயங்கொண்டம் பகுதி கார்காத்தார் சங்கங்களின் ஐம்பதாவது ஆண்டு பொன்விழா வெற்றியின் நினைவாக திருமதி வைரம் சுப்பு பிள்ளை அவர்களுக்கு 'கோ' தானம் வழங்கப்பட்டது.

29.6.2004 கார்குல மகளிர் சேவை குழுவால் நமது மகளிர் சங்கத்திற்கு இலவசமாக இரண்டு தையல் இயந்திரங்களும் ஒரு ஓவர்லாக் இயந்திரமும் வழங்கப்பட்டது அதனுடன் இளையபெருமாநல்லூர் சங்கத் தலைவர் அவர்களால் ஒரு தையல் இயந்திரமும் வழங்கப்பட்டது. இதைத்தொடர்ந்து மகளிர்கள் 25 பேர் குழுவாக இணைந்து தையல் பயிற்சியில் ஈடுபட்டு செவ்வனே தையல் கலையை கற்று வருகின்றனர். மாநில சங்கத்தினரிடமும் நகர்ப்புறம் மற்றும் பெருநகர் புறங்களில் வசிக்கும், தொழில் செய்யும் நம் குல மக்களிடம் தையல் தைப்பதற்கான ஆர்டர்களை பெற்று தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஆண்கள் சங்கத்திலும் மகளிர் சங்கத்திலும் சேர்ந்துள்ள சந்தா பணத்தை அந்தந்த சங்க உறுப்பினர்களுக்குள்ளேயே குறைந்த வட்டிக்கு கொடுத்து தவணை முறையில் திரும்பப் பெறும்முறை அமல்படுத்தப்பட்டது.

செயலாளர் கு.பாலசுப்ரமணியம் அவர்களால், இந்த ஆண்டு பள்ளிக்கல்வி மற்றும் உயர் கல்விக்கு செல்லும் மாணவ செல்வங்கள் கல்வி ஊக்கத்தொகை பெற CREW அறக்கட்டளைக்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. மகளிர் அணி தலைவி சம்பூர்ணா இனியன் அவர்கள் முயற்சியால், மகளிர் மேம்பாட்டிற்காக CREW அறக்கட்டளை மூலம் வட்டி இல்லா கடன் பெற 20 பேர் கொண்ட மகளிர் குழு அமைக்கப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

தலைவர் கு.கோவிந்தராசு மற்றும் அவரது தமக்கை வள்ளி நடராஜன் ஆகியோர்களால் புலவர். கோ.கு.ஐயா அறக்கட்டளை தோற்றுவிக்கப்பட்டு வாரந்தோறும் 50 கர்ப்பிணி பெண்கள் பயன்பெறும் வகையில் மீன்சுருட்டி அரசு மருத்துவமனையில் அன்னதானம் வழங்குவதற்கு பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு துவங்கப்பட்ட மீன்சுருட்டி லயன்ஸ் கிளப் தலைவராக திரு க. குமார் பிள்ளை அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமைக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. ஐந்தாண்டு நிறைவு செய்யும் ஊராட்சி மன்ற தலைவர் திரு ராஜ.வெங்கடேசன் அவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. தம்பா விநாயகர், அபிராமி உடனுறை கைலாசநாதர், கிருஷ்ணன், அய்யனார், பிணிதீர்த்த அம்மன், புண்ணிய தாய், வீரனார், பெருமாள் மற்றும் புற்றுக் கோயில்களுக்கு சீரும் சிறப்புமாக அனைத்து விழாக்களையும் முனைப்போடு நடத்தும் நம் குல சொந்தங்களை வாழ்த்துகிறோம். இந்த ஆண்டு திருமணமான தம்பதிகளுக்கும் வீடு கிரகப்பிரவேசம் செய்தவர்களுக்கும் திரளாக கலந்து கொண்டு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு சிவலோகப் பதவி அடைந்த அனைவருக்கும் அந்தந்த மாத கூட்டத்தில் அவர்களின் ஆன்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. சென்ற கூட்டத்தில் வரும் தைப்பொங்கல் கரிநாள் விளையாட்டு விழா நடத்துவதை பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

செயலாளர்

**சீர்காழி :**

சங்க செயற்குழுக் கூட்டம் 7–12–24 மாலை சங்கக் கட்டிடத்தில் முன்னாள் தலைவர் திரு. K. சுகுந்தவனநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சங்க உறுப்பினர் மற்றும் மகளிர் அணியினர், கும்பகோணம் கார்காத்தார் சங்கத்தின் பொங்கல் விழா அழைப்பினை ஏற்று 29–12–23 செல்வதென்று என்றும்,

சீர்காழி சங்கத்தின் பொங்கல் விழா 5–01–25 அன்று கொண்டாடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அனைத்து உறுப்பினர்களுக்கும் நாட்காட்டி வழங்கப்பட்டது.

பொருளாளர் திரு. சே. இரவிச்சந்திரன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– சி. அகோரம்,
செயலாளர்.

**மயிலாடுதுறை**

மயிலாடுதுறை ஸ்ரீ விமலாம்பிகை திருமண மஹாலில் நகர கார்காத்த வேளாளர் சங்கம் மயிலாடுதுறை சார்பில் கார்த்திகை திங்கள் 23–ஆம் நாள் (08–12–2024) அன்று ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. திருமதி. G. கார்குழலி அவர்கள் இறைவணக்கம் பாடினார். முதல் நிகழ்வாக காலை 8–30 மணிக்கு மகளிரால் திருவிளக்கு ஏற்றப்பட்டது. காலை 9–30 மணிக்கு சேவைசெம்மல் திரு. G. சிங்காரவேலு அவர்கள் சங்க கொடியை ஏற்றினார். திரு. சீனுவாசன் மண்டல செயலர் அவர்கள் திரு. M. ராமச்சந்திரன் மும்மாவட்ட கார்காத்தார் சங்கச் செயலாளர் அவர்கள் முன்னிலையில் திரு. A. ராஜேந்திரன் செயலர் (பொறுப்பு) அவர்கள் வரவேற்பு வழங்கினார். திரு. M. சத்தியபால் முன்னாள் மாநில பொதுச்செயலாளர் அவர்கள், திரு. A.R.S. மதியழகன் அவர்கள் செந்தில் பைப்ஸ் & எலக்ட்ரிக்கல் இருவரும் வாழ்த்து செய்தி அனுப்பி இருந்தார்கள். திரு. S. சண்முகம் பிள்ளை மாநில துணைத்தலைவர் அவர்கள், திரு. R. பாலசுப்ரமணியன் அவர்கள் (முன்னாள் மாநில சங்கத் தேர்தல் ஆணையர்) திரு. G. மதியரசன் பிள்ளை மும்மாவட்ட கார்காத்தார் சங்கம் (தலைவர் பொறுப்பு) அவர்கள் திருமதி. S. பில்டெக் அருள்மொழி அவர்கள், மகளிரணி தலைவி கூட்டத்தில் அனைவரும் சங்கம் உருவானது பற்றியும், பழைய நினைவுகளையும் கூட்டத்தில் பகிர்ந்து கொண்டார்கள். நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். மகளிர் அணியினர் இடைவெளியில் மேடையில் சிறுவர்கள், பெரியவர்களுக்கு விளையாட்டு போட்டி நடத்தினார்கள். மதியம் 2–30 மணியில் திரு. முருகானந்தம் தலைவர் (பொறுப்பு) அவர்கள், தலைமையில் திரு. R. சந்திரசேகரன் பொருளர் அவர்கள், திரு. ஞானசேகரன் இணைச்செயலர் அவர்கள் திரு. G.V. கவாஸ்கர் அவர்கள் இணைச்செயலர் முன்னிலையில் திரு. J. குமார் அவர்கள் தலைமை நிலையச் செயலர், திரு. கைலை. சண்முகம் அமைப்புச் செயலாளர் அவர்கள், திரு. G. இராமநாதன் மாநில பொருளாளர் அவர்கள், திரு. M. பாலசுப்ரமணியன் செயலர், அவர்கள் Dr. K. ராஜசுந்தரம் (எ) K.K.R.K. சுரேஷ் மாநிலத் தலைவர் அவர்கள் பெண்கள் திருமணம் பற்றி விரிவாகப் பேசினார்கள். புதிய பொறுப்பாளர்களுக்கு சால்வை அணிவித்து மரியாதை செய்தார்கள். இறுதியாக சிறப்பு பேச்சாளர்கள் கார்குல அறம் என்ற தலைப்பில் திரு. Dr. P.S. குமார் M.E.,MBA,Ph.D.,FIE அவர்கள் Executive Director, Prithvi Grow Care (P) Ltd, Chennai. திரு. Dr. S. அசோகன் B.S.M.S. MBA., அவர்கள் Director, Natureshine Herbals Pvt Ltd, Chennai, இருவரும் 1½ மணி நேரம் பேசி விழாவை சிறப்பு செய்தார்கள். விழாவிற்கு வருகை தந்த அனைவரும் விழாவினை கண்டு களித்து விழா சிறப்பாக நடைபெற்றது என்று பாராட்டினார்கள். சிறப்பு பேச்சாளர்கள் இருவரும் விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற சிறுவர்கள், ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள். 2024 – 2027 புதிய பொறுப்பாளர்களை திரு. G. முருகையன் அவர்கள், (முன்னாள் தலைவர்) தலைவர் மகளிரணி பொறுப்பாளர்களை திருமதி. M. காயத்ரி அவர்கள், மகளிரணி செயலர் இளைஞரணி பொறுப்பாளர்களை திரு. P. சுவாமிநாதன் அவர்கள். (முன்னாள் செயலாளர்) அறிமுகம் செய்வித்தார்கள்.

விழாவினை நிழற்படம் எடுத்த புகைப்படக் கலைஞர் கார்த்திக் அவர்கள், கட்டிட பாதுகாவலர் சுவாமிநாதன் அவர்கள், டெக்கரேசன் செய்தவர்களுக்கும், புதிய தலைவர் திரு. B. ராமச்சந்திரன் சால்வை அணிவித்து மரியாதை செய்தார்கள். தருமை ஆதீன புலவர். நல்லாசிரியர் திரு. R. செல்வகுமார் அவர்களும், திரு. செந்தில்நாதன் (முதுகலை பணி நிறைவு) அவர்களும் விழாவினை தொகுத்து வழங்கினார்கள். சேவை செம்மல் திரு. T. பிரபாகரன் மேனாள் பொறுப்பாளர் அவர்கள், நல்லாசிரியர் திரு. V. தாயுமானவன், மேனாள் பொறுப்பாளர் கம்பன் பிரிண்டர்ஸ் திரு. T.

பன்னீர்செல்வம் அவர்கள் திரு. R. தியாகராஜன் ஆகியோர் காலையில் கொடியேற்றி நிகழ்ச்சி தொடங்கியது முதல் விழா முடியும் வரை வருகை புரிந்தவர்களை உபசரித்தார்கள். திரு. ராமதாஸ் அவர்கள், திரு. மோகன்குமார் அவர்கள், திரு. நடராஜன் Agri அவர்கள், ஒப்புரவு சந்தா, ஆண்டு சந்தா வசூலித்தார்கள். நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

புதிய பொறுப்பாளர்களின் அலைபேசி எண்கள் :

திரு. B. ராமச்சந்திரன் அவர்கள், தலைவர், **9442860344**, திரு. T. ரவிகுமார் அவர்கள் துணைத்தலைவர் **9787214158**, திரு. S. தில்லைநாயகம் அவர்கள், செயலாளர் **9894986545**, திரு. N. முத்துக்குமரசாமி அவர்கள், பொருளாளர் **7010936251**, திரு. G. பிரதீப் அவர்கள், இணைச்செயலாளர் **9865371172**, திரு. S. சரவணன் அவர்கள், இணைச்செயலாளர் **9786119903**,

மகளிரணி : திருமதி. S. சுகுணாதேவி சபேசன் அவர்கள் தலைவி. **8526630990**, திருமதி. M. விஜயா மதியரசன் அவர்கள் துணைத்தலைவி **9965524870**, திருமதி. S. அகிலாண்டேஸ்வரி இரத்தினகுமார் அவர்கள் செயலாளர் **9443920315**, திருமதி. P. வசந்தி பன்னீர்செல்வம் அவர்கள் பொருளாளர் **9942795435**, திருமதி. G. கார்குழலி ஞானசேகரன் அவர்கள் இணைச்செயலாளர் **9488045436**, திருமதி. G. சுந்தரி கணேசன் அவர்கள் இணைச்செயலாளர் **8124851899**

இளைஞரணி : திரு. M. செல்வமுத்துக்குமார் அவர்கள் தலைவர் **7200193958**, திரு. G. ராமச்சந்திரன் அவர்கள் துணைத்தலைவர் **9442820222**, திரு. B. விசுவநாதன் அவர்கள் செயலர் **9786424408**, திரு. B. கணேஷ்குமார் அவர்கள் பொருளர் **8489252507**, திரு. A. இராமநாதன் அவர்கள் இணைச்செயலாளர் **9443559065**, திரு. G. பிரபாகரன் அவர்கள் இணைச்செயலாளர் **9751971612**.

– தில்லைநாயகம்,

செயலர்.

செல் : **9894986545**

## செம்பொன்னார் கோவில் :

சங்க கூட்டம் குமரன் வடக்கு வீதி திருமதி. உமா ஆறுமுகம் அவர்கள் இல்லத்தில் சங்க உறுப்பினர் திருமதி. மங்களம் அவர்கள் ஏற்றுப் போற்றும் கூட்டமாக நடைபெற்றது. திரு. M.C.K. இராமநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில், திருமதி. மீனா நடனம் இறைவணக்கம் பாடிட, திருமதி. மங்களம் வரவேற்புரை வழங்கிட, சென்ற கூட்ட அறிக்கையை திரு. குரு. முத்துக்குமார் வாசித்திட பொருளர் திரு. M.C. செல்வராஜ் வரவு – செலவு அறிக்கையை வாசித்திட கூட்டம் அவற்றினை ஏற்றது.

சில மாதங்களாக உடல் நலம் குன்றியிருந்த சங்க மேனாள் தலைவரும், மாநில சங்க மேனாள் மண்டலச் செயலரும், இந்நாள் சங்க அமைப்புச் செயலருமான கோ. வடிவேல் பிள்ளை அவர்கள் **26–11–2024** இயற்கை எய்தியமையை முன்னிட்டு அன்னாருக்கு புகழஞ்சலியும், நினைவஞ்சலியும் செலுத்திடும் கூட்டமாக இக்கூட்டம் அமைந்தது.

அன்னாரது இழப்பு சங்கத்திற்கு ஈடு செய்யமுடியாத இழப்பு என்றும், சங்கத்திற்கும், ஒப்புரவு வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணி மிகவும் சிறப்பு வாய்ந்தது என்றும் தலைவர் திரு. MCK. இராமநாதன், பொருளர் திரு. M.C. செல்வராஜ் பிள்ளை, செயலர் திரு. ச. நெடுஞ்செழியன் மற்றும் திரு. வி. வாசன் பிள்ளை, திரு. சபா. வரதராஜன் பிள்ளை, திரு. சூ. ரவிச்சந்திரன் பிள்ளை, திரு. குரு. முத்துக்குமார், திரு. கோ. இராமதாசு பிள்ளை, திரு. இராம. அருள் பிள்ளை, திருமதி. மீனா நடனம், திரு. தாமரை ஜவஹர், திருமதி. ரெத்னாவதி கல்யாணம் ஆகியோர் பேசிட இறுதியாக முன்னாள் மாநில துணைத்தலைவர் திரு. கணபதி நடனம் அவர்கள் புகழஞ்சலி செலுத்தும் பொழுது மறைந்த கோ. வடிவேல் பிள்ளை அவர்கள் செம்பொன் நகருக்கு வந்தது முதல் அவருடனான உறவு நட்பு மற்றும் அன்னாரது சமூக சேவைகள், இனத்திற்கான அவரது பங்களிப்பு, பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள்.

தலைவர் தனது முடிவுரையில் மாநில சங்க செயல்பாடுகள் பற்றியும், மயிலாடுதுறை நகர சங்க ஆண்டு விழா **08–12–2024**–ல் நடைபெற உள்ளது பற்றியும், சங்கத்தால் அளிக்கப்பெறும் **2025** மாதாந்திர நாட்காட்டி விரைவில் அனைவருக்கும் வழங்கப்படும் என்று கூறினார்கள். தொடர்ந்து **2025–ஆம்** ஆண்டிற்கான மாதாந்திர கூட்டத்தை ஏற்றுப் போற்றக்கூடிய உறுப்பினர்களின் பெயரினை பொருளர் பதிவேற்றம் செய்து கொண்டார். கூட்டம் நடத்திய இல்லத்தாரால் வழங்கப்படும் குலுக்கல் முறை பரிசை திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை, திருமதி. வேம்பு பாலசுப்பரமணியமும் பெற்றனர். கூட்டம் நடத்திய இல்லத்தார்க்கு சங்கம் சார்பில் சால்வை அணிவிக்கப் பெற்றது. கூட்டத்தில் **55** பேர் கலந்து கொண்டனர். கூட்டத்தை ஏற்றுப்போற்றிய குடும்பத்தாரால் அனைவர்க்கும் சிறப்பான இரவு சிற்றுண்டி

வழங்கப்பெற்றது. பொருளா் M.C. செல்வராஜ் நன்றி கூறிட கூட்டம் இரவு 8.30 மணியளவில் நிறைவு பெற்றது.

தீா்மானம் :–

கார்குலப் பணியிலும், ஒப்புரவு வளர்ச்சிப் பணியிலும், சமூக நல்லிணக்கச் செயல்களிலும் செல்லும் வகையெல்லாம் ஓயாது உழைத்திட்ட காலஞ்சென்ற கோ. வடிவேல் பிள்ளை அவர்களது ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டி இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்திட கூட்டம் ஏகமனதாக தீா்மானிக்கிறது.

K. இராமநாதன், தலைவர்.

## பரசலூர் :

01–12–2024 அன்று சங்க கூட்டம் நக்கீரர் தெரு தலைவர் இல்லத்தில் தலைவர் திரு.க. கோவிந்தராஜன் தலைமையில் கோ. பானுமதி இறைவணக்கம்பாட திரு. கோவிந்தராஜன் பிள்ளை வரவேற்புரை நிகழ்த்த கூட்டம் துவங்கியது.

செயலர் வீ. கண்ணன் மாதாந்திர அறிக்கையையும், பொருளர் திரு. S.M. விஜய் பிள்ளை நிதிய அறிக்கையையும் திரு. க. கோவிந்தராஜன் பிள்ளை மு.அ. நிதிய அறிக்கையும் வாசிக்க நிதிய சம்மந்தமான பதிவேடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டது.

2024–ம் ஆண்டு, ஆண்டு விழா பரசலூர் பிரதான சாலை, திரு. K. சீனுவாசம் பிள்ளை இல்லத்தில் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

பரசலூர் ஸ்ரீ வீரட்டேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற நான்கு ஞாயிற்றுக்கிழமைகளில் தீர்த்தவாரி நிகழ்ச்சிகளிலும், கடைசி ஞாயிறு அன்று நடைபெற்ற விளக்கு பூஜையிலும் கார்குல மக்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விளக்கு பூஜையில் தருமபுரம் ஆதீனம் 27–வது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

பரசலூர் சங்க உறுப்பினர் M. சாமிநாதன் S. ரேணுகாதேவி தம்பதியினருக்கு திருக்கடையூரில் நடைபெற்ற சஷ்டியப்த பூர்த்தி விழாவில் பரசலூர் கார்காத்தார் சங்க பொறுப்பாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சுவாமிநாதன் – ரேணுகா தேவி தம்பதியினர் தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ 27–வது குருமகா சந்நிதானத்திடம் அருளாசி பெற்றனர்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் இனிப்பு, காரம், காப்பி வழங்கப்பட்டது.

சிறப்பு குலுக்கலுக்கான பரிசு ஜெயக்குமார், V. விஜயலெட்சுமிக்கு முறையே திரு. கோவிந்தராசன் பானுமதி பரிசு பொருட்களை வழங்கினார்கள்.

கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு திரு. ராமலிங்கம், திருமதி. கோ. சித்ரா சால்வை அணிவித்தனர். திருமதி. R. ஈஸ்வரி நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

22–12–2024 அன்று பரசலூர் பிரதானசாலை சங்க மூத்த உறுப்பினர் திரு. K.S. சீனுவாசம் பிள்ளை இல்லத்தில் ஆண்டு விழா கூட்டம் துவங்கியது.

திருமதி. அபிராமி முத்துக்குமரசாமி இறைவணக்கம் பாட திரு. K.S. சீனுவாசம் பிள்ளை சங்க கொடியேற்றிட மகளிர் அணியினர் குத்துவிளக்கு ஏற்றினர். வரவேற்புரையை R. அமிர்தகணேசன் நிகழ்த்திட தலைவர் க. கோவிந்தராசன் தலைமையில் கூட்டம் துவங்கி தலைமை உரை ஆற்றினார்.

செயலர் திரு. வீ. கண்ணன் பிள்ளை ஆண்டு அறிக்கை வாசிக்க, பொருளர் S.M. விஜய் பிள்ளை நிதிய அறிக்கை வாசிக்க சங்கத்தின் ஒப்புதல் பெறப்பட்டது.

பூம்புகார் மேலையூர் சீனுவாசா மேல் நிலைப்பள்ளி ஆசிரியை திருமதி. வி. சிந்தாமணி "பக்தி பரவசம்" தலைப்பில் உரையாற்றத் தொடங்கினார். சிறப்பு விருந்தினருக்கு சித்ரா நடராசன் சால்வை அணிவிக்க ரேணுகா சுவாமி நாதன் நினைவு பரிசை வழங்கினார்கள்.

சிறப்புரையில் பக்தியால் குமர குருபரரின் பெற்றோர்கள் திருச்செந்தூர் முருகனை பிரார்த்தனை செய்ய அதன் பயனாக குமரகுருபரர் பேச்சாற்றல் பெற்றார் என்றும் சகலாவல்லியே என சரஸ்வதி தேவியை புகழ்ந்து பாடல்களை பாடினார். அபிராமிபட்டரின் நிகழ்வுகளையும் விளக்கிக் கூறினார். கொரோனா காலத்தில் எனது சகோதரனுக்காக தில்லை நடராசனை மனம் உருகி சிவபுராணம் பாடினேன். உடல் நலம் பெற்றார் என்று உரையாற்றினார்.

பெற்றோருக்கு பெருமை சேர்ப்பது ஆண்களா ? பெண்களா ? என்ற தலைப்பில் பட்டிமன்றம் S. ரேணுகாதேவி தலைமையில் தொடங்கியது பெண்களே என்ற தலைப்பில் R. சபீதா, V. பிரியா, R. ஈஸ்வரியும், ஆண்களே என்ற தலைப்பில் B. செந்தமிழ்ச்செல்வி, A. ஜெயசுதா, B. அகிலாண்டேஸ்வரி ஆகியோர் தங்களது வாதங்களை எடுத்துக்கூறினார்கள். முடிவில் நடுவர் S. ரேணுகா தேவி அவர்கள் பெற்றோருக்கு பெருமை சேர்ப்பது பெண்களே என்று தீர்ப்பு கூறினார்.

17–12–2016–ல் தொடங்கிய பரசலூர் கார்காத்தார் சங்கம் ஆண்டுதோறும் சென்னை CREW விலிருந்து கல்வி உதவித்தொகையாக இரண்டு லட்சம் ரூபாய் வரை உறுப்பினர்களின் குழந்தைகளுக்காக பெற்றுத்தருகிறது.

30–8–2024 பரசலூர் இளங்கொம்பனையாள் உடனுறை ஸ்ரீ வீரட்டேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற மகாகும்பாபிஷேகம், திருக்கல்யாணம், விளக்கு பூஜை, தட்சசம்ஹார மூர்த்திவைபவங்கள் ஆகியநிகழ்வுகளில் பரசலூர் கார்குலச் சொந்தங்கள் பெருமளவில் கலந்து கொண்டு இறைபணி செய்து வருகின்றனர். அனைத்து நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளும் தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ 27–வது குருமகா சந்நிதானம் அவர்களுக்கு பூரண கும்ப மரியாதை மற்றும் சால்வை அணிவித்தும் அருளாசி பெற்று வருகின்றனர்.

காலை 11–00 மணிக்கு தேநீரும், பகல் 1–30 மணிக்கு அறுசுவை உணவும் வழங்கப்பட்டது.

சிறப்புத்தலைவர் பட்டாமணியார் என்கிற சண்முகம் பிள்ளை (காவல் துறை) இயற்கை எய்தியதற்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பேராசிரியர் V. சிவக்குமார் பிள்ளை அவர்கள் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்.

தலைமையாசிரியர் E. ராமலிங்கம் பிள்ளை நன்றியுரையுடன் ஆண்டு விழா கூட்டம் இனிதே நிறைவேறியது.

– வீ. கண்ணன்,
செயலர்.
Cell : 9894960438

**மணிக்கிராமம் :**

சங்க கூட்டம் 13–12–24 அன்று சங்க செயலாளர் அவர்கள் இல்லத்தில் தலைவர் திரு. G. அன்பழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சங்க கௌரவத்தலைவர் திரு. M. சிங்காரவேலன் அவர்கள் சிவபுராணம் வாசிக்கவும் செயலர் திரு. T. கபிலன் சென்ற மாத அறிக்கை வாசிக்கவும் பொருளாளர் திரு. S. பரமநாதன் வரவு – செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை ஏற்றுக்கொண்டது.

கார்த்திகை மாதத்தில் சிவன்கோவிலில் சோமவாரம் குருமூர்த்தி சுவாமிக்கு அபிஷேக ஆராதனையும் சிறப்பாக செய்து இருந்தார்கள். அவர்களுக்குநன்றிதெரிவிக்கப்பட்டது.உறுப்பினர்கள் அனைவருக்கும் புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. பொங்கல் பண்டிகை விழாவை சிறப்பாக நடத்த முடிவு செய்யப்பட்டது. உறுப்பினர்கள் அனைவருக்கும் இனிப்பு, காரம், காபி வழங்கப்பட்டது. அவர்களுக்கு நன்றி சொல்லப்பட்டது. இறுதியாக பொருளர் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

- T. கபிலன்,
செயலாளர்

**இளந்தோப்பு**

சங்க கூட்டம் 14–12–2024 அன்று சிவன் கோவில் வளாகத்தில் S. சபாநாயகம் அவர்கள் முன்னிலையில் செயலாளர் V. இராஜசேகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதுசமயம், மண்டல செயலர் S. சீனுவாசன் தனது உரையில் 8–12–2024 அன்று மயிலாடுதுறை விமலாம்பிகை திருமண மகாலில் நடைபெற்ற மயிலாடுதுறை கார்காத்தார் சங்க ஆண்டு விழாவிற்கு வருகை தந்த செயலாளர், மற்றும் மயிலாடுதுறை நகர இளைஞரணி துணை அமைப்பாளர் G. மகேஷ் மற்றும் மகளிரணி பொறுப்பாளர் T. உஷா அவர்களையும் வெகுவாக பாராட்டி வாழ்த்தினார்கள்.

கூட்டத்திற்கு வந்திருந்த மகளிரையும் மற்றும் தீபத்திருநாள் விழாவிற்கு வந்திருந்த பக்தர்களுக்கும் பாராட்டும் நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

V. குருநாதன், துணைத்தலைவர் நன்றி உரையுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

C.V. இராஜசேகரன்,
செயலாளர்.
**9444610967**

**80. இராதாநல்லூர் :**

சங்க கூட்டம் 15–12–2024 அன்று சங்க தலைவர் இல்லத்தில் தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் தலைமையில் சங்க பொருளாளர் M. சீனிவாசன் அவர்கள் வரவேற்க கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

உறுப்பினர்களுக்கு டிசம்பர் மாத பிறந்த நாள் மற்றும் திருமண நாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

சங்க உறுப்பினர் ராஜ்கமல் என்பவருக்கு CREW TRUST மூலம் 2024–25 ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பம் பரிந்துரை செய்து அனுப்பிய விபரம் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும்

உதவித்தொகை பெற விருப்பம் உள்ளவர்கள் உரிய ஆவணங்களுடன் தலைவர் அவர்களிடம் கொடுக்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

2025–ம் ஆண்டிற்கான மாதாந்திர நாட்காட்டி அச்சிட்டு விளம்பரதாரர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது. நாட்காட்டி அச்சிட்டு வழங்க பொறுப்பேற்று நல்ல முறையில் செயல்பட்டு வழங்கிய செயலர் இரா. மு.அ. செல்வம் (எ) ராஜா முத்தையா அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

சங்க செயற்குழு உறுப்பினர் இரா. மு.அ. சண்முகநாதன் அவர்களின் புதுமனை புகுவிழாவிற்கு சங்க தலைவர், செயலர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பு செய்தமைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

இளைஞர் அணி Er. A. இரத்தினவேல் சுப்ரமணியன் M.E. அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

T. முத்துக்குமரசாமி.
**9443645646**

## இலையமுதுகூடம் :

சங்க கூட்டமைப்பு கூட்டம் 15–12–2024 அன்று தேவந்தி சிவபாலன் மகளிர் அணி உறுப்பினர் அவர்கள் இல்லத்தில் உறுப்பினர் சிவபாலன் அவர்கள் தலைமையில் இறைவணக்கத்துடன் தொடங்கியது.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொருளர் திரு. சிவகடாட்சம் பிள்ளை அவர்களால் வரவு செலவு கணக்கு படிக்கப்பட்டு ஏற்கப்பட்டது.

நம் சங்க உறுப்பினர் கார்த்திகேயன் மகன் இலட்சுமிபதிக்கு பொறியியல் கல்வி உதவித்தொகை பெற்று தந்தமைக்கு நம் சங்கத்திற்கு நன்றி தெரிவித்ததை அறிந்து நம் சங்க உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலும் உதவித்தொகை பெற்றுத்தந்த மாநில சங்கத்திற்கும் CREW TRUST, மற்றும் உதவித்தொகை பெற ஒத்துழைத்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றி தெரிவித்தும்,

வழக்கம் போல் நம் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் 2025 கார்காத்தார் சங்க கூட்டமைப்பு தினசரி காலண்டர் வழங்கப்பட்டது. காலண்டர் தன் சொந்த செலவில் வழங்கிய திருவெண்காடு சிட்பண்ட் உரிமையாளர் M---DS. கணபதி அவர்களுக்கு நன்றி தெரிவித்தும்,

டிசம்பர் 30–ம் தேதி அனுமந்த ஜெயந்தி விழாவை நம் சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து சிறப்பாக செய்யவும்,

நம் ஊரை சேர்ந்த இதுகாறும் வெளிநாட்டில் இருந்து தற்போது கிராமத்தில் தங்கி உள்ள தெய்வத்திரு. அன்பழகன் பிள்ளை மகன் திரு. பாலு அவர்களை புதிய உறுப்பினராக சேர்த்துக்கொள்ளவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அனைவருக்கும் சிற்றுண்டி மற்றும் தேநீர் வழங்கிய திரு. சிவபாலன் மற்றும் நம் மகளிர் அணி உறுப்பினர் திருமதி. தேவந்தி சிவபாலன் அவர்களுக்கு நன்றி தெரிவித்து நம் சங்க உறுப்பினர் திரு. G. சிவக்குமார் அவர்களால் ஆடை போர்த்தி கௌரவிக்கவும்,

நம் ஊரை சேர்ந்த திரு. R. சுப்ரமணியன் அவர்கள் இயற்கை எய்தியமைக்கும் மௌன அஞ்சலி செலுத்தியும், தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது செயலர் G. சுப்பிரமணியன் அவர்கள் உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

- A. நடனம்,
தலைவர்.

## மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் &தலைச்சங்காடு கார்காத்தார் சங்க மாதாந்திர கூட்டம் 27.12.2024 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது. சங்க உறுப்பினர்களை தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் வரவேற்று பேசிய பின்னர், கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. மனித நேய அறக்கட்டளை, சென்னை மூலம் 2024 – 25 கல்வியாண்டிற்கு, இச்சங்க மாணவ / மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ. 89,000/– பெறப்பட்டதற்கு, இச்சங்கம் CREW Trust சென்னைக்கு மனமார்ந்த நன்றியை பதிவு செய்கின்றது. 2025–26ஆம் ஆண்டிற்குறிய இணைப்பு சந்தா தொகை ரூ. 500/– மட்டும் மாநில சங்கத்திற்கு செலுத்தவும் ஒப்புதல் பெறப்பட்டது.

வழுக்கம்போல் சங்க உறுப்பினர்களுக்கு 2025ஆம் ஆண்டு சங்க தினசரி காலண்டர் வழங்கப்பட்டது. பின்னர் நன்றி கூறப்பட்டு சங்க கூட்டம் நிறைவுற்றது.

பால. இலட்சுமணன், தலைவர்
**94437 83743**

## பூம்புகார் - மேலையூர் :

சங்க கூட்டம் 01–12–2024 அன்று செயலருடைய இல்லத்தில் நடைபெற்றது.

டிசம்பர் 29–ம் தேதி ஞாயிறு அன்று நடக்கவிருக்கும் ஆண்டு விழா சம்பந்தமாக ஆலோசனை செய்து அதற்கான நிதியாக செயல் உறுப்பினர்கள் அனைவரும் ரூபாய் ஆயிரம் செலுத்துவதாக தீர்மானிக்கப்பட்டது.

CREW அறக்கட்டளையில் விண்ணப்பம் செய்த மூன்று மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை கிடைத்ததற்காக அறக்கட்டளைக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் போடப்பட்டது. மேலும் இரண்டு மாணவர்களுக்கான விண்ணப்பம் பெற்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கிய தலைவர் திரு. N. பாண்டியன் அவர்களுக்கு சங்கம் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் பொருளரின் நன்றியுரைக்குப்பின் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- R. வெங்கடேசன்,
பொருளர்.
8886467000

## திருவாரூர்

சங்க கூட்டம் 7–12–2024 அன்று நடைபெற்றது. கிளை சங்கத்தின் துணைத்தலைவர் திரு. முத்துக்குமாரசாமி பிள்ளை தலைமையேற்றும் திரு. தண்டபாணி பிள்ளை, முன்னின்றும் நடத்தி வைத்தார்கள். உறுப்பினர்கள் அனைவரும் கூட்டாக திருமுறை பாராயணம் கடவுள் வணக்கமாய் பாடினார்கள். தலைவர் உரையில் நமது அடுத்த கூட்டம் பொங்கல் விழாவாக நடத்த வேண்டும் என கூறினார்கள். செயலாளர் சோமசுந்தரம் அவர்கள் ஜனவரி மாத கூட்டம் 11–1–2025 அன்று மிகவும் சிறப்புடன் பொங்கல் விழாவாக நடத்துவோம் என்று கூறினார்கள்.

சிவன் இராத்திரி ஆன்மீக பயணம் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடத்த இருப்பதால் அதில் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொண்டார்கள். ஆன்மீக உரையாக திருநல்லம் நடராஜபெருமாள் சிலை வடிக்கப்பட்டதை மிகவும் சிறப்பாக கூறினார்கள். அனைவருக்கும் சங்கம் சார்பில் தேநீர் சிற்றுண்டி வழங்கப்பட்டது. திரு. கண்ணபிரான் அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றி கூறியும் கிளை சங்கத்திற்கு ரூ. 8000 நன்கொடை அளித்த திரு. சித்தார்த்தன் அவர்களுக்கு பாராட்டும் தெரிவித்து கொண்டு கூட்டத்தை முடித்து வைத்தார்கள்.

நன்றி! வணக்கம்!

– அ. சோமசுந்தரம்.

## கும்பகோணம் :

மாதாந்திர கூட்டம் 14– ஆம் தேதி தலைவர் திரு. தி.மா. வைத்தியநாதன் அவர்கள் இல்லத்தில் அவர்கள் தலைமையில் பொருளாளர் ஏ.எஸ். பழனி அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இறைவணக்கம் திரு. ஆனந்தன் அவர்களும் வரவேற்புரை பொருளாளர் ஏ.எஸ். பழனி அவர்களும் மற்றும் தலைமை உரை திரு. தி.மா. வைத்தியநாதன் அவர்களும் செயலாளர் உரை எஸ். விஜயகுமார் அவர்களும் வழங்கினார்கள். அன்றைய தினம் தலைவர் அவர்களின் 80–வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது உறுப்பினர் அனைவருக்கும் விருந்து அளித்து மகிழ்ந்தார்கள். தலைவர் அவர்களுக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது. கூட்டத்தில் டிசம்பர் 29–12–2024 நடைபெற உள்ள பொங்கல் விழா பற்றியும் ஏப்ரல் 06–04–2025 நடத்த உள்ள மங்கல சந்திப்பு பற்றியும் கலந்துரையாடினார்கள்.

உறவுகள் விதி குறித்து குழுத்தலைவர் இளங்கோ @ எம். சாமிநாதன் அவர்கள் கூறினார்கள். நன்றியுரை திரு. பாலகுரு அவர்கள் கூறினார்கள்.

06–04–2025 அன்று மங்கல சந்திப்பு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

மங்கல சந்திப்பு தொடர்புக்கு: MRK. பாண்டியன் 9442013459, S. விஜயகுமார் 9443984770, A.S. பழனி 8870342493.

எஸ். விஜயகுமார்,
செயலாளர்.

## மதுரை

8–12–2024 அன்று செயற்குழு கூட்டம் நடைபெற்றது. தலைவர். முனைவர் K. சிவசுப்பிரமணியம் கடவுள் வாழ்த்து பாடினார். சங்க கூட்டம் செயலாளர் பா. ரவிச்சந்திரன் பொருளாளர் S. முருகன் அவர்கள் தலைமையில் நடந்தது. மாநில துணை தலைவர் S. உமையொருபாகம் மற்றும் துணைச்செயலாளர்கள் S. சுந்தரராஜன், C. கார்த்திகேயன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்

T. ராதாகிருஷ்ணன், R. பசுங்கிளி, மகளிர் அணி தலைவர் U. குமாரிலட்சுமி மகளிர் அணி செயலாளர் M.R. ஜான்சிராணி மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நமது சங்க உறுப்பினர்கள் டாக்டர். திருமதி. லோகாம்பாள், திரு. நாகரத்தினம், திருமதி. சுந்தரத்தம்மாள், திருமதி. சுப்புலெட்சுமி, திரு. கார்த்திக் அவர்களின் மறைவுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும் அறக்கட்டளை உருவாக்கவழிமுறைகள் சிலவற்றை அறக்கட்டளை கமிட்டியின் தலைவர் S. முருகன் எடுத்துரைத்தார்கள். கல்வி உதவிதொகை பெறுவதற்கான விண்ணபங்கள் பரிந்துரை கடிதம் பெற்று சென்றனா் அதன்பின் சங்க ஆண்டு விழா அடுத்த ஆண்டு நடத்துவது சம்மந்தமாக சங்கத்தின் கூட்டத்தில் ஆலோசனைகளை எடுத்துரைத்தார்கள். சங்க பொருளாளர் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- B. ரவிச்சந்திரன், செயலாளர்.

**9443831474**

## திருநெல்வேலி :

08–12–2024 அவசர பொதுக்குழு கூட்டம் திருநெல்வேலி கார்காத்தார் சங்க கட்டிடத்தில் திரு. வெங்கடேசம் பிள்ளை அரங்கத்தில் தலைவர் C. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்தது. முருக இளங்கோ ஜி. சுப்பிரமணியன் கடவுள் வாழ்த்து வரவேற்புரை செயலர் இராமசுப்பிரமணியன் வரவு செலவு கணக்கு பொருளாளர் திரு. ஞானசம்பந்தம் வாசித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2023–24–ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு கரஒலி மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2025–ல் ஆண்டு நடக்கவிருக்கும் நிர்வாகிகள் தேர்தல் சங்க வழக்கு மதுரை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் செயற்குழு உறுப்பினர்களின் முடிவுக்கு விட தீர்மானிக்கப்பட்டது.

செயற்குழு உறுப்பினர்கள் 3 கூட்டத்திற்கு மேல் வராதவர்களை நீக்கிவிட்டு சமுதாய வளர்ச்சிக்கு அக்கறை உள்ள நபர்களையும் கூட்டத்தில் கலந்து கொண்டு சங்க வளர்ச்சி பற்றி ஆலோசனைகளை கூறும் நபர்களை நியமிக்க தீர்மானிக்கப்பட்டது.

நீக்கம் பாபநாசம் பிள்ளை, A. நெல்லையப்பன், கண்ணன் (எ) சண்முகம், கணபதி புதிய செயற்குழு உறுப்பினர்கள் RTS சங்கர், சங்கநாராயணன், G. சுப்பிரமணியன், வீரபத்திரன் பிள்ளை, புதிய செயற்குழு உறுப்பினர்களுக்கு கூட்டத்தில் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

சங்க வளர்ச்சி பற்றியும், ஒற்றுமையுடன் செயல்பட அம்பை ஐ. சுப்பிரமணியன், கூடலரசு, M. மாரியப்பன், P. சுப்பிரமணியன் செந்தில்வேல், பத்மாவதி (மகளிர் அணி தலைவி) சக்திவேல் மற்றும் பலர் பேசினார்கள்.

சங்க விதிமுறைகளை மீறி நடப்பவர்களையும், சங்கத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தும் நபர்களையும் உண்மைக்கு புறம்பாக பொய் கூறுபவர்களையும் கண்டறிந்து 4 வருடங்கள் மகாசபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கி வைக்க தீர்மானிக்கப்பட்டது.

சுமார் 175 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

துணைத்தலைவர் இணைசெயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து கிளை சங்க தலைவர், செயலர், பொருளாளர், மகாசபை உறுப்பினர்களுக்கு கூடலரசு நன்றி கூறி கூட்டம் இனிது முடிவுற்றது. அனைவருக்கும் இரவு டிபன் வழங்கப்பட்டது.

- C. இராமசுப்பிரமணியன், செயலாளர்.

## கோவை :

சங்க கூட்டம் 11–12–24 அன்று நடைபெற்றது. தருமபுர ஆதீனம் 27–வது குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கோவைக்குநகரப் பிரவேசம் செய்தார்கள். திரு. மரபின் முத்தையா அவர்கள், சிறப்பான ஏற்பாட்டை செய்திருந்தார்கள்.


மகா சன்னிதானம் அவர்களை, நம் சங்க உறுப்பினர்கள் அனைவரும்மரியாதைசெய்துவணங்கி வழிபட்டு, ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டோம்.

மகா சன்னிதானம் அவர்களை தருமபுரத்தில் நேரில் சென்று ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள தீர்மானம் செய்தோம். அடுத்த மாதாந்திர கூட்டம் சிங்காநல்லூர் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாடு செய்ய முடிவு எடுக்கப்பட்டது.

திரு. சிவராஜா கோபால் அவர்களும் திரு. வள்ளிநாயகம் அவர்களும் உறுப்பினர்களின் முகவரியை சரி பார்க்கும் பணியை பிப்ரவரி 24 க்குள் நிறைவடைய முயற்சி எடுப்பதாக கூறினார்கள்.

- A. அரியநாயகம், தலைவர்.

# 7-ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்ந்தது
1954

உதிர்ந்தது
02.01.2018

## மெட்ராஸ் என்கிற R.மூர்த்தி பிள்ளை

**உரிமையாளர் மெட்ராஸ் ஆட்டோ ஒர்க்ஸ்**
கச்சேரி ரோடு, மலைக்கோவில், மயிலாடுதுறை.

**மீளாத்துயில் கொண்டு எம்மை, ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரே ?**
**கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து**
**உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர் துளிகளைக் காணிக்கையாக்கிறோம்.**

என்றும் தங்கள் நினைவில் வாழும்

மனைவி : M.பிரேமா

மகன்கள் :
**M.திருமலைராஜன்,** திருமலை ஆட்டோ ஒர்க்ஸ்.
**M.ஜோதிராஜன்,** நிறுவனர், ஜோதி பவுண்டேஷன், மெட்ராஸ் ஆட்டோ ஒர்க்ஸ்.

மருமகள்கள் :
**T.சுகுணாவதி**
**J.கிருபாலெட்சுமி**

பேத்திகள்: **T.பிரியதர்ஷினி, T.காவியா, J.சுபஶ்ரீ**

முகவரி : 12/6, ஆராய தெரு, கூறைநாடு, மயிலாடுதுறை.


JOTHI FOUNDATION
MAYILADUTHURAI

பசியை போக்குவோம் !
மனிதம் காப்போம் !
Reg No: 50/2022

**ஜோதி பவுண்டேஷன்**

தன்னார்வ தொண்டு நிறுவனம்

TAX EXEMPTED U/S 2A(1)(AC)(III) (URN : AADTJ8052E22CHO2) AND U/S 80G(5)(III) (URN : AADTJ8052E22CHO1) OF THE INCOME TAX ACT.1961

**செல்: 97880 42324**
கச்சேரி ரோடு, (மலைக்கோயில்), மயிலாடுதுறை – 609001.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
10–01–1940

மறைவு :
28–12–2023

கடலூர் மாவட்டம் புவனகிரி வட்டம், அம்பாபுரம் கிராமம்
சாமிநாத பிள்ளை அவர்களின் மகன் S. செல்வவிநாயகம்
அவர்களின் மனைவியும் எங்களது அன்னையுமான
**S. வசந்தா** அவர்கள் இயற்கை எய்தினார்கள்.

தங்கள் நினைவில் வாழும்

கணவர் – **S. செல்வவிநாயகம்**

மூத்த மகன் – **S. திருமாவளவன்** – **A. மதுராந்தகி**
**S. சந்தோஷ், S. சரண்யா**

இளைய மகன் – **S. திருமாறன்** – **P. செல்வகுமாரி**
**T. சிவஸ்ரீ, T. நிரஞ்சன்**

மகள் – **உமா ராணி** மருமகன் – **P. பரமசிவம்**
பெயரன் – P. **கௌதம்**
**G. வனிதா, G. துருவன், G. யாழ்நன்**

# நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

மண்ணுலகிற்கு
11-11-1942



விண்ணுலகிற்கு
08-01-2020

நாகை மாவட்டம் மயிலாடுதுறை தாலுக்கா உளுந்துகுப்பை
தெய்வத்திரு **முத்தையா பிள்ளை - செல்லம்** அவர்களின் புதல்வரும்
**கிராம கார்காத்தார் சங்க தலைவரும்**
காலம் சென்ற காலம் சென்ற திருமதி **ராஜேஸ்வரி** அவர்களின் கணவருமான

## திரு M. பாலன் பிள்ளை

(Retd. Assistant Executive Engineer - Agriculture Dept.)

அவர்களுக்கு

## ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

நாள் 08.01.2025

**குடும்பத்தினர்**


**RAMS COMPUTECH**
Banking & IT Consumables






Send "KK25" to 9444639348 & get your smartphone protected with Ai

Our team will revert between 10am to 6pm on weekdays

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
11–09–1951

மறைவு :
04–01–2024

## தெய்வத்திரு. S. மாணிக்கம் பிள்ளை

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயலாளர் (ஓய்வு)

*எங்கள் வாழ்வின் வசந்தமாய் ! !*
*உண்மையின் உருவமாய் ! !*
*உழைப்பின் சிகரமாய் ! !*
*எளிமையின் வடிவமாய் ! !*
*நட்பின் இலக்கணமாய் ! !*
*பாசத்தின் உச்சமாய் ! !*

*அப்பா என்ற சொல்லுக்கு அர்த்தமாய் ! !*
*வாழ்ந்து மறைந்த உங்கள் நினைவுகள் மட்டும் இன்று துணையாய் ! !*

என்றும் உங்கள் நினைவோடு வாழும்

**மனைவி : M. செல்வி**

**மகள் : M. ஆர்த்தி**

**மருமகன் : P. முத்துகுமரன்**

**மகள் : M. காவியா**

**மருமகன் : M. வேணுகோபால்**


**பெயரன்கள் : M. விஷ்ணு, M. ரித்திக்**

**பெயர்த்தி : V. லக்ஷயா,**

மற்றும் **உறவினர்களும், நண்பர்களும்**

39, கணபதி நகர், 2nd Cross, ஜெயங்கொண்டம் – 621802.
செல் : 9788780773

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் :
01.07.1947

மறைவு :
10.09.2024

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், நாஞ்சலூர் கிராமம், தெய்வத்திரு. தெய்வசிகாமணி பிள்ளை – தெய்வத்திரு. தெ. நாகம்மாள் ஆகியோரின் புதல்வரும், நாஞ்சலூர் நலமுடன் திருமதி மு. ரேணுகா தேவி அவர்களின் கணவரும், எங்களது தந்தையுமான

## தெ. முருகேசன் பிள்ளை அவர்கள்

1975களில் வேளாண் தொழிலை சிறப்பாக செய்து தனது வாழ்வில் பல குடும்பங்களுக்கு பயனளிக்கும் வகையில் விவசாயத்தில் சிறப்பாக ஈடுபட்டவர். எங்களை விட்டு 10.09.2024 அன்று வைகுந்த பதவி அடைந்தார்கள். அவர்கள் வகுத்த பாதையில் அவர்கள் நினைவுகளுடன்.

**மகள்**

**ச. சுதா**

**மு. சரவணன்**

**ச. தினேஷ் ஆதித்யா**

**ச. சர்வேஷ்**

**மகன்**

**மு. பாலசுப்ரமணியன் (எ) பாலாஜி**

**பா. தரணி**

**பா. ஜெய்ஆகாஷ்**

#79, VKR Nagar, Lalpuram Post, Chidambaram - 608 602.
Mobile : 94876 25024, 91590 43445

# கண்ணீர் அஞ்சலி



பூர்வீகம் பெருந்தோட்டம், தெய்வத்திரு. ரத்தினம் பிள்ளை
அவர்களின் துணைவியாரும் எங்களது தாயாருமாகிய

## திருமதி **ருக்குமணி அம்மாள்** அவர்கள்

21.12.2024 சனிக்கிழமையன்று காலை 11.30 மணியளவில் திருவிழந்தூரில் (வயது 104) இறைவனடி சேர்ந்தார்கள். எங்களது துயரத்தில் பங்கேற்று ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**மகன்கள் - மருமகள்கள்**
R. பாலகுரு - சுந்தராம்பாள்
R. கல்யாணசுந்தரம் - சுசீலா
R. விஜயகுமாரன் - கமலவல்லி

**பெயரன், பெயர்த்திகள்**
வள்ளி - சண்முகம்
கலைவாணி - ராஜரத்தினம் (Late)
ஆர்த்தி - ராஜேஷ்
ஐஸ்வர்யா - அருண்குமார்

**கொள்ளுப்பேரன், பெயர்த்திகள்**
S. குமரன் - தனஸ்ரீ
R. மதுவந்த், R. தியானேஷ்,
R.K. பவித்ரா, R.K. ஹரிணி, A. சாய்ஆருத்ரா

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் :
ஜுலை 1929




மறைவு :
21–11–2024

## திருமதி. தங்கபாப்பு

சீர்காழி தாலுக்கா, கன்னியாக்குடி கிராமம் அமரர் திரு. N. வள்ளல்நாதன், ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி நடுநிலைப்பள்ளி திருநாறையூரில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஆசிரியரின் மனைவி **வ. தங்கபாப்பு** அவர்கள் 21–11–2024 மாலை 6.00 மணிக்கு சிவலோக பதவி அடைந்தார்கள்.

இவர்களின் அருளும் ஆசியும் வழிகாட்டுதலையும் நாடும்

| | |
|---|---|
| **மகள்:** | **V. திரிபுரசுந்தரி** – சென்னை (வண்டலூர்) |
| **மகன்கள் :** | **Dr. V. நடராஜன்** M.A.,M.Com.,M.Phil., Phd – மயிலாடுதுறை |
| | **V. சிவபுண்ணியம்** D.E.E.E. – பெங்களூரு. |
| **மருமகன் :** | **R. வேதரத்தினம்** B.Sc – சித்தர்காடு, சென்னை. |
| **மருமகள்கள் :** | **N. ஜெயந்தி** B.A. ஆசிரியர் V.A.P. School, சீர்காழி. |
| | **S. பரிமளா** B.Sc ஆசிரியர் – பெங்களூரு |

மற்றும்

**பேரன்கள், பேத்திகள், கொள்ளு பேரன்கள், கொள்ளு பேத்திகள்.**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
30–08–1942

மறைவு :
01–01–2023

தெய்வத்திருமதி **S. சுப்புலெட்சுமி**

(கணவர் தெய்வத்திரு M.S. சுப்பிரமணியன், திருநெல்வேலி டவுண்)

**அமைதியின் உருவமாகவும்**
**பண்பின் இருப்பிடமாகவும்**
**பாசத்தின் உறைவிடமாகவும் இருந்த**
**தாங்கள் இந்த மண்ணுலகில் இருந்து மறைந்தாலும் தங்கள் நினைவுகள்**
**என்றும் எங்கள் இதயங்களில் இருந்து மறைவதில்லை.**

என்றும் உங்கள் நினைவில் வாழும்

மகன்கள்

**S. சோமசுந்தரம்,** திருச்சி
**M.S. லெட்சுமணன்,** திருச்சி
**S. பாலமுருகன்,** திருநெல்வேலி டவுண்
**S. சரவணன்,** மதுரை

மருமகள்கள்

**S. வடிவாம்பாள்**
**L. பிரசன்ன தேவி**
**B. கோமதி**
**S. ஸ்ரீசக்தி**

மற்றும்

**பெயரன்கள், பெயர்த்திகள், கொள்ளு பெயரன், பெயர்த்தி.**




SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM
SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

# WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

## CUT DOWN YOUR ELECTRICITY COST

**MARUTHI POWER CONTROL SYSTEM**

**CALL US @ 9841828077**

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com



S.SELVAKUMAR - C.E.O

**Posted at Pathrikachanel, Egmore**
**RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027**
**Date of Publication : 15th of Every Month** **15th / 16th January 2025**

CHOZHA HOTELS

# Hotel Kanakabhishegam
## First Hotel From The Temple




**We extend our warmest wishes for a year filled with joy, prosperity, and countless blessings. May this New Year bring new beginnings, endless opportunities, and cherished moments for you and your loved ones. We look forward to welcoming you in 2025, offering you comfort, warmth, and the closest proximity to the divine blessings of the temple. Here's to a fabulous year ahead, and we can't wait to be a part of your special moments!**

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**